V.—GOVERNMENT BILL.

THE MADRAS PANCHAYATS BILL, 1958.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: Sir, I beg leave to introduce the Madras Panchayats Bill [a], 1958 and move—

'That the Bill be taken into consideration'.

Hon. Members know that this is the fourth of a series of Bills which I have had the privilege to submit for the consideration of this House at this session. Two more Bills are still to come, and I hope to be able to introduce them before the end of this year. All these six Bills are inter-related and based on an integrated approach to the problem of reform of the entire organization of Local Administration in this State.

Needless to say I am new to my office, and the burden of finding a solution to these complex problems would have, in the ordinary course, proved too great for me. My task has been made very easy by the goodwill and co-operation of many members of all parties in this House, as well as the other House. The Members of the Joint Committee of the Legislature which was set up last year by a resolution of both the Houses, devoted their time and labour unstintingly to the task of anaysing the provisional proposals of Government which I had placed before the Legislature in a White Paper. As a result of their prolonged deliberations, the main frame work of the reform scheme was confirmed, and the detailed proposals were clarified, amplified and modified where necessary. In one important respect the Committee decided to make a radical overhaul of the White Paper proposals—I refer to the scheme of allocation of financial resources. If I may quote their own words the Committee took the view that the White Paper proposals about financial resources were "incomplete, inadequate and, in certain respects unsuitable also". The Committe did not content itself with criticism; it proceeded to set up a sub-committee to study the subject afresh and formulate a completed scheme which the Committee could accept as adequate and suitable. The onerous task was undertaken by my friend, the Leader of the Opposition, to whom, as Chairman of the Local Finance Sub-Committee. I must express my special gratitude for solving the financial problem in a manner which commanded the unanimous acceptance of the Committee. The Report of this Sub-Committee has been printed and made available to hon. Members. So also the entire record of the proceedings of the Legislature Committee, together with the papers which were considered by that Committee, have been printed and made available to hon. Members.

All the conclusions reached by the Legislature Committee were accepted by the Government, and a draft Bill was prepared and placed before the Committee. The Committee considered that draft Bill clause by clause and took decisions regarding the changes to

[a] Published in the *Fort St George Gazette* Extraordinary, dated 22nd September 1958.

[Srimathi Lourdhammal Simon] [22nd September 1958

be made in the draft. The draft which we originally prepared was designed to repeal the Madras District Boards Act, 1920, and to amend the Madras Village Panchayats Act, 1950. But the Committee took the view that an Amending Bill would not be satisfactory and that a self-contained Bill, which would be a substitute for both the Acts (the Panchayats Act as well as the District Boards Act) should be prepared. The Bill which I am now introducing has been prepared afresh on this basis. That is why, in its present form, the Bill consists of as many as 198 clauses. Hon. Members need not, however, be deterred by its length. For the greater part of the Bill consists, as it necessarily must, of simple reproduction of the provisions of the two Acts which are now to be repealed.

At this stage, I shall not take up the time of the House with a detailed exposition of all the changes which are embodied in this Bill. It is my duty, however, to present a broad picture of the main features of the reform scheme which I am inviting the House to accept. I may describe this Bill as one designed to give effect to a comprehensive scheme of reform of the present system of Local Administration in the rural areas of the State. The main features of the reform scheme may be grouped under six items—

The first item of this reform scheme consists in the abolition of District Boards and their replacement by Panchayat Unions. We have to-day 11 District Boards in the State (at the rate of one for every district except Madras and Kanyakumari). When this Bill becomes law, we shall proceed to constitute Panchayat Union Councils at the rate of one for every Development Block. By the second day of October 1961, the target date specified in the Bill, we shall have constituted some 358 Panchayat Union Councils. The Bill provides for an orderly transference of functions and powers from District Boards to Panchayat Union Councils.

The second item of this reform scheme may be described as the establishment of complete coverage of all villages by Panchayats. When this Bill becomes law, we shall proceed, on a systematic programme, to establish a Panchayat in every village where none exists at present. This process will be completed well in advance of the target date—2nd October 1961.

The third item of this reform scheme relates to the mode of constitution of Panchayat Union Councils. At present, as hon. Members know, there is no connection at all, of an organizational nature, between the District Board and the Panchayats. The members of each body are chosen by a process which has nothing to do with the other. We propose to change this when District Boards are replaced by Panchayat Union Councils. The Bill provides that every Panchayat should elect a representative to the Panchayat Union Council. In this way we seek to ensure that the Panchayat Union Council regards itself and is regarded by the

22nd September 1958] [Srimathi Lourdhammal Simon]

Panchayats, as a Co-operative association of the Panchayats themselves. The Panchayat Union Councillors will each, individually, form a human link between the Panchayat and the Panchayat Union Council and thereby promote mutual understanding and harmonious working of what are only different parts of a single Panchayat Organization. Just as the Government of India and the State Governments constitute different parts of the machinery set up by our Constitution for the executive administration of all the affairs of the Indian Union, so also, the Panchayats and the Panchayat Union Council will be different parts of the machinery of local-self-government in every Development Block. It is this machinery which we seek to set up during the next two or three years on the basis of the law which I am now inviting the Legislature to enact.

The fourth item of this reform scheme consists in the delimitation of the functions of the Panchayats and Panchayat Union Councils. There is, under present law, a considerable measure of overlap between the functions allotted to Panchayats under the Madras Village Panchayats Act, 1950, and the functions allotted to District Boards under the Madras District Boards Act, 1920. When this Bill becomes law this overlap will be removed. The respective spheres of responsibility of the Panchayat and the Panchayat Union Council will be clearly demarcated and separated from one another. Each will, therefore, be enabled to concentrate on discharging its own responsibility in the most efficient manner possible. Incidentally such a clear-cut demarcation of functions has been very helpful in effecting the allocation of financial resources in a satisfactory manner.

In the main, the pool of functions which are at present allotted to District Boards and Panchayats will be the same as those which, under this Bill, we propose to allot to Panchayat Union Council and Panchayats. To this general statement, however, there are some important exceptions to which I must invite the attention of the House. There are a few functions which are at present performed by District Boards and which we do *not* propose to entrust to Panchayat Union Councils. One is the maintenance of High Schools. It is proposed to make other arrangements for the future management of District Board High Schools; the nature of which will be explained to the House at a later stage. At present there is an element of divided responsibility about major district Roads and hospitals, some being looked after by District Board and others directly by the State Government. We are now providing that Government should accept undivided responsibility for them.

As against these transfers from the local authority to Government we propose to make two major transfers from the Government to local authority. One relates to elementary schools. At present about one half of elementary education is provided in rural areas by district board schools and the other half by aided

[Srimathi Lourdhammal Simon] [22nd September 1958
private schools which are financed by the Government. There are various difficulties which arise out of this arrangement and which stand in the way of planning and executing local programmes for universalization of primary education on an economical and efficient basis. When this Bill becomes law, the entire responsibility for providing elementary education for all children on a free and compulsory basis will devolve on Panchayat Union Councils, including the responsibility for financing aided private elementary schools in their jurisdiction.

The other major transfer from Government to local authority relates to the implementation of the National Extension Service Scheme of Community Development. We have reached a stage in the implementation of this scheme, when it is necessary and proper that responsibility therefor should devolve on Panchayat Union Councils. The Bill empowers the Government to entrust this responsibility in every Development Block to the Panchayat Union Council, with its consent, and subject to agreed terms and conditions.

I now turn to the important question of allocation of financial resources, which is the fifth item of our six point reform scheme. The net result of the recommendations made by the Local Finance Sub-Committee, which formed the basis of the financial clauses of this Bill, is that we are now planning to secure that all the Panchayat Union Councils and the Panchayats will be able to raise and spend on what may be called the " Municipal Services " of the Development Block, a sum representing approximately six rupees per head of population per annum. Out of this sum, 3½ rupees will be ear-marked in an Education Fund of the Panchayat Union for maintaining and developing Elementary Education facilities and certain other educational purposes. Out of the remaining allotment of 2½ rupees per head per annum, approximately one half will be ear-marked in a General Fund of the Panchayat Union and utilised for the maintenance of Roads, Health Protection and Medical Relief, Maternity and Child Welfare Services. The other half of 2½ rupees per head per annum would be available to the Village Panchayats for Village Roads, Village Water-Supply, Drainage, Sanitation and Lighting Services. The Local Finance Sub-Committee has computed that when these targets are attained, the level of expenditure on all services in the rural areas of the State will be between 4½ crores and 5 crores per annum higher than it is at present. I may add that these targets of expenditure are limited what I have referred to as Municipal Services. The financial arrangement for such services as Agriculture, Animal Husbandry, and Village Industries will constitute separate additions to the figures which I have mentioned.

In order to provide resources of the order of six rupees per head of population, certain limitations at present imposed on local taxation powers under the present Act are now proposed to be relaxed or removed. The provisions relating to the levy of cesses are consolidated and simplified. The obligation of Government

22nd September 1958] [Srimathi Lourdhammal Simon]

to provide grants is proposed to be defined in precise terms. One important proposal which arises out of the proposed devolution of financial liability in respect of aided private elementary schools has been described in the Bill as "Land Revenue Assignment". It is proposed that approximately one half of the land revenue collected in the State should be assigned in favour of the Education Fund of Panchayat Union Councils; and so distributed that every Panchayat Union Council will get one rupee per head of population in the block. In addition the Government is required to provide a Local Education Grant covering a specified proportion of educational expenditure incurred in excess of this land revenue assignment. In fixing the proportion to be borne by Government, provision is made for taking into account differences in the capacity of different Development Blocks to raise resources by local taxation. Again, the Bill makes a novel departure in respect of the basis of settlement of certain other Government grants. Whereas it is customary to provide for Government grants to match specified proportion of expenditure of certain categories, it is proposed in this Bill to make Government grants to match increased resources raised locally. There is thus a Local Cess Surcharge Matching Grant for the Panchayat Union and a Village House-tax Matching Grant for Village Panchayats.

In these ways a real effort has been made to evolve a system of allocation of resources which is closely correlated to the allocation of functions and based on a careful estimate of requirements.

I shall now turn to the last (but, by no means, the least important) of the various items of our reform scheme. Any system of administration depends for its success on the availability of adequate number of properly trained and disciplined personnel in organized Service Establishments. If there is one factor more than any other, which in the past handicapped the District Boards in comparison with other local authorities, it is the absence of such Service Establishments. We now hope to be able to remedy this defect. Thanks to the initative of the Planning Commission and the financial assistance of the Government of India we have been organizing such service establishments under the National Extension Service Scheme. They are specially adapted to meet the varied requirements of development blocks. When the Bill 10 30 becomes law, it is intended that the services of these establish- a.m. ments should be made available to the Panchayat Union Councils, free of charge to Panchayat Union Funds.

I have now concluded my survey of the main features of the Reform Scheme embodied in this Bill. Let me recapitulate.

First, we shall replace the 11 District Boards of this State by some 358 Panchayat Union Councils. We shall endeavour to do this within the target date of 2nd October 1961.

Secondly, well in advance of this target date, we shall ensure that every village in this State has its own Panchayat.

[Srimathi Lourdhammal Simon] [22nd September 1958

Thirdly, we shall establish a new method of constituting these Panchayat Union Councils with elected representatives of the Panchayats in each block so that the Panchayat Union Councils may function as co-operative associations of Panchayats.

Fourthly, we shall resettle the functions allotted to the Panchayat Union Council and to the Panchayats so that there shall be no overlap between them. We shall secure that full responsibility is devolved on Panchayat Union Councils over the whole field of elementary education as well as in the varied development activities which are comprised in the National Extension Service Scheme of Community Development.

Fifthly, we shall resettle and enlarge the financial resources of Panchayat Union Councils and Panchayats and allocate to these bodies resources which will be truly commensurate with the functions allotted to them. Finally, we shall equip the Panchayat Union Councils with trained service establishments which are organized under the National Extension Service Scheme of Community Development.

May I recall that this Bill, which I am presenting on behalf of the Government, is not merely a Government Bill? It is a Bill which has been evolved by the co-operative effort, extending over nearly a year, of the representatives of all the parties in this House and the other House. I move, Sir, that this Bill be taken into consideration.

Sri K. Ramachandran : இந்த மசோதா மிகவும் முக்கியமானது. ஆகவே அமைச்சர் அவர்களுடைய இந்த மசோதா சம்பந்தப்பட்ட பேச்சை கனம் அங்கத்தினர்களுக்கு சர்குலேட் செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

Mr. Speaker : The hon. Member wants a copy of the speech to be circulated for the benefit of hon. Members.

The Hon. Srimathi Lourdhammal Simon : It will be done tomorrow.

Sri K. R. Nallasivam : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். இந்த பஞ்சாயத்து மசோதா சம்பந்தமாக எதுவும் தமிழில் கொடுக்கப்படவில்லை. வெள்ளை அறிக்கையும் கொடுக்கப்படவில்லை. கிராம சம்பந்தமான இந்த மசோதாவின் விவாதத்தில் கிராம மக்களுடைய பிரதிநிதிகள் எல்லோரும் பங்கு கொள்வதற்கு சுருக்கமாகவாவது எல்லா விஷயங்களையும் தமிழில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

Mr. Speaker : இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால் நான் "அவுட் ஆப் ஆர்டர்" பண்ணவேண்டியதுதான். நீங்கள் சொன்னது ஒரு யோசனை.

Sri K. R. Nallasivam : எல்லாப் பிரதிநிதிகளுடைய சௌகரியத்தையும் உத்தேசித்து தமிழில் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்?

Mr. Speaker : The Hon. Minister will consider that.

Now, there are four amendments of a general nature given notice of by Mr. A. Govindasamy, Mr. Selvaraj, Mr. Palanisami and Mr. Srinivasa Iyer. Mr. Palanisami's amendment is more

22nd September 1958] [Mr. Speaker]

comprehensive in that it fixes a date by which the Select Committee should submit its report, viz., 30th September. But he is not in his place. Mr. Govindasami may move his amendment.

SRI A. GOVINDASAMY : Sir, I move :

"That the Madras Panchayats Bill, 1958, be referred to a Joint Select Committee of both the Houses consisting of . . . Members from the Assembly and . . . Members from the Council."

SRI S. M. ANNAMALAI : I second the amendment.

MR. SPEAKER : The motion and the amendment are before the House for discussion. I want one clarification. We have four days allotted for discussion on this Bill. This Bill contains 198 clauses and two schedules. I have got with me 315 amendments including about 30 from the Government themselves. I wonder if I could limit the general discussion to one day and take up the Bill clause by clause on the remaining three days. If Members want the general discussion to go on for two days, I leave it to them to decide. Only last week, we took two days to finish consideration of forty clauses in the Agricultural Income-tax Bill. Unless Members cut short their speeches, we cannot finish general discussion in one day or even in two days. What does the Hon. Leader of the House say?

THE HON. SRI C. SUBRAMANIAM : We are in the hands of the Opposition.

SRI V. K. RAMASAMY MUDALIYAR : We must have at least two days for general discussion.

MR. SPEAKER : I have no objection. I understand that the Hon. Minister for Finance might intervene in the discussion on the Bill. He may do so at any time he likes. The Hon. Minister for Local Administration will reply tomorrow afternoon at 1 p.m. Will half an hour do for reply?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Yes, Sir.

MR. SPEAKER : I shall limit the time for each Member to ten minutes for the time being.

*SRI V. K. KOTHANDARAMAN : தயவுசெய்து இந்த பஞ்சாயத்து மசோதா மிகவும் முக்கியமான மசோதா ஆகையால் இரண்டு மூன்று நாளைக்கு மேலாகப் பொது விவாதத்திற்கு அனுமதி அளிக்க வேண்டும்.

MR. SPEAKER : பொது விவாதம் இரண்டு நாட்கள் நடக்கும் என்று சொல்லிவிட்டேன். அது முடிவாகிவிட்டதே. எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதை சபை ஒப்புக்கொண்டுவிட்டது

*SRI V. K. KOTHANDARAMAN : இரண்டு நாட்கள் போதாது என்றுதான் சொல்கிறேன். இதில் பேச விரும்புகிற எல்லா அங்கத்தினர்களுக்கும் பேச சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். அதோடு இந்த மசோதா சம்பந்தமாக தமிழிலேயே எல்லா விஷயங்களையும் கொடுக்க வேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : தமிழில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

[22nd September 1958

* **Sri V. K. KOTHANDARAMAN:** தமிழில் அச்சடித்துக் கொடுப்பதற்குள் இங்கே விவாதம் முடிந்துவிடுகிறது. முதலில் தமிழில் கொடுத்துவிட்டால் படித்துவிட்டு அதிகமான திருத்தங்களைக் கொடுத்து தொந்தரவு செய்யப்போகிறார்களோ என்பதற்காக இப்படிச் செய்கிறார்களோ என்னவோ. ஆங்கிலத்தில் கொடுப்பதை வேண்டுமானால் கடைசியில் கொடுக்கலாம். முதலில் தமிழில் கொடுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

Mr. SPEAKER: தமிழில் கொடுக்கப்படும் இரண்டு நாட்கள் விவாதம் நடக்கும். முதலில் திருத்தத்தைப் பிரேரித்திருக்கிற ஸ்ரீ கோவிந்தசாமி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

* **Sri A. GOVINDASAMY:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்தப் பஞ்சாயத்து மசோதா அவசரம் அவசரமாகக் கொண்டுவரப்பட்டிருப்பதாக நான் கருதுகின்றேன். இந்தப் பஞ்சாயத்து மசோதாவை இன்னும் கொஞ்சம் ஆர அமர சிந்தித்துக் குறைபாடுகளை நீக்கி நல்ல முறையில் கொண்டுவந்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் இப்போது நான் கொடுத்திருக்கிற திருத்தத்திற்கு அவசியம் இருக்காது. ஏற்கெனவே இது சம்பந்தமாக வெள்ளை அறிக்கை சமர்ப்பித்து விவாதித்திருக்கிறோம். இப்போது ஒரு பொறுக்குக் கமிட்டி அவசியமா என்ற கேள்வி சர்க்கார் தரப்பிலிருந்து எழக்கூடும். ஆனால் அந்தப் பரிசீலனைக்குப் பிறகும் சில குறைபாடுகள் இருக்கின்றன என்ற காரணத்
10-40 a.m. தினால் இருக்கிற குறைபாடுகளை நீக்கிகொண்டு வருகிற சட்டத்தை நல்லதொரு சட்டமாகக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான் மீண்டும் இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்கிற என்னுடைய திருத்தத்தை வலியுறுத்திச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

(Deputy Speaker in the Chair.)

உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும் ஜனத் தொகை உற்பத்தியைக் குறைப்பதற்காகவும் இந்தச் சட்டம் கொண்டுவரப்படுவதாக மசோதாவில் ஆரம்பத்திலேயே சொல்லப்படுகிறது. "........ to keep pace with the growth of population and to keep the growth of population under control. . . . ." என்று மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. ஜனத் தொகை உற்பத்தியைக் குறைப்பதற்கு குடும்பக் கட்டுப்பாடு இருக்கிறது. குடும்பக் கட்டுப்பாட்டை கவனிப்பதற்கு சுகாதார மந்திரி இருக்கிறார். ஆனால், கிராம முன்னேற்றத்திற்கும் உணவுப் பொருள் உற்பத்திப் பெருக்கிற்கும் கிராம சுயாட்சி ஏற்படவேண்டும் என்ற நல்ல கருத்தோடு இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருந்தாலும், இந்த மசோதா பஞ்சாயத்துகளை நடத்தக்கூடியவர்களுக்கு முழு அதிகாரம் கொடுக்கவில்லை. மசோதாவின்படி பஞ்சாயத்து சபைகள் அவ்வாறுதான் அமையும். பஞ்சாயத்துக்களை நடத்துவது சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் அனைத்தையும் ஒரு எக்ஸிக்யூடிவ் ஆபீசரிடம் ஒப்படைப்பதில் பயனில்லை. "கிராம சுயாட்சி" என்று சொல்லிக்கொண்டு அதிகாரிகள் கையில்தான் பஞ்சாயத்துக்கள் சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரங்களையும் ஒப்படைக்கிறோம். காங்கிரஸ் ஆட்சிக்கு முன்பு அதிகாரிகள் கையில் அதிக அதிகாரம் இருந்தது என்று காங்கிரஸ்காரர்களால் குறை சொல்லப்பட்டது. கிராம சுயாட்சி இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஜில்லா போர்டுகள் அமைக்கப்பட்டன. அந்த ஸ்தாபனங்கள் இதுவரையில் இருந்துவந்தன. ஜில்லா போர்டு நடத்துகிற முறையில் பல தவறுகள் ஏற்படுகின்றன என்று சொல்லிவிட்டு மீண்டும் இத்தகைய பஞ்சாயத்துக்களைக் கொண்டுவந்து பஞ்சாயத்து அதிகாரங்கள் அனைத்தையும் எக்ஸிக்யூடிவ் அதிகாரிகளிடம் ஒப்படைப்பதில் பயனில்லை என்பதுதான் என் கருத்து. பஞ்சாயத்துக் கவுன்சில்களை அமைக்கப்படும் போதும், அதிகாரங்கள் அனைத்தும் கமிஷனரிடம் ஒப்படைக்கப்படுகிறது. ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்கள் சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரங்களும் ஜில்லா கலெக்டர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. பஞ்சாயத்து சபைகள் சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரங்களும் எக்ஸிக்யூடிவ் ஆபீசர்களிடம் ஒப்

THE MADRAS PANCHAYATS BILL, 1958 447

படைக்கப்படுகின்றன. பஞ்சாயத்து யூனியன் சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் பூராவும் கமிஷனரிடம் ஒப்படைக்கப்படுகின்றன. இம்மாதிரியாக ஸ்தல ஸ்தாபன சபைகளின் அதிகாரங்கள் பூராவும் அதிகாரிகள் கைகளில் குவிகின்றன. இப்படி இருந்தால், ஜனநாயக ரீதியில் வோட்டுப் பெற்று இந்த சபைகளுக்கு வரும் மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்கு நல்ல காரியங்களை செய்வதற்குரிய அதிகாரங்கள் இல்லாதவர்களாக இருப்பார்கள். எங்கே பார்த்தாலும் இவ்வாறு அதிகாரிகள் கையில் அதிகாரங்களைக் குவிப்பதிலுள்ள ரகசியம் எனக்குப் புரியவில்லை. அதிகாரிகள் கைகளில் எல்லா அதிகாரங்களும் குவிக்கப்படுவதை சற்று சிந்தித்துப் பார்த்தால் எல்லாத் தரப்பினரும் எதிர்ப்பார்கள். எக்ஸிக்யூடிவ் ஆபீசர்கள், கமிஷனர்கள் முதலிய அதிகாரிகள் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் கீழ் பணியாற்றும் செயலாளர்களாக இருக்க வேண்டும் என்றும், அந்த அளவிற்குத்தான் அவர்களிடம் அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்றும் இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

500-க்குக் குறையாத ஜனத்தொகை உள்ள எல்லா கிராமங்களுக்கும் பஞ்சாயத்து சபைகள் அமைக்கப்பட வேண்டுமென்ற நல்ல நோக்கம் ஆட்சியாளர்களிடம் இருந்தாலும், இதுவரையில், 1,000—2,000 ஜனத்தொகை உள்ள பல கிராமங்களுக்கு பஞ்சாயத்து சபைகள் அமைக்கப்படவில்லை. ப்ளாக் அபிவிருத்தித் திட்டங்கள் நடக்கும் இடங்களிலெல்லாம் பஞ்சாயத்து யூனியன்களை அமைக்கப்போவதாக ஆட்சியாளர்கள் சொல்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் கூட எல்லா ப்ளாக்குகளிலும் பஞ்சாயத்து யூனியன்கள் வராதுபோல் தோன்றுகிறது. இந்த மசோதாவில் "ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீஸன்ஸ்" பகுதியைப் பார்க்கும்போது அவ்வாறு தோன்றுகிறது. ஏனென்றால், அப்படிப்பட்ட கருத்து அந்தப் பகுதியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தேவைப்பட்டால் இக்காரியம் மேலும் ஒரு ஆண்டிற்கு நீடிக்கப்படலாம் என்று அங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக சர்க்காருக்கு தெளிவான திட்டம் இருக்கவேண்டும். 1961-ம் ஆண்டு வரையுள்ள கால வரையறையே இத்திட்டத்திற்கு அதிகமான காலம் என்பது என் கருத்து. 1961-க்குள்ளேயே பஞ்சாயத்து யூனியன்களை அமைத்தால் தான், காலா காலத்தில் கிராம ராஜ்யத்தை ஏற்படுத்தி எல்லா நல்ல காரியங்களையும் செய்யமுடியும். இந்தக் கால வரையறையை 1960 என்று போடவேண்டுமென்ற திருத்தத்தைக்கூட நான் கொடுத்திருக்கிறேன். மசோதாவைப் பார்க்கும்போது இந்தக் காலவரையறை 1961-லிருந்து 1962-க்குக் கூடப் போய்விடுமோ என்ற ஐயப்பாடு எனக்கு ஏற்படுவதால், அதை 1960-ஆக மாற்ற வேண்டுமென்ற என் கருத்தை நான் வற்புறுத்தாமல் இருக்க முடியவில்லை. போதிய அதிகாரிகளை நியமித்து திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற அரசாங்கத்தார் ஏன் முன்வரக் கூடாது ? பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் எல்லா இடங்களிலும் அமைக்கப்படாவிட்டால், எதிர் காலத்தில் சில கிராமங்கள் மிகவும் வளர்ச்சியுற்றும் சில கிராமங்கள் மிகவும் பின்தங்கியும் இருக்கும். எல்லா கிராமங்களுக்கும் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்ட பிறகு இத்தகைய சட்டத்தைக் கொண்டுவந்தால் நன்றாக இருக்கும். பஞ்சாயத்துக்களையும் பஞ்சாயத்து யூனியன்களையும் அமைக்கும் விஷயத்தில், அரசாங்கத்தார் "கோ-ஸ்லோ பாலிசி" (Go-slow policy)-யைக் கையாண்டால்—ஆமை வேகத்தில் சென்றால்—கிராம முன்னேற்றம் ஏற்படாது என்பதால்தான் நான் இவ்வாறு சொல்கிறேன். ஜில்லா போர்டுகளை ஒழித்துக் கட்டுவதற்காக இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவைகள் ஒழிக்கப்பட்டு புதிய ஸ்தாபனங்கள் அமைக்கப்படும்போது நன்மைகள் பரவலாக எல்லா மக்களுக்கும் ஏற்படுமானால் எல்லோரும் இந்த மசோதாவை வரவேற்பார்கள். கிராம மக்களுக்கும் அவர்களுடைய தலைவர்களுக்கும் தொடர்பு இருக்கவேண்டும். அவர்களுடைய தலைவர்கள் அவர்களுக்கு சௌகரியங்களும் நன்மைகளும் செய்ய நினைத்தாலும், அதற்குத் தேவையான அதிகாரங்கள் அத்தலைவர்களிடம் இருக்காதபடி செய்யக்கூடியதாகத்தான் இம்மசோதா இருக்கிறது.

[Sri A. Govindasamy] [22nd September 1958

மேலும், பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இப்போது பஞ்சாயத்து சபை உறுப்பினர்களுக்குத்தான் இருக்கிறது. ஏற்கெனவே இந்த சபையில் அது குறித்து பெரிய சர்ச்சை நடந்தது. நேர்முகத் தேர்தல் முறையில்தான் பஞ்சாயத்துத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தினோம்; சபையில் பெரும்பான்மையான கனம் அங்கத்தினர்கள், பேசுகிறபோது, அதை ஆதரித்தார்கள். ஆனால், வோட்டுப் போடும்போது, ஆளும் கட்சி அங்கத்தினர்கள் கட்சிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு வோட்டுப்போட்டதால், மறைமுகத் தேர்தலிலேயே தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சட்டமியற்றப்பட்டது.

பஞ்சாயத்துத் தலைவர் பஞ்சாயத்து உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சட்டமியற்றப்பட்ட பிறகு பஞ்சாயத்துத் தலைவர் தேர்தல்கள் எப்படி நடக்கின்றன என்று பார்ப்போம். பலத்த கட்சிப் போட்டி இருக்கும் இடங்களில் உறுப்பினர்களுக்கு வோட்டுக்காக அபேட்சகர்கள் லஞ்சம் கொடுக்கிறார்கள். ஒரு கட்சி அபேட்சகர், மாற்றுக் கட்சி அபேட்சகர் உறுப்பினர்களை தன் பக்கம் இழுத்துக்கொண்டுவிடக் கூடாது என்ற நோக்கத்துடன், உறுப்பினர்களையே வேறு ஊர்களுக்குக் கொண்டுபோய் மறைத்து வைக்கின்றார். எந்த இடத்தில் உறுப்பினர்கள் மறைத்து வைக்கப்படுகின்றனவோ அந்த இடத்திற்கு "எலெக்ஷன் ரிஸார்ட்" என்று பெயர். எங்கள் பகுதிக்கு பாண்டிச்சேரி ஒரு எலெக்ஷன் ரிஸார்ட். செங்கற்பட்டு மாவட்டத்திற்கு சென்னையும் பெங்களூரும் எலெக்ஷன் ரிஸார்ட்ஸ். அம்மாதிரி உறுப்பினர்கள் ஒரு ஊரில் மறைத்து வைக்கப்பட்டு தேர்தல் தினத்தன்று பஞ்சாயத்திற்குக் கொண்டு வரப்படுகிறார்கள். அவ்வுறுப்பினர்கள் அந்த ஊருக்கு திரும்பக் கொண்டுவரப்படும்போது, மாற்றுக் கட்சி அபேட்சகர் தம் ஆட்களைச் சேர்த்துக்கொண்டு அவர்களை வழி
10 50 a.m மறிக்கிறார். தலைவர் தேர்தலுக்கு தீவிரமான போட்டி இருந்து, வெவ்வேறு கட்சிகளின் பலத்தில் நுணுக்கமான வித்தியாசம் இருந்து, ஒரு வோட்டு வித்தியாசத்தில் தலைவர் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய நிலைமை இருக்கும்போது, அந்த ஒரு வோட்டில் விலை உயர்ந்துகொண்டே போகிறது. பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலுக்கு நின்ற சிலர் இந்த சபையில் கூட இருக்கிறார்கள். அவர்களைக் கேட்டால், அவர்கள் பட்ட கஷ்டங்களைச் சொல்வார்கள். பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலில், தலைவரை பொது ஜனங்கள் தேர்ந்தெடுக்கும் முறையைக் கொண்டுவரவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இப்போது ஒரு வார்டுக்கு பல அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இருக்கிறது. மேலும், ஒரே பெட்டியில் பல வோட்டுச் சீட்டுகளையும் போட்டால், அது அத்தனையும் அந்த ஒரே பெட்டிக்குரிய அபேட்சகருக்கே சேரும். இதன் காரணமாக சிலர் ஏராளமான வோட்டுக்கள் பெறுகிறார்கள், சிலர் போதிய வோட்டுக்கள் பெறாமல் தோற்றுப்போகிறார்கள். ஒரு வார்டுக்கு பல அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை மாறவேண்டும். ஆகவே ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு உறுப்பினரையே தேர்ந்தெடுக்கும் முறையைக் கொண்டுவரவேண்டும். வார்டுகளைத் தனித் தனியாகப் பிரிக்க வேண்டும். உதாரணமாக, மதுரை மாவட்டத்தில் கூடலூர் பஞ்சாயத்து போர்டில் தனித் தனி வார்டுகள் இருக்கின்றன. அங்கே ஷெட்யூல்ட் காஸ்டுக்கு ரிஸெர்வேஷன் இருக்கிறது. ஆனால், செங்கற்பட்டு மாவட்டத்தில் திருமழிசை பஞ்சாயத்தில் ஒரு சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. திருமழிசை பஞ்சாயத்துத் தேர்தலைப் பொறுத்தவரையில் ஒரு முறை திருத்தியமைக்கப்பட்ட கெஜட் நோடிபிகேஷன் வந்தபிறகும், தேர்தலைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகள் மேலும் நடக்கின்றன. செப்டம்பர் மாதம் 10-ம் தேதி வெளியான கெஜட் நோடிபிகேஷனைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

இப்படிப்பட்ட பல சங்கடங்கள் வருகின்றன. இவைகளைப்பற்றி நாம் தனித் தனியாக சொல்லிக்கொண்டே இருக்கலாம். அது மாத்திரமல்ல. அதேபோன்று இப்போது டிஸ்ட்ரிக்ட் போர்டின் கீழ் இருக்கும் டி.பி. (ட்ராவலர்ஸ் பங்களா) போன்றவைகளை பஞ்சாயத் யூனியனின் கையில் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

22nd September 1958] [Sri A. Govindasamy]

இந்த பஞ்சாயத் யூனியனில் சட்டசபை உறுப்பினர்கள் அங்கத்தினர்களாக இருக்கலாம். ஆனால் வோட்டு போடுவதற்கு மாத்திரம் உரிமை கிடையாது. அந்த கூட்டத்தில் கருத்துக்களை சொல்லலாம், யோசனைகளை சொல்லலாம், ஆனால் வோட்டு போடுவதற்கு மாத்திரம் உரிமையில்லை என்றால் அதன் அர்த்தம் என்னவென்று தெரியவில்லை. இவ்விதம் இருந்தால் சட்ட சபை உறுப்பினர்களை பஞ்சாயத் யூனியனில் உள்ளவர்கள் மதிக்க மாட்டார்கள் என்பது நிச்சயம். இவர்களுக்கு வோட்டுரிமை கொடுத்தால் என்ன ? ஆகவே இதை சிந்தித்துப்பார்த்து இதில் அங்கத்தினர்களாக இருக்கக்கூடிய சட்டசபை உறுப்பினர்களுக்கு வோட்டு போடக்கூடிய அதிகாரத்தை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, ஜில்லா போர்டு செகண்டரி பள்ளிகளை யார் கையில் ஒப்படைக்கப்போகிறார்கள் என்று பார்த்தால் அதைப்பற்றித் தெளிவாக கூறவில்லை, ஆரம்பக் கல்வியையும், மானேஜ்மெண்ட் பள்ளிகளையும் மாத்திரம் யூனியன் கவுன்ஸிலுக்கு கொடுக்கப் போகிறோம் என்று சொல்கிறார்கள். அப்படியானால் மானேஜ்மெண்ட் பள்ளிகளை ஏன் சர்க்கார் வைத்துக் கொள்ளக்கூடாது ? ஆகவே இவைகளைச் சர்க்கார் வைத்துச்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. இல்லாவிட்டால் பலவிதமான பொருளாதாரத் தகராறுகள் ஏற்படும். அதோடு இந்தப் பஞ்சாயத் கவுன்ஸிலுக்கு அந்தந்தப் பகுதியில் வசூலிக்கப்படுகின்ற விற்பனை வரியில் பங்கு இருக்கவேண்டும். அந்தப் பங்கு இல்லாவிட்டால் அந்தப் பகுதியில் ஒரு வேலையும் செய்யமுடியாது. இப்போது இருக்கின்ற சபை வெறும் ஆலோசனைகளைக் கூறும் சபையாக மாத்திரம் இருக்கிறது. இப்படியில்லாமல் அந்தப் பகுதியில் உள்ள வேலைகளைச் செய்வதற்கு போதிய பண வசதியிருக்கவேண்டும். அதற்காக இதில் ஒரு பங்கு இருக்கவேண்டும் என்பது தான் எனது கருத்து. அதோடு இந்தப் பஞ்சாயத் கவுன்சிலில் வருகின்ற ஐ.எல்.பி. அவர்கள் நியமிக்கிற அதிகாரிகள் இருப்பார்கள் என்று தெரிகிறது. அதோடு அவர் நியமிக்கின்ற உறுப்பினர்களும் இந்த கவுன்ஸிலில் இருப்பார்கள் என்று தெரிகிறது. இந்த அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுக்காமல் பஞ்சாயத் கவுன்ஸிலுக்குத்தான் அவர்களை தேர்ந்தெடுக்கக் கூடிய உரிமை இருக்கவேண்டும். அதோடு பஞ்சாயத்து உறுப்பினர்களைத் தான் பஞ்சாயத் யூனியன் கவுன்ஸிலுக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும். மேலும் எக்ஸிகியூட்டீவ் அதிகாரியோ அல்லது சமிஷனரோ தேவைப்பட்டால் செலவு செய்யலாம் என்று தெரிகிறது. இந்த முறையை மாற்றி பஞ்சாயத்து சபை அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸில் அதிகாரம் பெற்றுத் தான் அவர் செலவு செய்யவேண்டும் என்று சட்டமிருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு எக்ஸிக்யூட்டீவ் அதிகாரிகளைப்பற்றி கான்பிடன்ஷியல் ரிப்போர்ட் தயாரிப்பதற்கும் பஞ்சாயத் யூனியனுக்கு அதிகாரம் இருக்கவேண்டும். அடுத்தபடியாக ஜில்லா போர்டுகளை எல்லாம் யூனியனில் சேர்க்கும்போது இப்போது ஜில்லா போர்டு ஆபீஸ்களில் வேலை செய்துகொண்டிருக்கும் குமஸ்தாக்களுக்கோ மற்ற உத்தியோகஸ்தர்களுக்கோ எந்த விதமான கஷ்டமும் ஏற்படாமல் அவர்களை எல்லாம் அந்தந்தப் பகுதியிலுள்ள பஞ்சாயத் யூனியனில் வைத்துக்கொள்ள வேண்டும். ஜில்லா போர்டு ஊழியர்களை சர்க்கார் ஊழியர்களாக ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்தச் சட்டம் தெளிவில்லாவிடில் பொதுவாக இதனால் பொது மக்களுக்கு ஒரு குழப்பம் ஏற்படும். இந்த நிலை ஏற்படாதவாறு இருக்கின்ற நிலைமைகளை எல்லாம் சிந்தித்துப்பார்த்து அதற்குத் தகுந்த முறையில், நல்ல முறையில் திருத்தி அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு மற்றுமுள்ள கருத்துக்களை எல்லாம் என்னுடைய திருத்தங்கள் வருகின்ற நேரத்தில் நான் வலியுறுத்திக்கொள்கிறேன். கனம் அமைச்சர் அம்மையார் அவர்கள் இதை அவசரக் கோலமாகப் போடாமல் நல்ல கோலமாகப்போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*Sri R. KRISHNASAMI NAIDU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது சபையின் ஆலோசனைக்கு வந்திருக்கிற இந்தப் புதிய மசோதாவை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். பஞ்சாயத்துக்களுக்கு நிரந்தரமாக நல்ல பலனளிக்கக்கூடிய முறையில் ஒரு சட்டம் வகுக்க வேண்டும் என்று பல வருஷங்களாக நாம் எல்லோரும் காத்திருந்தோம்.

அந்த வகையில் பார்ப்போமானால் நூற்றுக்கு நூறு வெற்றிகரமாகவும், நம்முடைய நலன்களையும் அபிலாஷைகளையும் திருப்தி செய்யக்கூடிய அளவில் இந்த மசோதாவானது அமைந்திருக்கிறது. கிராமப் பஞ்சாயத்துக்கள் நல்ல வகையில் இயங்க வேண்டும் என்று கருதக்கூடிய மக்கள் எல்லோரும் இதை வரவேற்பார்கள் என்று நினைக்கிறேன். இந்த மாதிரியான ஒரு மசோதாவைக் கொண்டுவருவதற்குச் சட்டசபை ஆலோசனைக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது, அதோடு அரசாங்க அதிகாரிகளும் அமைச்சர்களும் சேர்ந்து பல மாதங்களாக பரிசீலனைசெய்து இருக்கிறார்கள். இதைக்கொண்டு வந்திருக்கிருக்கின்ற நேரத்தில் அவர்கள் பரிசீலனை செய்த விஷயங்களைப் பற்றியும் அது சம்பந்தமான நடவடிக்கைகளைப் பற்றியும் மூன்று நான்கு பாகங்களாக பிரசுரங்கள் வெளியிட்டு நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். பொருளாதார அடிப்படையில் இந்த யூனியனும் கௌன்ஸிலும் செயலாற்றவேண்டும் என்பதைப்பற்றி இந்தக் கமிட்டி நன்கு பரிசீலனை செய்திருக்கிறது. அந்த வகையில் இதற்குள்ள பொறுப்பை உணர்ந்து நல்ல முறையில் கடமையைச் செய்திருக்கிற இந்தக் கமிட்டிக்கும் அதிகாரிகளுக்கும் இந்தச் சபை தன்னுடைய பாராட்டுதலைத் தெரிவிக்க வேண்டும். உத்தியோகப் பற்றில்லாதவர்களுக்கும், உத்தியோகப்பற்றுள்ளவர்களும் இதில் கடமை உணர்ச்சியோடு நல்ல எண்ணத்தோடு இதில் வேலை செய்திருக்கிறார்கள். அந்த வகையில் இந்த மசோதா ஒரு வரவேற்கக்கூடிய மசோதாவாகும். ஆரம்பத்திலே பஞ்சாயத்துகளுக்கு என்று உரு கொடுத்தவர் ஸ்ரீ என். கோபாலஸ்வாமி அய்யங்கார் அவர்கள். 38 வருஷங்களுக்கு முன்பு ஒரு சட்டத்தை பஞ்சாயத்துகளுக்கு என்று இயற்றி, பஞ்சாயத்துகள் நல்ல முறையில் வேலை செய்துவருவதற்கு வேண்டி இதற்கான நிர்வாகப் பொறுப்பையும் மாகாண அளவில் அவர் ஏற்றுக்கொண்டிருந்தார். அதன் பின் அந்தத் திட்டம் பல ரூபங்களில் மாறுதல் அடைந்து வந்திருக்கிறது. இப்போது ஜில்லா போர்டு இல்லாத முறையில் ஒவ்வொரு பகுதியிலுள்ள வேலைகளையும் கவனிப்பதற்குப் பஞ்சாயத்து யூனியன் என்ற முறையில் ஏற்படுத்த வேண்டும் என்கின்ற பிரச்னை இதற்கு முன்னால் இருந்துவந்தது. பல மாதங்களுக்கு முன்னால் இதைப்பற்றி ஒரு வெள்ளை அறிக்கை ஒன்று கொடுக்கப்பட்டது. அதன் பேரில் இங்கு பலவிதமான ஆலோசனைகள் கூறப்பட்டது. அந்த ஆலோசனைகளை எல்லாம் சேர்த்து இப்போது மசோதா சட்டபூர்வமாக வகுத்துக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆரம்பத்திலே இந்தப் பஞ்சாயத்துகளை உருவாக்குவதற்கு பணியாற்றியவர் ஸ்ரீ என். கோபாலஸ்வாமி அய்யங்கார் என்று சொன்னேன். இப்பொழுது அதே பேரிலுள்ள கோபாலஸ்வாமி அய்யங்கார்தான் இலாகாவின் செயலாளராயிருந்து இதற்கும் பணியாற்றி வருகிறார். பேர் ஒற்றுமையாக பொருந்தியிருக்கிறது. அவரும் அய்யங்கார், இவரும் அய்யங்கார்.

Sri A. GOVINDASAMY : அவர் வடகலையா, தென்கலையா ?

Sri R. KRISHNASAMI NAIDU : நான் வடகலைதான், அவர்களைப்பற்றி தெரியாது. அந்த வகையில் இந்த மசோதாவானது ஒரு பெரிய மசோதாவாகவும் நல்ல முறையிலும் வகுத்து கொடுத்திருக்கிறார்கள். ஜில்லா போர்டுகளை எல்லாம் மாற்றி, பஞ்சாய்த் யூனியன் ஏற்படுத்தி அவைகள் எல்லாம் எந்தெந்த முறையில் வேலை செய்யவேண்டும் என்பதையெல்லாம் மனதில் வைத்துத்தான் இதை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. அந்த முறையில் இதை நாம் வரவேற்க வேண்டும். அதற்குப் பின்னால் இப்போதுள்ள ஜில்லா போர்டுகளை ஒழித்துக் கட்டுவது என்று ஒரு பேச்சு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இவ்விதமாக வேகமாகவும் உணர்ச்சியோடும் பேசினால்தான் அதற்கு ஒரு சிறப்பு
11 a.m. இருப்பதாக நம்முடைய அங்கத்தினர்களில் பலர் நினைக்கிறார்கள். இவ்விதம் பேசுவதில் ஒரு மோகம் பிறந்திருப்பதாகவே நினைக்க வேண்டியிருக்கிறது. இதில் ஒழித்துக் கட்டுவது என்ன இருக்கிறது ? இப்பொழுது இருக்கக்கூடிய நிலையிலே காரியங்கள் செயல்பட வேண்டியதை முன்னிட்டு, ஜில்லா போர்டுகள் அவசியம் இல்லை, அவைகள் செய்துவருகின்ற வேலையை பிளாக் அளவிலே பிரித்துக் கொடுத்தால் அது பயனளிப்பதாக இருக்கும் என்று கருதி, ஜில்லா போர்டுகள் தேவையில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, ஒழிப்பதோ, கட்டுவதோ என்ற பிரச்னை

இங்கே எழவில்லை. இந்த மாதிரி வார்த்தைகளை உபயோகப்படுத்துவது நல்ல முறையிலே பணி ஆற்றியவர்கள் மனத்தை ஓரளவு பாதிக்கும், புண்படுத்தும். தயவுசெய்து அத்தகைய வார்த்தைகளை உபயோகக்க வேண்டாம். இந்தச் சட்டமானது நல்ல வகையிலே உருவாகியிருக்கிறது. இந்தச் சட்டத்தைக கொண்டுவருவதன் நோக்கங்கள், காரணங்கள், இவைகளைப் பற்றி, மசோதாவிலே முன்னும் பின்னும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. அவ்வாறு கூறப்பட்டுள்ள விஷயங்களையும், மசோதாவின் சில பிரிவுகளிலே உள்ள ஷரத்துகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இன்னும் பஞ்சாயத்துகளுக்கும், பஞ்சாயத்து கவுன்சில்களுககும் உள்ள தொடர்புகள் சில இடங்களிலே நன்ருக வரையறுக்கப்பட்டு பிணைக்கப்பட வேண்டுமென்று நான் கருதுகிறேன். கமிட்டியிலே எல்லா விஷயங்களையும் நன்ருகப் பரிசீலித்திருந்தாலும்கூட, இதைத் திரும்பவும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக, 12-வது பிரிவிலே, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு பஞ்சாயத்து போர்டு மெம்பர்களும் அங்கத்தினர்களாக வரலாம், அந்தப் பஞ்சாயத்துகளிலே மெம்பர்கள் அல்லாதவர்களும், அந்தப் பிரதேசத்திலே வாக்காளர் ஜாபிதாவிலே பெயருள்ள ஒருவரும் கூட அந்தப பஞ்சாயத்து கவுன்சிலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கத்தினர்களாக வரலாமென்று கூறப்பட்டிருக்கிறது. இது அவ்வளவு பொருத்தமாக இராது. பிளாக் ஏரியாவிலுள்ள எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களும் அந்தப் கவுன்சிலின் அங்கத்தினர்கள் என்று திட்டவட்டமாகச் சொல்வது மிகவும் பொருத்தமாகயிருக்கும். அப்படியிருந்தால்தான், அந்தப் பிரதேசத்திலுள்ள பஞ்சாயத்துகளில் தலைவர்கள், நமக்காக ஏற்பட்ட பஞ்சாயத்து கவுன்சில்களிலே நம்முடைய அதிகாரங்கள் குறைந்துபோய் இருக்கின்றன, கவுன்சில்களுக்கு அதிகாரம் அதிகமாயிருக்கின்றன என்ற பாகுபாடு இல்லாமல், கடமை உணர்ச்சியோடு எல்லாப் பஞ்சாயத்துகளும் பஞ்சாயத்து கௌன்சிலோடு இணக்கமாகப் பணியாற்றுவதற்கு வாய்ப்பு அளிக்கும். ஆகவே, 12-வது பிரிவில், அந்தப் பஞ்சாயத்து கவுன்சிலின் விவகார எல்லைக்குள் உள்ள தலைவர்கள் அந்தப் பஞ்சாயத்து கவுன்சிலின் அங்கத்தினர்கள் என்று சொல்ல வேண்டும். மற்ற விஷயங்களை அதற்குத் தகுந்தபடி திருத்தவேண்டும். அந்தப் பஞ்சாயத்து தலைவர்கள் அந்தக் கௌன்சிலில் அங்கத்தினர்களாக இல்லாவிட்டால், அந்தப் பஞ்சாயத்து மெம்பர்களுக்கு ஒரு தேர்தல், பஞ்சாயத்து பிரசிடெண்ட், வைஸ்-பிரசிடெண்ட், இவர்களுக்கு ஒரு தேர்தல், இவையெல்லாம் நடைபெற்ற பிறகு, பஞ்சாயத்து தலைவரோ, மெம்பர்களோ, மெம்பர்கள் அல்லாத மற்றவர்களோ கவுன்சிலின் மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மற்ருெரு தேர்தல், இப்படி தேர்தலுக்கு மேல் தேர்தல் நடத்தவேண்டியிருக்கும். பஞ்சாயத்துத் தலைவர்களே கவுன்சிலின் மெம்பர்கள் என்று நிர்ணயித்து விட்டால், மேற்சொன்ன தேர்தல்களுக்கு அவசியமிராது. பஞ்சாயத்துக்கு தேர்தல் நடைபெறும் சமயத்திலேயே பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. "நீங்கள் பிரசிடென்ட்டாக இருங்கள், நான் வைஸ்-பிரசிடெண்ட் ஆக இருக்கிறேன், இன்ஞெருவர் கவுன்சில் மெம்பராக இருக்கட்டும்" என்றெல்லாம் சொல்லுகிருர்கள். அந்தப் பஞ்சாயத்தினுடைய அன்ருட காரியங்கள் பஞ்சாயத்து கவுன்சிலுக்கு விவாதத்திற்கு வரும்பொழுது, அந்த பஞ்சாயத்து பிரசிடெண்ட் அங்கேயிருந்தால்தான் அவற்றைப்பற்றி நன்ருகத் தெரிந்துகொள்ள முடியும். பிரசிடெண்ட் அல்லாதவர்கள் அங்கே போனுல், கவுன்சிலின் காரியங்களைத்தான் முக்கியமாகக் கவனிப்பார்களே தவிர, பஞ்சாயத்தின் விஷயங்களை முக்கியம கக் கருதமாட்டார்கள். ஆகவே இது மிகவும் அவசியமென்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, 64-வது பிரிவிலே பஞ்சாயத்துகள் செயலாற்ற வேண்டிய வேலைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. 65-வது பிரிவிலே பஞ்சாயத்து கவுன்சில்கள் செயலாற்ற வேண்டிய வேலைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டுக்கும் இணக்கமாக பஞ்சாயத்து கவுன்சில் தனக்கு ஒதுக்கப்பட்ட வேலைகளைச் செய்யும்பொழுது, அந்தப் பஞ்சாயத்து ஏரியாவுக்குச் செய்யவேண்டிய வேலைகளை, கவுன்சில் நினைத்தால் அந்தப் பஞ்சாயத்தைக் கொண்டே செய்யச் சொல்லலாம். சில வேலைகளை

"டெலிகேட் செய்யலாம்" என்று பஞ்சாயத்து கவுன்சில் கருதினுல், அவர்களுக்குக் கொடுக்கலாம். அதற்கு வசதியிருக்க வேண்டும். 64-வது பிரிவில் (ஜே) என்னும் பகுதி வரையில் உட் பிரிவுகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. (கே), (எல்) என்ற உட் பிரிவுகளேக் கடைசியில் சேர்த்தால் மிகவும் பொருத்தமாகயிருக்கும். 65-வது பிரிவிலே பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் செய்யவேண்டிய வேலேகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பிரிவிலேயும், பஞ்சாயத்து கவுன்சில் இஷ்டப்பட்டால் பஞ்சாயத்துக்கு அதன் விவகார எல்லேக்குள் செய்யவேண்டிய வேலேகளே "டெலிகேட் செய்யலாம்" என்று குறிப்பிடவேண்டும். இப்படி இணேந்து வேலே செய்யும் பொறுப்பு இருந்தால்தான் பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து கவுன்சிலும் ஒன்றுபட்டு இணக்கமாக வேலே செய்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

66-வது பிரிவு மிகவும் முக்கியம். அந்தப் பிரிவிலே சமுதாய நலத் திட்டவேலேகளேயும், தேசீய அபிவிருத்தித் திட்ட வேலேகளேயும், அந்த பிளாக்கிலே இருக்கக்கூடிய பஞ்சாயத்துக் கவுன்சிலுக்குச் சர்க்கார் இஷ்டப்பட்டால்தான் கொடுக்கலாம் என்பது போல வாசகம் தொனிக்கிறது. இந்த மசோதாவின் பீடிகையிலும், நோக்கங்கள், காரணங்கள் என்ற பகுதியிலும், இந்தச் சமுதாய நலத் திட்ட வேலேகள், இன்னும் உணவு உறபத்தி பெருகுவதற்கான திட்டங்கள், கிராமப் பகுதிகளிலே முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் இவைகள் எல்லாம் பஞ்சாயத்து கவுன்சில் மூலமாக நிறைவேறறப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பாவுப்பட்டி பார்த்தால், இந்த மாதிரி வேலேகளே அரசாங்கம் இஷ்டப்பட்டால் கவுன்சிலிடத்தில் ஒப்படைக்கலாமென்றே, அல்லது கவுன்சில்களும் வெறுப்புடன் "வேண்டாம்" என்று சொல்லலாமென்றே தொனிக்கிறது. சமுதாய நலத்திட்ட வேலேகளோ, தேசீய அபிவிருத்தித் திட்ட வேலேகளோ பஞ்சாயத்து கௌன்சில் மூலமாகவேதான் செய்யப்படுமென்று திட்டவட்டமாகச் சொல்லவேண்டும். சந்தேகத்திற்கு இடமளிப்பதாக இருக்கக்கூடாது அப்படிச் செய்தால்தான் இம்மாதிரி வேலேகளே கிராமப் பகுதிகளில் நல்ல முறையில் நாம் நிறைவேற்ற முடியும். பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்துக் கவுன்சில்களும் கடமை உணர்ச்சியுடன் பணி ஆற்றமுடியும். ஆகவே இந்தப் பிரிவைத் தக்கவாறு திருத்த வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களே கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மசோதாவிலே, தணிக்கை, மேற்பார்வை, அங்கீகாரம் போன்ற பல விஷயங்கள் பல இடங்களில் காணப்படுகின்றன. தணிக்கை மிக மிக அவசியம். இதற்கு முன்னுலிருந்த அவலநிலேமை இனிமேல் இருக்கக் கூடாது. ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும், அடுத்த நிதிவருஷம் முடிவதற்குள்ளாக தணிக்கை செய்து முடிக்கவேண்டும். அதற்காக எவ்வளவு செலவானுலும் பரவாயில்லே. அப்படிச் செய்தால்தான் பஞ்சாயத்துகளிலோ, அல்லது பஞ்சாயத்து கவுன்சில்களிலோ ஊழல்கள் மலியாமல் இருக்கும். இதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேர்பார்வை விஷயத்தில் கூடுமானவரையில் கொஞ்சம் அதிகமாகக் கட்டுப்படுத்தும் கெடுபிடிகள் இல்லாத வகையிலே விதிகள் அமைய வேண்டும். அங்கீகாரம், பட்ஜெட் முதலிய விஷயங்களிலும், மேற்பார்வை அதிகாரிகள் கண்காணிப்பு செய்யும்படியான வகையிலே விதிகள் வகுக்கப்படவேண்டும். 198 பிரிவுகள் இருக்கின்ற இந்த மசோதாவிலே, கிட்டத்தட்ட 48 பிரிவுகளுக்கு விதிகள் வகுக்க வேண்டிய பொறுப்பை இந்த மசோதா அரசாங்கத்திற்குக் கொடுக்கிறது. இந்த இலாக்காவிற்குப் பொறுப்புள்ள அதிகாரிகளும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களும், எவ்வளவு நல்லெண்ணத்துடனும், பரந்த நோக்குடனும், இந்தச் சட்டத்தை நாம் வகுக்கிறேமோ, அதே முறையில் அந்தந்தப் பகுதியிலுள்ள மக்களே வைத்துக்கொண்டு இணக்கமான முறையில் செயலாற்றும்படி இந்த விதிகளே அமைக்கவேண்டும். கிராமப் பகுதிகளில் சினிமாவுக்கு லேசென்சு கொடுக்கக்கூடிய அதிகாரம் தனிப்பட்ட பஞ்சாயத்திற்கு இல்லாமல் பஞ்சாயத்து கௌன்சிலுக்கே கொடுக்கப்படவேண்டும். பஞ்சாயத்து ஏரியாவில்

22nd September 1958] [Sri R. Krishnasamy Naidu]

இது பற்றித் தகராறுகளும், சண்டைகளும் இருந்துகொண்டிருப்பதினால், பொதுவாக வருமானத் துறையில் லைசென்சு கொடுக்கக்கூடிய அதிகாரம் பஞ்சாயத்து கௌன்சிலுக்கே இருக்கும்படி செய்யவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படியிருந்தால்தான் மிகவும் அனுகூலமான காரியங்களைச் செய்யமுடியும்.

பஞ்சாயத்துகளுடைய மேற்பார்வைக்கு தனி இலாகா ஒன்று அமைக்கப்படவேண்டும். இப்பொழுது முனிசிபாலிட்டிகளை மேற்பார்வையிடுவதற்கு இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். பஞ்சாயத்துகளை மேற்பார்வையிடுவதற்கு ஒரு தனி இலாகா இருந்தால்தான் இந்தச் சட்டத்தைச் சரியாக அமுல் நடத்தமுடியும். எல்லா காரியங்களும் சரியாக நடைபெறும். இப்பொழுது இருக்கும் ரீஜனல் இன்ஸ்பெக்டர்கள் தேவைப்படமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கருத்தில்கொண்டு எதிர்காலத்திற்கு அனுகூலமாக இவைகளையெல்லாம் எப்படிச் செய்ய முடியுமோ, அவ்வாறு செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். 11-10 a.m.

பல சட்டங்கள் செய்யக்கூடிய இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றொரு முக்கியமான திருத்தத்தையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். முனிசிபல் எல்லைக்கு வெளியே உள்ள பஞ்சாயத்திலிருந்து வண்டி, மாடுகள், லைசென்ஸ் பெற்ற வாகனங்கள் முனிசிபல் எல்லைக்குள் வந்தால் அங்கே விதிக்கப்பட்ட கட்டணம் அதிகமாயிருந்து, பஞ்சாயத்தில் விதிக்கப்பட்ட கட்டணம் குறைவாக இருந்தால், இரண்டிற்கும் வித்தியாசமாக உள்ள தொகையை அந்த முனிசிபாலிட்டிக்கு கொடுக்கவேண்டுமென்ற தலைவலி இப்பொழுது இருந்துகொண்டிருக்கிறது. பல வருஷ காலமாக இம்மாதிரிப் புகார்கள் சர்க்காருக்கு வந்துகொண்டிருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் இதைக் கவனித்து இதற்கான திருத்தத்தை செய்துவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தில் அல்ல, முனிசிபல் சட்டத்தில் அந்தத் திருத்தத்தைச் செய்யவேண்டும். ஏற்கனவே 1947–48-வது வருஷத்தில் இந்தப் புதிய சட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. 1920-ல இருந்த வேறுபட்ட மூல சட்டத்தில் இந்த வித்தியாசங்கள், பாகுபாடுகள் இல்லை. முனிசிபல் நிர்வாகத்திற்கும், அதைச் சுற்றியுள்ள மேஜர் பஞ்சாயத்துகள், சிறிய பஞ்சாயத்துகள் நிர்வாகத்திற்கும் இதனால் போட்டிகள், சண்டைகள் ஏற்படுகின்றன. முனிசிபாலிட்டிகளில் பஞ்சாயத்து ஏரியாவிலிருந்து வந்த ஸைகிள்களை நிறுத்திவைத்துக்கொள்ளும் அளவிற்குச் சண்டைகள் பெருகிப்போகின்றன. முனிசிபாலிட்டி எல்லைக்கு வெளியேயுள்ள ஒரு ஸ்தலஸ்தாபனத்திற்கு ஒரு தடவை தீர்வை கொடுத்துவிட்டால், இந்தத் தீர்வை விகிதத்தில் இரண்டிற்கும் வித்தியாசம் இருந்தால் அந்த வித்தியாசத்தை முனிசிபல் எல்லைக்குள் கட்ட வேண்டும் என்ற விதிமுறைகளை எடுத்துவிடவேண்டும். அதற்கான திருத்தத்தைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய ராஜ்யத்திலே இப்பொழுது 150 பிளாக்குகள் இருக்கின்றன. இன்னும் 11 பிளாக்குகள் அக்டோபரிலிருந்து ஏற்படப்போகின்றன. மொத்தம் நம்முடைய ராஜ்யத்தில் தேசீய அபிவிருத்தித் திட்டம், சமுதாய நல திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் 350 பிளாக்குகள் ஏற்படப் போகின்றன. 1958–59 நிதி வருஷத்திற்குள், அதாவது 1959 மார்ச்சு 31-ம் தேதிக்குள் 161 பிளாக்குகளிலும் இந்தச் சட்டம் அமுலுக்கு வரும்படியான ஏற்பாட்டை அரசாங்கம் செய்வது நல்ல பலனை அளிக்கும் என்று நான் கருதுகிறேன். 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் ராஜ்யம் முழுவதிலும் இந்தச் சட்டம் அமுல் நடத்தப்படவேண்டியிருக்கிறது. அதனால் ஆரம்பம் முதலே கொஞ்சம் சீக்கிரமாக இந்தச் சட்டம் எல்லா பகுதிகளிலும் அமுல் நடத்தப்படவேண்டும். 1958–59-ம் நிதி வருஷத்திற்குள்ளேயே தேசீய அபிவிருத்தி திட்டம், சமுதாய நல திட்டம் அமுல் நடத்தப்படும் எல்லாப் பகுதிகளிலும் அதாவது 161 பிளாக்குகளிலும் இந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தால்தான் இந்த லட்சியத்தை 1961-ம் வருஷத்திலே நாம் அடைய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[Sri R. Krishnasamy Naidu] [22nd September 1958

முக்கியமாக நான் மேலே குறிப்பிட்டதுபோல 12, 64, 65, 66 பகுதிகள் திருத்தப்படவேண்டும். இங்கு கொடுக்கப்படும் முக்கியமான திருத்தங்கள், முக்கியமான விஷயங்கள் பற்றி கூட இன்றும் நாளையும் சட்டசபை அங்கத்தினர்கள் கொண்ட கமிட்டி பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்திருப்பதுபற்றி நான் சந்தோஷப்படுகிறேன். இவைகளையெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு இந்தச் சட்டம் நல்ல வகையில் உருவாகும் என்று எதிர்பார்த்து, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: I find that most hon. Members who have spoken before have exceeded the time-limit. Hon. Members should not exceed the time-limit.

I have also to inform the House that the Committee on Local Administration is meeting to-day at 3 p.m. in this Chamber. Hon Members of the House are requested to attend it.

Now the hon. Member Sri William will speak.

* SRI M. WILLIAM: Mr. Deputy Speaker, Sir, I welcome this measure and in supporting it, I have to say that it is the failure of the District Boards that has led to the constitution of the Panchayat Unions. Of course, the failure on the part of the District Boards is mostly due to the unwieldy nature of the District Boards. The area over which they had jurisdiction and the volume of work also had increased. In order to obviate the difficulties which have been experienced by the District Boards, it has been suggested that the Panchayat Unions should be formed. Panchayat Unions are to be formed at the Block level. This is a good feature because the area is a compact one and in the Block area there is the assistance of the technical staff, Extension Officers and also the Block Development Officer. So with the services of these staff, the Panchayat Union can be made to work very successfully. Therefore, the choice of the Block area as the basis for the constitution of the Panchayat Union is a welcome feature and that augurs well for the successful working of the Panchayat Unions.

In the matter of composition, the Panchayat Union, is a highly democratic body. The Presidents of all the Panchayats must be members of the Panchayat Union.

With regard to the Panchayat Union Council, we find that vast powers are given. The Panchayat Union Council must be made to meet at least once in a month. It is suggested in the Bill that it should meet once in three months. My suggestion is that the Panchayat Union Council should meet once in every month because the volume of work that has been entrusted to it, is very heavy and in order to successfully do this work, it must meet once in every month.

With regard to functions, my humble suggestion is that elementary education up to the Seventh Standard must be taken out of the purview of the Panchayat Union Council. In the Kanyakumari district elementary schools, schools having classes up to Third Form, have been very successfully and efficiently run by

22nd September 1958] [Sri M. William]

the Government. On account of their security of tenure, the teachers do not experience any sort of difficulty. But elementary education is to be entrusted to the Panchayat Union Council, there is likely to be a fall in the standard of education in these schools. The teachers also may feel that they are to dance to the tune of the Members of the Panchayat or its President. So much so, that may cause deterioration in the teaching efficiency of the teachers. So, to maintain the standard of education in the elementary schools, it is desirable that it is taken out of the purview of the panchayat union council.

The other developmental activities except education may be entrusted to the panchayat union council and I am sure, with the aid of the Block Development Officers, the panchayats could work very successfully.

Then, with regard to the powers of the President, I have to say a few words. As could be seen from the Bill, it is suggested that for the panchayats there must be an executive authority. 11-20 The panchayat being a very small area, the chairman himself a.m. can be made the executive authority. If we appoint a highly paid officer to the council, the finances of the panchayats will be affected. So, the chairmen should be made the executive authorities. Some allowance, say to the tune of Rs. 30 also may be given to these persons. So far as the panchayat councils are concerned, the chairman of the council should also be given some allowance, say ranging between Rs. 30 to Rs. 50. Of course, in the Bill, it is said that nobody should get any salary or allowance. That means driving away deserving candidates from occupying these high seats of honour. We cannot always expect capitalists or other well-to-do people to become the presidents or the chairmen. Even in the labour class, there are persons who are deserving and who make sacrifice for the welfare of the people. They must be given some encouragement. Of course, to induce them also, some sort of allowance should be given for occupying the position of chairman or president.

The chairmen also should be given some powers. As it is, they simply attend and preside over the meetings and their functions cease there. In order to make them take personal interest in the matter, they must be given certain privileges. They must be given the right to supervise the work and must also have some sort of control over the staff. As it is, the Commissioner is given the entire control over the staff. That means giving some sort of authority to the commissioner. We know how in the municipal council meetings, there are always difficulties experienced by the chairman, since the commissioner is the executive authority. Whenever the commissioner is not in good relationship with the chairman, he tries to create a clique. A few of the councillors join the commissioner and a few others side the chairman. Therefore, vesting of more powers in the commissioner, will certainly lead to complications in the matter of controlling the council and controlling the affairs of the panchayat union. Therefore,

[Sri M. William] [22nd September 1958

my submission is that the Chairman should be the controlling authority. The Commissioner and the staff must be subordinate to the Chairman.

Then, there is overlapping of functions in the same block area. The Block Development Officer is assisted by a number of Extension Officers in the Block area. The work done by the Block Development Officer and his technical staff is identical to the work done by the panchayat councils. So much so, there is overlapping of functions. It would be proper and just that the Block Development Officer and his staff are integrated with the staff of the panchayat councils so that they may co-ordinate their activities and work as one body. If necessary, the Block Development Officer may be made the commissioner of the panchayat union because after four or five years, we are going to have National Extension Service Blocks throughout the State. By the integration of the Block Development Officer and the staff under him with the panchayat, the work can be done more successfully. Anyway, my submission is that the Government should keep in mind, when framing rules under the provisions of the Bill, the interests of the public rather than the interests of the officials. The rules must be framed in such a way as not to handicap or embarass the people in taking interest in the panchayat. To induce them to take interest in the matter, they must be given more powers. That is, the representatives of the people must be given more powers so that they may take personal interest in the administration of these panchayat councils. With these words, I resume my seat.

*Sri T. VELUCHAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தப் பஞ்சாயத்து மசோதாவை சீக்கிரமாகக் கொண்டு வந்ததற்கு கனம் மந்திரி அவர்களை நான் ஓரளவு பாராட்டுகிறேன். ஆனால் அவர்களை நான் முழுமையாக பாராட்டுவேன், அவர்கள் இந்த மசோதாவை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப சம்மதித்தால். ஏனென்றால் இந்த பஞ்சாயத்து மசோதாவில் அநேக முக்கியமான திருத்தங்கள் செய்ய வேண்டியதாக இருக்கின்றன. பல முக்கியமான திருத்தங்களைப்பற்றி கனம் ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் நன்றாக விளக்கி எடுத்துச் சொன்னார்கள். அந்தத் திருத்தங்களின் அவசியம் குறித்து இந்த மசோதா செலெக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டு, அங்கே நன்றாக பரிசீலனை செய்யப்பட்டு, இது சட்டமாக்கப்படுமானால் இதனால் மக்களுக்கு நல்ல பல நன்மைகள் ஏற்படும் என்று என்னால் சொல்லமுடியும். ஏனென்றால் இதுவரை நாம் ஒரு ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டபோதிலும் மக்களுக்கும் சர்காருக்கும் நேரடி நெருங்கிய தொடர்பு இன்னும் ஏற்பட வில்லை. இம்மாதிரி கிராம பஞ்சாயத்துக்கும் கிராம பஞ்சாயத்து யூனிய னுக்கும் நல்ல அதிகாரங்களைக் கொடுத்து அவைகள் நல்ல முறையில் இயங்கி வந்தால் மக்களுக்கும் சர்க்காருக்கும் ஒரு நல்ல நெருங்கிய தொடர்பு ஏற்பட அது மிகவும் உதவியாக இருக்கும். அதன்பிறகு அரசியல் நிர்ணயச் சட்டத்தில் கண்டபடி அவைகள் அவ்வாறு தனித்தனி யூனிட்டாக அமைந்து "units of self government" ஆக இயங்குவதற்கு ஓர் உதவியாகவும் இருக்கும். நாம் விடுதலை அடைந்த பிற்பாடு ஜனநாயக ஆட்சி முறையில் நம்முடைய அரசியலை ஏற்படுத்திக் கொண்டோமானாலும், மக்களுக்கு ஜனநாயக ஆட்சி முறையில் நல்ல பழக்கம் ஏற்படவில்லை. இந்த மசோதாவில் கண்டபடி, பஞ் சாயத்து, பஞ்சாயத்து யூனியன் போன்ற சிறு சிறு அமைப்பின் மூலமாக அவர்கள் ஜனநாயக முறை ஆட்சியில் நன்றாகப் பழகிக்கொள்வதற்கும் ஆட்சியில் அவர்கள் பங்குகொள்வதற்கும் வசதியாக இருக்கும். அதன் மூலம் அவர்கள் கிராமத்திற்கு நல்ல காரியங்களையும் செய்யமுடியும்.

22nd September 1958] [Sri T. Veluchami]

இப்பொழுது கிராம பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம் மிகவும் சொற்பமாக இருக்கிறது. ஆரம்ப காலத்தில் சொற்பமாகக் கொடுத்திருந்தாலும் பிற்பட்டு அவர்களுக்கு அதிகப்படியான அதிகாரத்தை சர்க்கார் அவர்களுக்குக் கொடுக்கும்படியான ஒரு அக்கறையை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட அக்கறையில்தான் இந்த திட்டத்தின் வெற்றி இருக்கிறது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். முக்கியமாக பார்த்தால் ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கக்கூடிய கிராம அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஆட்சியை நாம் இப்பொழுது நடத்திக்கொண்டு வருகிறோம். எந்தக் காரியத்தை எடுத்தாலும் கிராம அதிகாரிகளைத்தான் நாம் அணுக வேண்டியதாக இருக்கிறது. அந்த நிலைமையில் அவர்கள் இருக்கிறார்கள். தேசீய அபிவிருத்தி திட்டங்களை எடுத்துக்கொண்டாலும் சரி, வேறு எந்த திட்டங்களை எடுத்துக்கொண்டாலும் சரி, அவர்கள்தான் அவைகளுக்கு உதவி செய்யக்கூடிய நிலையில் இருக்கின்றார்கள். ப்ளாக் டெவலப்மெண்ட் ஸ்கீமை எடுத்துக்கொண்டாலும் சரி அல்லது வேறு எந்த நன்மையைச் செய்வதாக இருந்தாலும் சரி, விவசாயிகளுக்கு கடன் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றாலும் சரி, கிராம அதிகாரிகள்தான் அவர்களுக்கு சர்ட்டிபிக்கேட் போன்ற வசதிகள் செய்யக்கூடிய நிலையில் இருக்கிறார்கள்.

(Mr. Speaker in the Chair.)

ஆகவே இந்த கிராம அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படும் அதிகப்படியான அதிகாரத்தை படிப்படியாக குறைத்து அவைகளை கிராமபஞ்சாயத்து போர்டுகளுக்குக் கொடுக்கவேண்டும். இந்த நிலையில் கிராம பஞ்சாயத்துகளை அதிக அதிகாரமும், கிராம அதிகாரிகளின் பேரில் அதிகாரத்தோடு அமைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. கிராம பஞ்சாயத்துகளுக்கு அதிகப்படியான அதிகாரத்தைக் கொடுத்து அந்த முறையில் அவர்கள் இயங்கி வந்தால், அப்படிப்பட்ட ஒரு மாறுதலை நாட்டில் செய்தால் மிகவும் நல்ல ஒரு சூழ்நிலை ஏற்படும் என்று நான் நினைக்கிறேன். இந்த அடிப்படையில் நம்முடைய அபிவிருத்தி நோக்கத்தில் இந்த மசோதா அமைக்கப்பட்டிருக்கிறது. அதையே மசோதாவின் நோக்கத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோக முக்கியமாக நம்முடைய நாட்டின் முன்னேற்றம் விவசாயத்தில் தான் இருக்கிறது என்று நமது பிரதம மந்திரி பண்டித நேரு அவர்கள் உட்பட பல தலைவர்கள் இப்படியே பல இடங்களில் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே விவசாயம் சம்பந்தமாக அதிகாரங்களை இந்த கிராமப் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்காமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. ஏனென்றால் விவசாயத்திற்கு முக்கியமானது நீர்ப்பாசனம். நீர்ப்பாசனத்தின் கண்ட்ரோல், அதனுடைய பராமரிப்பு இவைகளையெல்லாம் கிராம பஞ்சாயத்துக்களுக்குக் கொடுத்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். இப்பொழுது இருக்கும் நிலைமையைப் பார்த்தால் மழை காலங்களில் கிடைக்கக்கூடிய தண்ணீரை எல்லாம் சிக்கனமான முறையில் உபயோகப்படுத்தப்படவில்லை. வாய்க்கால், குளங்களை சரியானபடி மராமத்து செய்து வைத்து தண்ணீரை அவற்றில் தேக்கி வைக்கப்படவில்லை. இப்படிப்பட்ட விவசாயத்திற்கு அவசியமான நன்மையைச் செய்துகொள்ளக்கூடாத நிலையில் அவர்கள் இருக்கிறார்கள்.

அதுபோக, பல நீர்ப்பாசன சாதனங்களில் ஒவ்வொரு பிரிவுக்கும் உள்ள தனித்தனியான பாத்யதை வித்தியாசங்களினால் விவசாயிகளிடையே சில தகராறுகள் ஏற்படுகின்றன. இந்தத் தகராறுகள் ஏற்படுவதன் காரணத்தால் விளையக்கூடிய இடங்கள்கூட குளம் பெருகாமல் விளையாத நிலைமையில் இருக்கின்றன. இதற்குக் கிராம மக்கள் தங்களுக்குள்ளேயே கலந்து அதற்கு ஒரு ஏற்பாடு செய்துகொள்ளக்கூடிய நிலைமையில், மழைக்காலங்களிலே வருகிற தண்ணீரைக் கொண்டு பாத்யதைப்படி குளங்களை பெருக்கி தேக்கி வைத்து, வரிசைக்கிரமமாக சிக்கனமாக உபயோகிக்கக்கூடிய தன்மைக்கு ஏற்பாடு செய்யவேண்டும். இந்த ஏற்பாடு மகசூலை அதிகப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும். அதற்கு இப்போது 11-30 a.m.

கிராம அதிகாரிகளிடம் இருக்கும் அதிகாரங்கள் பஞ்சாயத்து போர்டாருக்கு மாற்றப்பட்டால்தான் முடியும். அந்த அதிகாரத்தை பஞ்சாயத்து போர்டாரிடம் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த மசோதாவில், பஞ்சாயத்துக்கள் மூலமாக விவசாயிகள் நன்மை அடையக்கூடிய நிலையில் சில அம்சங்கள் சேர்க்கப்படவில்லை. விவசாயிகள் உணவுப் பொருள்களை விளையவைக்கிறார்கள். அதனுடைய முழுப் பலனையும் விவசாயிகள் அடையக்கூடிய ஒரு நிலையில் அவர்களுடைய விளை பொருள்களுக்கான விலை கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்படவேண்டும். இதற்கு பஞ்சாயத்துக்கள் மூலமாக ஒரு வசதி செய்து கொடுக்க முடியும். உதாரணமாக திருநெல்வேலி ஜில்லாவில் மிளகாய் வத்தல் பயிர் முதலிய பயிர்கள் அதிகம். இந்த மிளகாய் வத்தல் ஏற்றுமதிக் கோட்டாக்களை வேறு வியாபாரிகளுக்குக் கொடுப்பது மூலமாக விவசாயிகள் அடையக்கூடிய உழைக்கும் பயன் அவர்களுக்கு கிடைக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டு வருகிறது. இப்பொழுது நாம் தனித் தனியாக பஞ்சாயத்து அமைக்கிற காரணத்தால் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்துக்கும் அந்தக் கோட்டாக்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டு, பஞ்சாயத்து மூலமாக விவசாயிக்கு ஏற்றுமதிக் கோட்டாவிலைகள் கிடைக்கச் செய்வது போன்ற நன்மை அடையக் கூடிய நிலைமை ஏற்பட்டால், பஞ்சாயத்துக்களால் விவசாயிகளுக்கு ஒரு நன்மை என்ற ஒரு உணர்வு மக்களிடையே ஏற்படமுடியும். அதேநேரத்தில் இம்மாதிரி ஒரு பஞ்சாயத்து இருப்பதை மக்கள் வரவேற்று பாராட்ட முடியும்.

அடுத்தபடியாக, இப்பொழுது உரங்கள், இரும்புச் சாமான்கள், இன்னும் விவசாயத்திற்கு உபயோகப்படக்கூடிய சாமான்கள் முதலியவை விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடாத நிலை இருக்கிறது. அந்த விநியோகம் எல்லாம் பஞ்சாயத்துக்களின் மூலமாக, இன்னும் விவசாயிகளுக்குத் தேவையான மற்ற பொருள்கள் கூடுமானவரை எல்லாவற்றையும் பஞ்சாயத்துக்கள் மூலமாக சப்ளை செய்யக்கூடிய ஒரு நிலையிலே அவர்களுக்கு போதிய அதிகாரமும் வசதியும் கொடுக்கப்படவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதற்கடுத்தாற்போல், கிராமங்களிலே உள்ளவர்களுக்கு கல்வி மிக முக்கியமான அம்சமாக வசதி செய்து கொடுக்கப்படவேண்டும். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் விரும்பினால், கட்டாயக் கல்வி முறையை எவ்வளவு சீக்கிரமாக தங்களுடைய பிரதேசங்களில் கொண்டுவர முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டிய வசதியை உத்தேசித்து, அவர்கள் நில வரியின் மீதோ அல்லது வேறு விதமாகவோ கவுன்சில் ஏரியாக்களுக்குள் வரி விதித்து, அந்த பணத்தைக்கொண்டு அவர்கள் கட்டாயக் கல்வி முறையை சீக்கிரமாக அமுலுக்குக் கொண்டு வரத்தக்க ஊக்கத்தை அவர்களுக்கு அளித்து, அதற்கு வசதி செய்யக் கூடிய ஒரு உறுதியை இந்த மசோதாவில் கண்டிருந்தால் மிகவும் நன்மையாக இருக்கும். இதுபோன்ற பல திருத்தங்கள் இந்த மசோதாவில் செய்யவேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தால் அதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

* **Sri N. K. PALANISAMI :** கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். இதைக் கொண்டுவந்ததன் காரணமாக, ரெவினியூ இலாகா, பொது மராமத்து இலாகா, வைத்திய இலாகாக்கள் எல்லாம் தனித் தனியாக இயங்க வேண்டும் என்பதற்குப் பதிலாக, இன்றைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கீழ் இருந்துகொண்டு தேசப் புனருத்தாரண வேலைகளிலே உதவி செய்வதற்கான ஒரு வாய்ப்பு இதனால் ஏற்பட்டிருக்கிறது.

ஒரே மரிக்கன் மாவையும், சக்கரையும் கொண்டு டில்லி பாதுஷா போன்று பலவிதமான இனிப்புப் பண்டங்களைச் செய்துவிடுகிறார்கள். அதே மாதிரி, சமாசாரங்கள் ஒன்று ஜில்லா போர்டுகளுக்குப் பதிலாக பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் இருக்கிறதேயொழிய எந்த அளவு அதிகாரம் மாற்றப்பட்டிருக்கின்றதென்பதைப் பார்க்கும்போது அது பூஜ்யமாக

22nd September 1958] [Sri N. K. Palanisami]

இருக்கிறது. "**Mountain in labour brought forth a mouse**" என்று சொல்வதுபோல, மலை கர்ப்பமாக இருந்து கடைசியில் சுண்டெலியை ஈன்றதுபோல் தான் இந்த மசோதா இருக்கிறது. 1954-ம் ஆண்டில் இந்தியாவில் இருக்கும் அத்தனை மந்திரிகளும் ஹிமாசல பிரதேசத்தில் கூடி, கிராமத்தில் இருக்கும் பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்படவேண்டும் என்று முடிவு செய்தார்கள். கிராமப் பஞ்சாயத்துக்களிலே என்ன தீர்மானங்கள் செய்யப்படுகின்றனவோ அவைகளை நிறைவேற்றத் தகுந்த அளவிலே அதிகாரங்கள் இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு வெள்ளை அறிக்கை வந்தது. அதன்பிறகு சட்டசபை அங்கத்தினர்களைக் கொண்ட கமிட்டி 3, 4 வருஷங்களாக அதை விவாதித்து அதன்பேரில் முடிவு எடுத்தார்கள். ஆனால், கடைசியில் என்ன நடந்தது? கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரம் கொடுப்பதற்குப் பதிலாக இன்று எக்ஸிக்யூடிவ் ஆபீசர்களுக்கும், கமிஷனர்களுக்கும், இன்ஸ்பெக்டர்களுக்கும் தான் விரிவான நிர்வாக அதிகாரங்கள் தரப்பட்டிருக்கின்றன. நான்கு, ஐந்து வருஷ காலமாக கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்படவேண்டுமென்று ஏகோபித்து தீர்மானம் செய்திருந்தபோதிலும், அதற்கான நடவடிக்கை எடுத்திருந்தபோதிலும், இன்றையதினம் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. அந்த அதிகாரம் கமிஷனர்களுக்கும் இன்ஸ்பெக்டர்களுக்கும் எக்ஸிக்யூடிவ் ஆபீசர்களுக்கும் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அக்டோபர் மாதத்தில் மாகாண பஞ்சாயத்துத் தலைவர்கள் மகாநாட்டில் மந்திரிகள் அத்தனை பேரும் கலந்துகொண்டார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. ராஜாராம் நாயுடு அவர்கள் அந்த மகாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் "எக்ஸிக்யூடிவ் அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் அதிக அதிகாரம் இருக்கக் கூடாது. பஞ்சாயத்துக்களுக்குத்தான் அதிக அதிகாரம் இருக்கவேண்டும்" என்று பேசியிருக்கிறார். ஆனால் இந்த சட்டத்தின்படி பஞ்சாயத்து மெம்பர் ஒரு தீர்மானம் கொண்டுவருவதைககூட எக்ஸிக்யூடிவ் ஆபீசர் தடுக்க முடியும். அது மட்டுமல்ல. டிஸ்ஸெண்டிங் மினிட் கொடுக்கவேண்டுமென்றாலுங்கூட அவருடைய அனுமதியின் பேரில்தான் கொண்டுபோக வேண்டும் என்று கமிஷனருக்கு இம்மாதிரி அதிகாரம் இருக்கிறது. இது கண்டிப்பாக குறைக்கப்படவேண்டும்.

இந்த மசோதாவின் ப்ரியாம்பிளிலே "ஜனத்தொகை அதிகரிப்பதற்கு ஏற்ற வகையில் உணவு உற்பத்தியை ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அதிகரிப்பதும் ஜனத்தொகை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதும் நாட்டு நலனுக்கு அவசியமாயிருக்கிற படியாலும் . . ." என்று கண்டிருக்கிறது. பஞ்சாயத்துக்கள் உணவு உற்பத்தியைப் பெருக்கி அதன் மூலம் எப்படி ஜனத்தொகை உற்பத்தியைக் குறைக்கமுடியும் என்று நான் கேட்கிறேன். உணவு உற்பத்தியை அதிகமாக்கினால் கல்யாணம் செய்யாதவர்கள் எல்லாம் கல்யாணம் செய்வார்கள். இப்பொழுது இருக்கும் ஜனத்தொகையைவிட அதிகப்படியான ஜனத்தொகை பெருகும். அப்படியிருக்க பஞ்சாயத்து மசோதா கொண்டுவந்ததன் காரணம் பஞ்சாயத்துக்கள் ஏற்படுவதன் காரணமாக பஞ்சாயத்துக்கள் எப்படி ஜனத்தொகையைக் கட்டுப்படுத்திவிட முடியும் என்று எதிர்பார்ப்பது வேடிக்கையாக இருக்கிறது. திட்டக் கமிஷன் என்ன சொல்லியிருக்கிறது?

"The development of Village Panchayats on the right lines has significance for several reasons. Under the impact of new developments including the growth of population, land reforms, urbanization, spread of education, increase in production and improvements in communications, village society is in a state of rapid transition. In emphasizing the interests of the community as a whole, Village Panchayats can play a considerable part in bringing about a more just and integrated social structure in rural areas and in developing a new pattern of rural leadership."

[Sri N. K. Palanisami] [22nd September 1958

என்று சொல்லியிருக்கிறது. உணவு உற்பத்தி செய்யவேண்டும். இன்னும் பல வேலைகளெல்லாம் செய்யவேண்டும். இந்த அதிகாரமெல்லாம் கிராமப் பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. நிலச் சீர்திருத்ததைப் பற்றி எத்தனையோ சட்டங்களை சர்க்கார் செய்திருக்கிறது. இவைகளையெல்லாம் அமுலாக்கு வதற்கு உதவிகரமாக பஞ்சாயத்துக்களுக்கு. அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றனவா என்று நான் கேட்கிறேன். அதுமட்டுமல்ல, லாண்டு யுடிலைசேஷன் ஆர்டர் இருக்கிறது. கிராமத்திலே ஏதாவது தகராறு வந்தால் சர்க்காரே அந்த பூமியை தகராறு தீரும் வரையில் எடுத்துக் கொள்ளலாம் என்பதற்காக அந்த உத்திரவு இருக்கிறது. அந்த லாண்டு யுடிலைசேஷன் ஆர்டரைப் பஞ்சாயத்துக்கள் சரியான முறையில் அமுலாக்க முடியும், அவைகளுக்கு அதிகாரம் கொடுக்கப்படுமானால். ஆனால் அத்தகைய அதிகாரங்கள் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா ? இல்லை. கிராமப் பஞ்சாயத்து ஏரியாவில் சிறு சிறு தகராறு ஏற்பட்டால் அதை விசாரித்து தீர்மானம் செய்வதற்கும் அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமென்று அன்றைய தினம் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது அதுவும் இந்த மசோதாவில் காணப்படவில்லை. உணவு உற்பத்தியை நாம் அடிப் படையாகக் கொண்டிருக்கிறோம். கிராமத்திலே ஏராளமான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் பஞ்சாயத்து ஏரியாவில் இருக்கும் சிறு சிறு உழவர்களுக்கு கொடுத்து உணவு உற்பத்தியைப்
11–40 a.m. பெருக்க முடியும். அதுமட்டுமல்ல. பஞ்சாயத்து மூலமாக கிராம பாங்குகள், இன்னும் உரம் இம்மாதிரியான வினியோகத்தைச் செய்வதற்கு வேண்டிய அதிகாரத்தைச் கொடுக்காமல் ப்ரீயாம்பிளில் மாத்திரம் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்றால் எப்படி ? சர்க்கரை என்று காகிதத்தில் எழுதிவிட்டால் மாத்திரம் இனித்துவிடாது. இதில் புதிய மாற்றம் ஒன்றும் இல்லை. பழைய நிலைமையேதான். அதுவேதான் திரும்பவும் அமைக்கப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். அதுமட்டுமல்ல. இன்னும் செக்ஷன் செக்ஷனாக எடுத்துக் கொண்டால் வார்த்தைகளிலும் தவறு இருக்கிறது, அர்த்தத்திலும் தவறு இருக்கிறது.

உதாரணமாக செக்ஷன் 10, நம். 3—

"'The number notified under sub-section (1) or the number as altered by notification under sub-section (2) shall not be less than five or more than fifteen ".

என்று இருப்பதற்குப் பதிலாக இவ்வளவு பேர்கள் இருந்தால் இவ்வளவு மெம்பர்கள் என்று திட்டமாகச் சொல்வதற்கு என்ன ? ஏன் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது ?

செக்ஷன் 16-ல்—

"For the purpose of electing members to a panchayat, the Inspector shall, after consulting the panchayat, if any by notification, divide the village or town into wards and determine the number of members to be returned by each ward in accordance with such scale as may be prescribed."

என்று இருக்கிறது. பஞ்சாயத்து போர்டு மெம்பர்களைக் கலந்து கொண்டு என்பதற்குப் பதிலாக அவர்களால் நிறைவேற்றுகிற தீர்மானப்படி என்று ஏன் போடக் கூடாது ? அதேமாதிரி செக்ஷன் 20 (2)-ல்—

"The name of any person shall not be included in the Electoral roll for a Panchayat in more than one place " என்று இருப்பதற்குப் பதிலாக . . . for more than a panchayat in more than one place"

என்று இருக்கவேண்டும்.

MR. SPEAKER : I am sure the hon. Member has given notice of amendments to these clauses.

22nd September 1958]

SRI N. K. PALANISAMI : இப்படிப் பல இடங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டியிருப்பதால் தான இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

SRI S. RAMASAMI NAIDU : கனம் சபாநாயகர் அவர்களே, பெற்ற சுயராஜ்யமானது கிராம ராஜ்யமாகத் திகழவேண்டுமென்று நம் பெரியவர்கள் ஆசைப்பட்டார்கள். கிராமத்திற்கு ஒருவாறு ஆட்சி முறையை வழங்கவேண்டுமென்று முன் வந்திருந்தாலும்கூட பூர்ண ஆட்சி முறையை வழங்குவதற்கு இப்போது சர்க்கார் முன் வந்திருக்கிறார்கள். பெற்ற இந்த சுதந்திரம் "ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுவோமே" என்று கிராம மக்களை எல்லாம் ஆடிப்பாடி வைத்த பாரதியாரின் வாக்கை மெய்பிக்க—உண்மையான ஆனந்த சுதந்திரமாக கிராம மக்களுக்கு மிளிர வேண்டும் என்பதற்கு இந்த மசோதா வழி செய்கிறது. இந்தச் சமயத்தில் கிராமத்திலுள்ள மக்கள் தங்கள் காரியங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொள்வதற்குச் சக்தி உடையவர்களா என்று நாம் சந்தேகப்படவேண்டாம். நம்மை எல்லாம் தேர்ந்தெடுத்து அவர்கள் அனுப்பியிருப்பதில் இருந்தே அவர்களுடைய சக்தியை தெரிந்து கொள்ளலாம். கிராமங்களில் படித்தவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்குக் குறுகிய சுற்றுப்புற சூழ்நிலை இருப்பதால் விரிந்த பரந்த அறிவு அவர்களுக்கு இராது. சண்டையும் சச்சரவும் செய்து கொண்டே இருப்பார்கள் என்று சொல்வது முற்றிலும் பொருந்தாத வாதம். ஆகவே இன்றைய தினம் இந்தச் சட்டத்தின் மூலமாக அவர்களுக்குப் பூர்ண சுயராஜ்யம் கொடுக்கவேண்டியது மிகமிக அவசியம். இதிலே ஜில்லா போர்டுகளை எடுத்து விட்டு அந்தக் கிராம மக்களுக்கு சுயராஜ்யம் கொடுக்க வேண்டுமா என்பது ஒரு கேள்வி. என் போன்றவர்கள் ஜில்லா போர்டுகளை எடுக்காமலேயே கிராம மக்களுக்கு சுயராஜ்ய உரிமையை வழங்கி இருக்கலாம் என்கிற அபிப்பிராயப்பட்டுக் கொண்டிருந்தாலும் கூட ஜில்லா போர்டு போனாலும் அக்கறை இல்லை கிராமத்திற்கு சுயராஜாங்கம் கிடைக்கிறது அதுபோதும் என்கிற பெருமிதத்துடன் இந்த மசோதாவை முழுமனதுடன் ஆதரிக்க முன் வந்திருக்கிறோம்.

இந்தத் திட்டத்தை உருப்படியாக்குவதில் நான் பூர்ண பங்கு எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்றாலும் முடிந்த அளவில் இன்றைக்கு இதில் சில குறைபாடுகளை காணத்தான் செய்கிறேன். தானே செதுக்கிய சிற்பமாக இருந்தாலும் கூட—அதைப் பூர்ணமாக வெற்றியுடன் முடித்துவிட்டோம் என்கிற சந்தோஷமும் பெருமிதமும் ஒரு பக்கத்தில் இருந்தாலும் கூட—தான் அமைத்த சிற்பத்திலே காணப்படும் ஒன்றிரண்டு குறைபாடுகளைக் காணும்போது சிற்பிக்கு சந்தோஷமும் கலந்த துக்கம் உண்டாகத்தான் செய்கிறது. அப்படி நானும் இன்றைக்கு சந்தோஷத்தோடு சிறுது வருத்தமும் காணப்படுகிற குறைபாடுகளுக்காக அடைகிறேன். இருந்தாலும் சில குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும் நோக்கம் நல்லதாகக் கொண்டு இந்த மசோதா அமைந்திருக்கிறது. குறைந்த கால அளவில் கிராம மக்களுடைய தேவைகள் என்ன அவர்களுடைய குறைபாடுகள் என்ன என்பதைக் கேட்டறிவதில் மனது இல்லாத பலர் இருக்கிற நாட்டிலே இன்றைக்கு சுயராஜ்ய உரிமை மக்களுக்கு வழங்குவதில் சில குறைபாடுகள் இருந்தாலும் இருக்கிற பாக்கியுள்ள 3 ஆண்டு காலத்திலே அவற்றைத் திருத்திக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்கிற நினைப்பினால் ஆறுதலுற்று, அந்த மன நிறைவினால், இந்த மசோதாவை முழு மனதுடன் வரவேற்கிறேன்.

இன்றைக்குக் கிராம மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அரசு உரிமையில் சில கட்டுப்பாடுகளைக் காண்கிறோம். நாட்டில் சாதாரணமாக மனிதன் எந்த வஸ்துவை எந்தப் பொருளை அதிகமாக விரும்புகிறானோ நேசிக்கிறானோ அந்தப் பொருளிடம் அந்த வஸ்துவினிடம் மற்றவர்கள் யாரும் அதிகமாக நெருங்கக் கூடாது என்கிற மனோபாவம் உடையவனாக இருப்பது இயற்கை. அது மனித சுபாவம். அப்படி அதிகார மனப்பான்மை உடையவர்கள் அதனிடத்தில் மற்றவர்கள் அதிகமாக நெருங்கிவிடக்கூடாது

என்பதற்காகத்தான் இந்தக் கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறார்களோ என்று எண்ணவேண்டியிருக்கிறது. அந்தக் கட்டுப்பாடுகள் எல்லாம் சிறிது தளர்த்தப்படவேண்டுமென்பது என் ஆசை.

கனம் அங்கத்தினர் ஒருவர் பேசுகின்றபோது கிராமத்துத் தலைவர் தான் பிராந்திய கவுன்ஸிலுக்கு அங்கத்தினராக இருக்கவேண்டுமென்று தெரிவித்தார். அப்படி இல்லாவிட்டால் கிராமத்தின் ஒவ்வொரு விஷயங்களையும் சரியான முறையில் எடுத்துச் சொல்ல சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும் என்று சொன்னார். கிராம பஞ்சாயத்து காரியத்திற்கு சிலரை விட்டுவிட்டு ஒரு சிலர் கிராமத்திலேயே நல்ல அநுபவம் உள்ளவர் பிராந்திய கவுன்ஸிலில் தாம் இருந்து பணியாற்றலாம் என்று நினைக்கக் கூடும். இதற்கும் வசதி இருக்கவேண்டுமென்ற காரணத்திற்காகத்தான் பிராந்திய கவுன்ஸிலில் கிராம பஞ்சாயத்தில் உள்ளவரோ இல்லாதவரோ அங்கம் வகிக்கலாம் என்று செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே அதை ஒரு குறையாக எடுத்துச் சொல்ல இடம் இல்லை.

அதோடு கிராம ராஜ்யம் நன்றாக நடக்கவேண்டுமானால், கிராமத்தில் இருக்கும் உணவு பற்றாக்குறை தீரவேண்டுமானால், தேசீய விஸ்தரிப்புத்திட்டம் இந்தப் பிராந்திய கவுன்ஸிலுடன் இணைக்கப்படவேண்டுமென்பது மிகமிக அவசியம். அதற்குச் சர்க்காருடைய அங்கீகாரம் பெற வேண்டுமென்ற நிபந்தனை இருந்தாலும் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய எண்ணம். கோரிக்கையும் கூட.

எது எப்படியிருந்தாலும் கூட கிராமாந்திரங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் பண உதவி பலவிஷயங்களில் போதாது. கிராம ரஸ்தாக்களை நிர்வகிப்பதற்குப் போதுமான பணத்தைச் சர்க்கார் தான் கொடுத்து உதவவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டாவது கல்வி அபிவிருத்தி விஷயமாக மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் கல்லாதவர்களை இல்லையென்று செய்துவிட முடிவு எடுத்திருக்கிறோம். அப்படி இருக்க இப்போது கல்விக்காக பிராந்திய கவுன்ஸிலுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை மிகக் குறைவாக இருப்பது சரியல்ல. அதற்கும் தகுந்த வழி கண்டுபிடிக்கவேண்டுமென்பது என் கோரிக்கை.

இந்தமாதிரியாக கிராம மக்களுக்கு சுயராஜ்ய அரசு உரிமை வழங்கப் படுகிற நேரத்தில் கட்டுப்பாடுகளைத் தாராளமாக நிவர்த்தி செய்து அபிவிருத்திக் காரியங்களுக்குப் போதுமான நிதியையும் ஒதுக்கி வைத்து அவர்கள் எல்லோரும் உற்சாகமாக ஈடுபட தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நல்லெண்ணத்துடன் இவ்வளவு
11.50 a.m. நல்ல முறையில் இந்த மசோதாவைத் தயாரித்திருக்கும் கனம் அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். பஞ்சாயத்துக்களின் மூலம் கிராம மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நாங்கள் பல ஆண்டு காலமாகவே விரும்பி வந்திருக்கிறோம். பஞ்சாயத்துக்களின் மூலம் நாம் சேவை செய்தால் மக்கள் உற்சாகமடைந்து நம்முடன் ஒத்துழைப்பார்கள். அவர்களுடைய உற்சாகத்தைத் தூண்டுவதற்கு பஞ்சாயத்துக்கள் நல்ல முறையில் அமைய வேண்டும் என்று வெகு காலமாகவே நாங்கள் சொல்லிவந்திருக்கிறோம். இந்த மசோதா நன்றாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த மசோதாவை முழுமனதுடன் ஆதரிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

SRI K. VASUDEVAN : கனம் சபாநாயகர் அவர்களே நம் ராஜ்யத்தில் இப்போதுள்ள பஞ்சாயத்துக்களைத் திருத்தியமைப்பதற்கான மசோதா சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் வெகு காலமாக கிராமப் பஞ்சாயத்துக்களும் முனிசிபாலிடிகளும் ஜில்லா போர்டுகளும் ஜனங்களுக்குப் பயன்படும் வகையில் இயங்கி வந்திருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் அந்த ஜில்லா போர்டுகளும் முனிசிபாலிடிகளும் பஞ்சாயத்துகளும் சரியான முறையில் திருத்தி அமைக்கப்படவில்லை என்று நீண்ட நாட்களாக சர்க்காரிடம் முறையிடப்பட்டு வந்திருக்கிறது. ஸ்தல ஸ்தாபனங்களை மாற்றியமைப்பது சம்பந்தமாக ஒரு வெள்ளை அறிக்கை சென்ற சட்ட சபைக் கூட்டத்தில் சபையில் சமர்ப்பிக்கப்

22nd September 1958] [Sri K. Vasudevan]

பட்டது. ஸ்தல ஸ்தாபனங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்ற நோக்கம் அவ் வெள்ளை அறிக்கையில் சர்க்காரால் வெளியிடப்பட்டிருந்தது. அதையொட்டி ஜில்லா போர்டுகளை ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்கள் என்று மாற்றியமைப்பதற்கான மசோதா இந்த சபையில் கொண்டுவரப்பட்டது. அந்த மசோதாவைக் குறித்து சபையில் விவாதம் நடந்தபோது மசோதா ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்களுக்கு சரியான ஸ்தானத்தைக் கொடுக்கவில்லை என்றும் ஜில்லா அபிவிருத்திக் கவுன்சிலை மசோதா ஒரு அட்வைசரி கமிட்டியாகவே அமைக்கிறதென்றும் கவுன்சில்களுக்கு போதிய அதிகாரம் கொடுக்கவில்லை என்றும் பல கனம் அங்கத்தினர்கள் எடுத்துரைத்தார்கள். ஆனால் அப்போது கனம் நிதி அமைச்சர் பதிலளிக்கையில் ஜில்லா போர்டுகள் பரவலாக இருப்பதால்தான் அவை அட்வைஸரி பாடிகளாக அமைக்கப்படுகின்றன என்றும் அவைகளுக்கு அதிகாரங்கள் கொடுக்கவேண்டுமென்றால் பஞ்சாயத்துக்களின் அதிகாரங்களையும் பஞ்சாயத்து கவுன்சில்களின் அதிகாரங்களையும் எடுத்துத்தான் கொடுக்கவேண்டுமென்றும் அவ்வாறு செய்வது சரியாக இருக்காது என்றும் பஞ்சாயத்து அடிப்படையில் "டீசென்ட்ரலைஸேஷன்" பண்ண வேண்டுமென்ற கொள்கையை ஒத்துக்கொண்டால் பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்துக் கவுன்சில்களுக்கும் தான் அதிக அதிகாரங்கள் கொடுக்கவேண்டுமென்றும் எடுத்துரைத்தார். அது ஒத்துக்கொள்ளப்படவேண்டிய விஷயம் தான். ஏனென்றால் ஜில்லா போர்டுகளை மாற்றியமைக்க வேண்டுமென்ற முறையீடு வெகு காலமாகச் செய்யப்பட்டபோது சேம்பர் ஆப் டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெஸிடென்ட் செய்த சிபாரிசுகளில் ஜில்லா போர்டுகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பொறுப்புகளெல்லாம் தாலுகா போர்டுகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பது ஒன்று ஆகும். அதையொட்டிப் பார்த்தால் இப்போது ஜில்லா போர்டிடமிருந்து நீக்கப்பட்டிருக்கும் பொறுப்புகள் எல்லாம் பஞ்சாயத்துக் கவுன்சிலுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் ரொம்ப நன்றாக இருந்திருக்கும் என்று கூறுவேன். ஜில்லா போர்டுகளை நாம் ரத்து செய்துவிட்டோம். அவைகளுக்குப் பதிலாக ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்களுக்கு அதிகாரம் எதுவும் கிடையாது என்று இந்த சபையில் அறிவிக்கப்பட்டுவிட்டது. முனிசிபல் எல்லைக்குள் முனிசிபாலிடிகள் எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கின்றனவோ, அவ்வாறுதான் பஞ்சாயத்துக் கவுன்சில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றது. முனிசிபாலிடியில் கமிஷனருக்கு எல்லா அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருக்கும். கமிஷனரும் முனிசிபல் கவுன்சிலர்களும் சேர்ந்து எல்லாக் காரியங்களையும் செய்வார்கள். அம்மாதிரித்தான் இப்போது பஞ்சாயத்துக் கவுன்சில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஜில்லா போர்டில் எக்ஸிக்யூடிவ் அதிகாரங்கள் பூராவும் ஜில்லா போர்டு தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. ஆகையால் அதை "டீஸென்ட்ரலைஸ்" பண்ணவேண்டுமென்றால் பஞ்சாயத்து கவுன்சில் சேர்மனிடம் அந்த அதிகாரங்கள் அனைத்தையும் கொடுத்தால் அது ஒத்துக்கொள்ளக்கூடியது. ஆனால் அப்படியில்லாமல் முனிசிபல் நிர்வாகத்தில் இருப்பதுபோல் இந்த அதிகாரங்கள் எல்லாம் கமிஷனருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை நாங்கள் எப்படி "டிசென்ட்ரலைஸேஷன்" என்று ஒத்துக்கொள்ள முடியும். இது "டீஸென்ட்ரலைஸேஷன்" ஆகாது. சென்னைத் தலைநகரிலிருந்து முனிசிபல் கமிஷனர் மூலம் கிராமத்தில் அதிகாரம் செலுத்துவதற்கான ஏற்பாடு இது என்று தான் சொல்ல வேண்டியிருக்கின்றது. ஆகையால் இந்த ஏற்பாட்டை மாற்றி பூரா அதிகாரங்களையும் பஞ்சாயத்து யூனியனுக்கே கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். கமிஷனர் எப்படி பஞ்சாயத்துக் கவுன்சிலுடன் ஒத்து நடக்கப் போகிறார் ? பஞ்சாயத்துக் கவுன்சிலுக்கும் கமிஷனருக்கும் என்ன தொடர்பு இருக்கிறது. கமிஷனரின் மீது பஞ் ாயத்துக் கவுன்சில் என்ன அதிகாரம் செலுத்த முடியும் ? பஞ்சாயத்துக் கவுன்சிலின் ஒரு தீர்மானம் நிறைவேறினால் கமிஷனர் அதை ஏற்று நடத்துவதானால் நடத்தலாம் நடத்தாமலும் விடலாம் ; அவர் இஷ்டப்படி செய்யலாம். மசோதா அப்படித்தான் அமைந்திருக்கிறது. ஒரு கமிஷனர் யதேச்சாதிகாரமாக நடந்துகொண்டால் அவர் மீது எப்படி நடவடிக்கை எடுக்க முடியும் ? சேர்மனை நீக்குவதற்கு பஞ்சாயத்து சபைக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கமிஷனரை மாற்றவோ நீக்கவோ பஞ்சாயத்து சபைக்கு அதிகாரம்

கிடையாது. ஏற்கனவே இருந்த முனிசிபாலிடிகள் சட்டத்தில் கமிஷனரை மாற்றுவதற்கும் நீக்குவதற்கும் பஞ்சாயத்து சபைக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது அந்த அதிகாரமும் பறிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கும் கமிஷனரை மாற்றுவதற்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. அடுத்தபடியாக கமிஷனருக்கு சிப்பந்திகளை நியமிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் முனிசிபாலிடியில் அந்த அதிகாரம் ஒரு கமிட்டிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வெள்ளை அறிக்கையில் முனிசிபாலிடிகள் சட்டத்தைத் திருத்தியமைக்கவேண்டுமென்று சர்க்காரால் ஒப்புக்கொள்ளப்பட்ட இடத்தில் 50 ரூபாய்க்கு மேல் மாதச் சம்பளம் வாங்கும் சிப்பந்திகளை நியமிக்கும் அதிகாரம் ஒரு கமிட்டிக்குக் கொடுக்கப்படவேண்டும் என்பதும் 50 ரூபாய்க்குக் குறைவான சம்பளம் வாங்கும் சிப்பந்திகளை சேர்மனே நியமிக்கலாம் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது.

12 noon அப்படி பார்க்கப்போனால் இப்பொழுது 50 ரூபாய்க்கு மேற்பட்ட சிப்பந்திகளை நியமிக்க பஞ்சாயத்து யூனியனில் ஒரு கமிட்டியை ஏற்படுத்தவும் 50 ரூபாய்க்கு கீழ்ப்பட்ட சிப்பந்திகளை நியமிக்க பஞ்சாயத்து யூனியன் சேர்மனுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடிதயாக பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அவர்கள் திடீரென்று ஊரைவிட்டு போய்விட்டாலும் சரி அல்லது செத்துப் போய்விட்டாலும் சரி அந்த அதிகாரத்தை யாரிடம் ஒப்படைப்பது என்ற விஷயத்தைப் பார்த்தால் இதே மாதிரி முனிசிபல் சட்டத்தில் அந்த அதிகாரத்தை சேர்மனே எடுத்து நடத்தலாம் என்று குறிப்பிட்டு இருக்கிறது. அதேபோல் முனிசிப்பல் சட்டத்தையொட்டி பஞ்சாயத்து யூனியன் சட்டத்திலும் ஒரு ஷரத்து இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்பெ ழுது எம். எல். ஏ-க்கள் பஞ்சாயத்து யூனியன்களில் அங்கம் வகிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதே மெம்பர் பஞ்சாயத்து யூனியன் தேர்தலுக்கு நிற்கலாம். அப்படி பார்க்கும்போது எம்.எல்.ஏ.-க்கள் பஞ்சாயத்து எலெக்டரல் ரோலில் மெம்பராக பதிவு செய்யப்பட்டிருந்தால் தான் அந்த பஞ்சாயத்து தேர்தலில் அவர் நிற்க முடியுமென்று ஒரு ஷரத்து இருக்கிறது. சில பஞ்சாயத்துக்கள் யூனியன் முனிசிபாலிட்டியோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது எம்.எல்.ஏ.-க்கள் முனிசிப்பல் ரோலில் பதிவு செய்யப்பட்டிருந்தால் அவர்கள் இந்த பஞ்சாயத்து யூனியன் மெம்பராக வரமுடியுமா என்பது சந்தேகமாகயிருக்கிறது. ஆகவே எம்.எல்.ஏ.க்கள் எக்ஸ்-அபிஷியோ மெம்பராக" வரும்போது அவர்களுக்கு வோட்டளிக்கும் உரிமையும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் சில பஞ்சாயத்து யூனியன்களில் எல்.எல்.ஏ.க்கள் நின்றால் ஏற்கனவே அவர் மெம்பர் என்ற முறையில் " டிஸ்க்வாலிபிகேஷன் க்ளாஸ் " இருக்கிறது. ஏற்கனவே மெம்பராக இருப்பவர் பஞ்சாயத்து யூனியனில் மெம்பராக " நாமினேஷன்" போட லாயக்கில்லை என்று ஷரத்து இருக்கிறது. அதன் கீழ் அவர்கள் நீக்கப்படலாம். ஆகவே அதையும் தவிர்த்து எம்.எல்.ஏ.க்கள் எக்ஸ்-அபிஷியோ மெம்பராக வரும்போது அவர்கள் சேர்மனாக வர உரிமை இல்லாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் அவர்களுக்கு அச்சபையில் பூர்ண பங்கு எடுத்துக்கொள்ள உரிமையிருக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திக் திக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக ஏற்கனவே இருந்த பஞ்சாயத்துக்களுக்கு " மெஜிஸ்டீரியல் கொடுக்கப்பட்டிருந்தது. அது இப்பொழுது நீக்கப்பட்டிருக்கிறது. அப்படி நீக்கப்படும்போது அந்த பஞ்சாயத்து யூனியன்களுக்கு பஞ்சாயத்து கோர்ட் ஒன்று நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த பஞ்சாயத்து சட்டம் முனிசிப்பல் சட்டத்தையும் ஜில்லா போர்ட் சட்டததையும் யொட்டி இருப்பதினாலும் இந்த சட்டத்தை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டபோதிலும் இச்சட்டம் நன்றாக அமைக்கப்பட்டிருக்கும் முறையில் அது நீடித்திருக்கவேண்டுமென்று நாம் ஏற்படுத்திய கமிட்டியாரால் ஒப்புக்கொள்ளப்பட்டதாலும் இது நல்ல சட்டம் ஆனால் சிறிய மாறுதல்களுடன் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற எனது அபிப்பிராயத்தைக் கூறிக்கொண்டு நான் எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

22nd September 1958]

*SRI M. SELVARAJ : மதிப்பிற்குரிய சட்டமன்ற தலைவர் அவர்களே இப்பொழுது இச்சபையின் முன் கொண்டுவந்திருக்கும் கிராமப் பஞ்சாயத்து, நகரப் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில் இவைகளை அமைக்கக் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவைப் பொறுக்கு கமிட்டிக்கு விடவேண்டுமென்று நானும் கோவிந்தசுவாமி அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இப்பொழுது நமக்கு சர்க்காரால் கொடுக்கப்பட்டிருக்கும் மசோதாவில் 298-வது பக்கத்திலே —

"It is a directive principle of State policy embodied in the Constituiton that the State should take steps to organize village panchayats and endow them with such powers and authority as may be necessary to enable them to function as units of Self-Government, " என்று கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பூரா மசோதாவையும் பரிசீலனை செய்து பார்க்கும்போது கிட்டத்தட்ட 198 செக்ஷன்கள் இருக்கின்றன. இதில் கிராம பஞ்சாயத்துக்கும் நகர பஞ்சாயத்துக்கும் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலுக்கும் எந்தவிதமான அதிகாரமும் வழங்கப்படவில்லை. எல்லா அதிகாரங்களையும் நிர்வாக அதிகாரியிடமும் கமிஷனரிடமும் அதற்குமேல் இன்ஸ்பெக்டர் ஆப் லோக்கல் போர்ட்ஸ்-யிடமும் அதற்கு மேல் சர்க்காரிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. கிராம ராஜ்யம் அமைக்கப் போகிறோம் என்று சொல்லி அப்படி அமைக்கும்போது கிராம சபைகளுக்கு எந்தவிதமான அதிகாரமும் வழங்கப்படாதது கிராம ராஜ்யம் அமைக்க வேண்டுமென்ற குறிக்கோளிற்கே நேர் விரோதமாகும். அதிகாரிகளிடமே எல்லா அதிகாரங்களையும் ஒப்படைத்தால் கிராமப் பஞ்சாயத்துக்கள் அல்லது நகரப் பஞ்சாயத்துக்கள் நல்ல முறையில் வளர வாய்ப்பு இருக்காது. ஆகவே இதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு செக்ஷனையும் பார்க்கும்போது க்ளாஸ் 5-ல் குறிப்பாக மேஜர் பஞ்சாயத்துக்களில் ஜனத்தொகை 20,000-க்குமேல் இருக்குமானால் அப் பஞ்சாயத்துக்கள் தங்கள் பஞ்சாயத்துக் கூட்டத்தில் தீர்மானம் செய்து அதை ஒரு முனிசிபாலிட்டியாக அமைக்கவேண்டுமென்றால் அதற்குப் பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் அனுமதி அளித்தால்தான் அப்படி மாற்ற முடியும் என்ற விதி இருக்கிறது. அந்த விதியை மாற்றியமைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். க்ளாஸ் 9-ல் எந்த விதமான முடிவும் எடுக்கப்படாவிட்டால் சர்க்கார் எடுக்கும் முடிவைப்பற்றி கோர்ட்டில் ஆட்சேபனை செய்யக்கூடாது என்றதொரு நிலை இருக்கிறது. சர்க்கார் எடுத்த முடிவு பற்றி நீதிமன்றத்தில்தான் அது சரியா இல்லையா என்பதுபற்றித் தீர்ப்புக் கொடுக்கும்படியான முறையில் இதைத் திருத்தியமைக்கவேண்டும். க்ளாஸ் 12-ல் ஒவ்வொரு கிராம பஞ்சாயத்தும் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலுக்கு ஒரு அங்கத்தினரைத் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி அனுப்பும்போது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பஞ்சாயத்து அங்கத்தினரோ அல்லது பஞ்சாயத்துத் தலைவரையோ யூனியனுக்கு அனுப்பலாமே தவிர வாக்காளர் ஜாபிதாவில் உள்ள எவரையாவது அனுப்பலாம் என்று இருப்பதை மாற்றவேண்டும். பஞ்சாயத்தில் சம்மந்தப்படாத ஒருவரையும் அந்த இ த்தில் புகுத்தக்கூடாது. ஆகவே கிராம மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து அங்கத்தினர் ஒருவரைத் தான் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலிற்கு அனுப்பலாம் என்ற விதியை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று வாக்காளர் ஜாபிதா பட்டியல் தயார் செய்யப்படும்போது ஒவ்வொரு வார்டிற்கும் தனியான வாக்காளர் பட்டியல் அந்தந்த விதிக்கு ஒரு வாக்காளர் பட்டியல் தயார் செய்தால்தான் தேர்தலுக்கு நிற்பவர்களுக்குச் சௌகரியமாக இருக்கும். ஆகவே இதையும் மாற்றியமைக்க வேண்டும். தேர்தல் சம்பந்தமாக ஏதாவது தவறு செய்து விட்டால் ஒரு மெம்பரை "டிஸ்க்வாலிபை" செய்யும்போது அவருக்குள்ள தண்டனை ஐந்து வருடம் என்று இருப்பதை மாற்றி ஒன்று அல்லது இரண்டு வருடம் கொடுத்தால் போதும். ஒரு குற்றம் செய்ததற்காக ஐந்து வருடம் தேர்தலில் போட்டி போட முடியாது என்று இருக்கும் நிலையைத் தவிர்க்க வழி முறைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக இப்பொழுது பஞ்சாயத்துத் தலைவர்களை அந்தந்தப் பஞ்சாயத்து அங்கத்தினர்

[Sri M. Selvaraj] [22nd September 1958

களைக்கொண்டே தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதில் பல கஷ்டங்கள் உள்ளன. ஆகவே இதை மாற்றி அமைக்க தலைவர் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று விதியை மாற்றி அமைக்கவேண்டுகிறேன். Highways Road களைப் பராமரிப்பு பஞ்சாயத்துக்கு விடப்பட்டு இருக்கிறது.

(Deputy Speaker in the Chair.)

12-10 p.m. இவ்விதம் ஏற்படும் செலவுகளை எல்லாம் பஞ்சாயத்து பொறுப்பேற்க வேண்டும் என்ற முறையில் விட்டிருக்கிறார்கள். இவ்விதம் பராமரிப்பு முறையை ஏற்றுக்கொள்ளும்போது அதற்கான செலவைச் சர்க்கார் கடைசியாக ஈடு செய்து கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதோடு இப்போது இருந்து வருகிற பஞ்சாயத்துகளுக்கு சில அதிகாரங்கள் இருக்கின்றன. அவ்விதம் சுயேச்சையாக பாக்டரிகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் லைஸன்ஸ் வழங்குவதற்கும் அதிகாரங்கள் இருந்து வந்தது. இனிமேல் அந்த அதிகாரங்கள் பறிக்கப்பட்டு பஞ்சாயத் யூனியன் கவுன்ஸிலின் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் ஏற்படுத்தும் போது பஞ்சாயத்துகளுக்குப் பண வசதியில்லாத நிலைமை ஏற்படும். ஆகவே இந்த நிலைமை ஏற்படாமல் இருப்பதற்காக இந்த அதிகாரங்களைப் பஞ்சாயத்துகளிடமிருந்து பறிக்காமல் இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக இப்போது பி. பி. ஆர். ஆக்ட்டை இதன்படி கிராமப் பஞ்சாயத்திடம் அனுமதி பெற்றுத்தான் சினிமா ஆட்டம் நடத்துவது முதலியவைகளை நடத்த முடியும். இப்போதுள்ள சட்டப்பிரகாரம் இதற்கு அனுமதி கொடுக்கிறார்கள் என்றால், இதைப்பற்றி டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீஸர் இது சம்பந்தமாக வந்திருக்கின்ற மனுவைப் பரிசீலித்து அனுமதி கொடுக்கலாம் என்று கூறின பிறகுதான் அனுமதி கொடுக்கிறார்கள். ஆகவே இப்போது இருக்கின்ற முறை நல்ல முறைதான். இந்த அதிகாரம் பஞ்சாயத் யூனியனுக்கு மாற்றப்படுமானால் பஞ்சாயத்துக்குப் பண வசதியில்லாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே இதை மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றிப் பொறுக்கு கமிட்டி பரிசீலித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது தவிர இப்போது கிராம பஞ்சாயத்துக்களுக்கும் நகரப் பஞ்சாயத்துகளுக்கும் ஒரே விதிமுறை தான் இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது இருக்கின்ற சில நகர பஞ்சாயத்துகளை எடுத்துப் பார்த்தால் சுகாதார வசதியற்ற நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆங்காங்கு பல இடங்களில் சாக்கடைத்திட்டங்கள், லைட் வசதி செய்து கொடுக்கும் திட்டங்கள், போக்குவரத்துத் திட்டங்கள், குடிதண்ணீர்த் திட்டங்கள் முதலியவைகள் எல்லாம் செய்யவேண்டும் என்றால் பண வசதி வேண்டும். அதற்காக அவர்களுக்குப் பண வசதி கிடைப்பதற்குத் தகுந்த முறையில் அதிகாரங்களை வழங்கவேண்டும். ஹௌஸ் டாக்ஸ் போன்றவைகளுக்குள்ள அதிகாரங்களைப் பஞ்சாயத்துகளுக்கே கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக கனம் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த ஸ்டேட்மெண்டில் இந்த மாநிலத்தை 358 யூனியன்களாகப் பிரிக்கப்போவதாகக் குறிப்பிட்டார்கள். அப்படிப் பார்க்கும்போது இப்போது ஜில்லா போர்டு முதலான ஸ்தாபனங்களில் வேலை செய்துகொண்டிருக்கும் உத்தியோகஸ்தர்களின் நிலைமை என்ன என்பது தெரியவில்லை. எங்களை எந்தெந்த இலாகாக்களில் போடப்போகிறீர்கள் என்று அவர்கள் கூக்குரல் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை வெளியே விட்டுவிடாமல் இப்போது இருக்கும் உத்தியோகஸ்தர்களை எல்லாம் அந்தந்தப் பகுதிகளிலேயே சேர்த்து அவர்களுக்குப் பென்ஷனபிள் ஜாப் என்ற முறையில், ஓய்வு பெறக்கூடிய நேரத்தில் அவர்களுக்கு பணவசதி கிடைக்கின்ற முறையில் அவர்களை மற்ற அதிகாரிகளைப்போல் இவர்களைச் சேர்த்து வைத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த அளவோடு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*SRI C. R. RAMASWAMI: Mr. Deputy Speaker. This is perhaps the most important piece of legislation that has been undertaken by this House after its inception. This Bill contains as many as 198 clauses. It also contains revolutionary proposals

22nd September 1958] [Sri C. R. Ramaswami]

covering the whole field of local administration and local self-Government. It aims at abolishing the District Boards altogether and in their place constituting what are known as Panchayat Union Councils wherever feasible. The proposals, though far-reaching and revolutionary in character aim at providing better service and a better form of administration in the Panchayats and Panchayat Union areas. The object of the Bill as has been explained by the Hon. Minister for Local Administration is to provide panchayats for every village and a town panchayat for villages with a population of 5,000 and more with a minimum income of Rs. 10,000 and Panchayat Union Councils for the area comprised in the Community Development Blocks. This system of local-self Government is perhaps the best and most suited to the present-day needs and our proposals and our objectives are to provide better standards and conditions of living, better amenities to our villages, etc. Could this have been achieved by the existing system of local administration? No! District Boards had become very unwieldy. They were not yielding good results. The districts were far too big and the works to be attended to had also become enormous. That is why the Government have introduced what are known as Community Development Blocks, restricting the developmental schemes to certain areas and providing for quick and rapid development of these areas. With this objective in view, the Community Development Blocks, the National Extension Service Schemes and other similar National activities have been embarked upon. If these activities are to be stimulated and further progress is to be achieved, the only method by which it can be done is by associating popular and elected representatives with these regional units so that the full impact of any development scheme can be brought to bear upon the people who really benefit by them. Only with this object, the Government have come forward with the constitution of Panchayat Union Councils and these Councils, as envisaged at present, will provide greater stimulus to the growth of the developmental activities.

Sir, when such reforms are considered, naturally the question of finance arises. Without finance and without adequate provision for finance, no Bill however well-drafted it may be will be of any use. The Local Administration Sub-Committee which dealt with this question have very thoroughly gone into the question and they have stated that with the existing levels of taxation and grants from Government each Panchayat was getting about 275 Naye Paise per capita of population and they have suggested that it should be raised to 600 Naye Paise per capita of population. This is based on a minimum standard to be attained by the panchayats. The proposals have only been designed with this perspective. The powers and functions of the Panchayats and Panchayat Union Councils have been clearly defined and the allocation of finances that the Government will make from time to time to a Panchayat or a Panchayat Union Council has also been indicated. The Government have also come forward with a new proposal to provide matching grants. This is a very welcome

feature. The idea behind this proposal is perhaps this. At present Panchayats are very reluctant to levy taxes as they are afraid that they will become unpopular with the people. That is why the Government now say that if the Panchayats come forward to levy taxes and raise their own resources, the Government will give them matching grants in respect of the sum that they are able to raise so that the overall resources of the Panchayats and Panchayat Unions can be augmented.

Sir, to-day conditions in the villages are appaulling. In most villages, there is no drinking water-supply, no sanitary and drainage facilities and the like. If all these nation-building schemes and activities are to be implemented, the Panchayats should, to some extent, provide their own finances. Now, the Government are giving a nice bait by telling the Panchayats that if they are able to raise sufficient revenue, the Government also will come forward to provide matching grants to them to augment their resources. There can be no better proposal than this. So, I congratulate the Government on this score. The proposal envisaged by the Government as set out in the financial memorandum is that the Government will have to provide a sum of Rs. 3½ crores as grant to these Panchayat Union Councils and Panchayats and the Panchayats are expected to raise about Rs. 1½ crores out of their own resources. This extra sum of Rs. 3½ crores is expected to be met not out of any additional taxation, but by only from the Agricultural Income-tax which has recently been passed by this House. So, the State Government are ready and willing to provide adequate finances for meeting the various needs of the people. The State Government and the party in power are very anxious that the good and the well-being of the people is their only consideration. On this basis alone, they have provided more money for being spent in the villages and rural areas. I do hope that all the Panchayats will be properly constituted and the Panchayat Union Councils will function as they are intended to function. I also hope that the Panchayats Union Councils will serve the interests for which they are being created. Thank you, Sir.

*Sri K. PONNIAN : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, நாம் கனவு கண்டு கொண்டிருந்த ராமராஜ்யத்தை ஏற்படுத்துவதற்காக இந்தப் புரட்சிகரமான மசோதாவை கொண்டு வந்த இந்த அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். இந்த மசோதாவைப்பற்றி மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் சாதகமாகவும் பாதகமாகவும் பேசினார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய பிராந்தியத்தைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லாமல் இருக்க முடியவில்லை. வால்பாரை ஒரு மலைப்பிரதேசம். அங்கேயுள்ள ஜனத்தொகை 75,000. குறைந்தபட்சம் 50,000 ஏக்கரிலே
12.20 p.m. தேயிலை, காபி எல்லாம் பயிராகிறது. அங்கேயுள்ள பஞ்சாயத்து போர்டுக்கு வருமானம் ரூ. 3,58,000. ஆனால் அந்த பஞ்சாயத்து போர்டு கடந்த 10 அல்லது 15 ஆண்டு காலமாக அங்கே எந்தவிதமான அபிவிருத்தியையும் செய்யவில்லை. ரோடு வசதி கிடையாது. நல்ல ரெஸ்ட் ஹௌஸ் கிடையாது. வந்து போகிறவர்களுக்கு சாப்பாட்டிற்குக்கூட வசதி கிடையாது. ஒரு நல்ல மார்க்கெட் கிடையாது. ஆகவே, நாங்கள் சர்க்காரை அணுகி, அந்த பிரதேசத்தை அபிவிருத்திக்குக் கொண்டுவருவதற்காக ஒரு டௌன்ஷிப் கமிட்டி நியமிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். காரணம் என்ன என்று தெரியவில்லை. அதை மறுபடியும் ஒரு பஞ்

22nd September 1958] [K. Ponnian]

சாயத்து போர்டாகவே வைத்திருக்கிறார்கள். வரப்போகிற பரம்பிக்குளத் திட்டம் அங்கேதான் ஆரம்பமாகிறது என்பதை நினைவில் வைத்துக்கொண்டால், அந்த பிரதேசத்தின் முக்கியத்துவம் தெரியும். இந்த மலைப் பிரதேசத்தில் வசிக்கும் 75,000 பேரில், கிட்டத்தட்ட 65,000 பேர் தொழிலாளிகள். இரண்டாவதாக இது ஒரு "ஹெல்த் ரிசார்ட்". வெள்ளையர் ஆண்டுவந்த காலத்திலிருந்தே—காரணம் என்னவென்று தெரியவில்லை—இந்தப் பிரதேசம் புறக்கணிக்கப்பட்டு வந்து, அதே நிலைமை இன்னும் நீடிக்கிறது. உதகமண்டலம் எப்படி ஒரு "ஹெல்த் ரிசார்ட்" ஆக இருக்கிறதோ, அதேமாதிரி பொள்ளாச்சி தாலூக்காவில் இந்த வால்பாறைப் பிரதேசமும் ஒரு ஹெல்த் ரிசார்ட் ஆக இருக்கிறது. ஆகவே, சர்க்கார் இவற்றையெல்லாம் கவனித்து, இதை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏறத்தாழ $3\frac{1}{2}$ லட்சம் ரூபாய் வருமானம் வந்தும், இது ஒரு மேஜர் பஞ்சாயத்து போர்டாக இருந்தும் ஒருவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. மேஜர் பஞ்சாயத்துக்குள்ள அதிகாரங்களைப்பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. ஒரு திட்டம் சாங்ஷன் ஆக வேண்டுமென்றால், டெக்னிகல் சாங்ஷன், பைனான்ஷியல் சாங்ஷன் என்று ஆறு மாதம் அல்லது ஒரு வருஷம் ஆகிறது. அந்த பிராந்தியத்திலுள்ள மக்களின் பிரதிநிதியாகிய என்னால் அங்கேயுள்ள மக்களுக்கு எந்தவிதமான பதிலும் சொல்லமுடியவில்லை. ஆகவே நான் சொன்ன கோரிக்கையை சர்க்கார் மீண்டும் புனராலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த பஞ்சாயத்துகளிலும், பஞ்சாயத்து கௌன்சில்களிலும் ஹரிஜனங்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜனங்கள் எங்கு அதிகமாக வாழ்கிறார்களோ, அந்த இடங்களை தனி வார்டுகளாக்கவேண்டும். பஞ்சாயத்து யூனியன் கௌன்சில்களிலே அவர்களுக்கு நாமினேஷன் கொடுக்க வேண்டும். அந்தந்த பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட் யூனியன் மெம்பராக வருவதினால், யூனியன் கௌன்சிலில் அவர்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் இல்லாமலிருக்கிறது. ஆகவே ஹரிஜனங்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும். படிப்படியாக 1962-க்குள் இந்த சீர்திருத்தம் அமலுக்கு வரும் என்று சொல்லப்படுகிறது. அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்னால் இதைச் செய்து முடித்தால் நலம் என்று எனக்குத் தோன்றுகிறது.

ஆரம்பக் கல்வியையும், உயர்தரக் கல்வியையும் பற்றி சொல்லவேண்டியது இல்லை. ஆரம்பக் கல்வியை எடுத்துக்கொண்டால், அங்கேயுள்ள வெள்ளைக்கார முதலாளிகள் இடம் கொடுக்க மறுக்கிறார்கள். பஞ்சாயத்து போர்டை வற்புறுத்தி அந்த பள்ளியை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டாலும், பஞ்சாயத்து போர்டும் நடத்தத் தயாராயிருந்தாலும், அங்கேயிருக்கும் வெள்ளைக்கார மானேஜ்மெண்டார் அதற்கு மறுக்கிறார்கள். சுயராஜ்யம் அடைந்தும் எங்கள் பகுதியிலுள்ளவர்கள் சுயராஜ்யம் அடையாதவர்களைப் போலத்தான் இருக்கிறோம். பஞ்சாயத்து எல்லையில் 10 ஏக்கருக்குள்ளாகத்தான் இருக்கிறது சர்க்கார் நிலம். தனிப்பட்டவருடைய நிலம் 40 அல்லது 50 ஏக்கர் இருக்கிறது. ஆகவே, ஏதாவது பொதுக்கூட்டம் போடுவதாகயிருந்தாலும், அந்த பிரைவேட் பார்ட்டியின் அனுமதியுடன்தான் பொதுக்கூட்டம் போடவேண்டும். சுயராஜ்யம் அடைந்த பிறகும்கூட நாங்கள் அடிமைகளாக வாழ்ந்து வருகிறோம். குறைந்த பட்சம் 25 ஏக்கரா நிலத்தையாவது ஆர்ஜிதம் செய்து பொதுமக்களுக்குக் கொடுக்கவேண்டும். 150 சதுர மைலுக்கு பஞ்சாயத்தின் எல்லை இருக்கிறது. அப்படியிருந்தும் ஒரு இஞ்ச் நிலம்கூட பொதுப் பிரயோஜனத்திற்கு இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதையெல்லாம் நன்கு கவனித்து, டவுன்ஷிப் கமிட்டியை ஏற்படுத்தும் விஷயம்பற்றி சர்க்கார் புனராலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*SRI T. THIRUMALAIMUTHU VEERASAKKAYA THIRUVENKADASAMI NAICKER: உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன

[22nd September 1958

[Sri T. Thirumalaimuthu Veerasakkaya Thiruvengadasami Naicker]

கௌன்சில் மசோதா மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பஞ்சாயத்துகளிலே பெண் அங்கத்தினர்கள் அவசியம் அங்கம் வகிக்க வேண்டும். ஏனென்றால் பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலுக்கு பஞ்சாயத்திலிருந்து அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கும்பொழுது, பெண் அங்கத்தினர்கள், ஷெட்யூல்டு வகுப்பினர் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால், 3 பெண் அங்கத்தினர்களையும், 3 ஷெட்யூல்டு வகுப்பு அங்கத்தினர்களையும் நியமித்து கொள்ளலாமென்று மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து போர்டுகளுக்காக தேர்தல் நடக்கும்போதே, ஒருசில குறிப்பிட்ட வார்டுகளை பெண்களுக்காக ஒதுக்கிவிட்டோமேயானால், இந்த மாதிரி மறைமுகமாக நியமனம் செய்வதற்கான நிலைமை ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலிலே சட்டசபை அங்கத்தினர் வோட்டு உரிமை இல்லாத பிரதிநிதியாக இருப்பார் என்று சொல்லப்படுகிறது. அந்த பிளாக் ஏரியாவைச் சேர்ந்த சட்டசபை அங்கத்தினர், அந்த பிராந்தியத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலில் அங்கம் வகிக்கும் போதும், கூட்டங்களில் ஆஜராகும்பொழுதும், நடவடிக்கைகளில் கலந்து கொண்டு வோட் அளிப்பதற்கான உரிமை இருக்கவேண்டும். அதே சந்தர்ப்பத்திலே பஞ்சாயத்து யூனியன்களுக்கு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கும்பொழுது, சட்டசபை அங்கத்தினரையும் தேர்ந்தெடுக்க ஒரு வாய்ப்பு இருக்கிறது. வோட்டர் ஜாபிதாவிலே அவருடைய பெயர் இருக்குமானால், அவரும் அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்படலாம். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவரானால் வோட்டு உரிமை உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் சொல்வது என்னவென்றால், இந்த மாதிரி இல்லாமல், சட்டசபை அங்கத்தினர் அந்தப் பிராந்தியத்தின் பிரதிநிதியாக இருக்கிறார் என்பதற்காக, பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலில் அங்கம் வகிப்பதற்கு அருகதையுள்ளவராய் இருக்கவேண்டுமே தவிர, பஞ்சாயத்துகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினராக இருக்கவேண்டியதில்லை என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பஞ்சாயத்துகள், யூனியன் கௌன்சில்கள், இவைகளிலே எக்ஸிகூடிவ் ஆபீசர், கமிஷனர் போன்றவர்களுக்கு நிறைய அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்துத் தலைவரோ அல்லது பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் தலைவரோ பெரும்பாலும், இந்த மசோதாவின்படி, அதிகாரம் இல்லாத நிலையில்தான் இருக்கிறார்கள். இந்த நிலை தவிர்க்கப்படவேண்டும். இந்த நிலை தவிர்க்கப்பட்டால்தான், கிராமங்களிலே அதிகாரம் பரவலாக இருக்கவேண்டும் என்று அரசாங்கம் சொல்லுவது போல், நிலைமை ஏற்படும். ஆகவே பஞ்சாயத்து தலைவருக்கும், பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கும் ஓரளவு அதிகாரம் இருக்க வேண்டும். இந்த மசோதாவில் உள்ளபடி, ஒரு பஞ்சாயத்து தலைவர் அவருடைய ஆதீனத்திலுள்ள அதிகாரிகளிடத்திலோ, ஒரு பஞ்சாயத்து கௌன்சில் தலைவர் அவருடைய ஆதீனத்திலுள்ள அதிகாரிகளிடத்திலோ எந்தவிதமான அதிகாரத்தையும் செலுத்தமுடியாது. ஆகவே இதை மாற்றியமைப்பது மிகவும் நல்லது என்று சொல்ல விரும்புகிறேன்.

12-30 p.m. அடுத்தப்படியாக, லாண்டு செஸ் 45 நயா பைசா வீதம் புதியதாக வரிபோட்டு வசூலிக்கப்படும் என்று மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறு வசூலிக்கப்படும் வரியில் மிகவும் குறைந்த அளவுக்கு, அதாவது ஒரு ஆளுக்கு 20 நயா பைசா வீதம் அந்தத் தொகையில் பஞ்சாயத்துகளுக்கு ஒதுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அதை 25 நயா பைசாவாக உயர்த்த வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் சில முக்கியமான விஷயங்களிலே பஞ்சாயத்து எக்ஸிகியூடிவ் ஆபீசர்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கும் மிகவும் அதிகாரங்கள் அதிகமாக வழங்கப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக போக்குவரத்து பாதையின் ஓரங்களிலுள்ள மரங்கள் இடைஞ்சலாக இருந்தால் அவைகள் உடனடியாக வெட்டப்படவேண்டும், அவ்வாறு மரத்திற்கு சொந்தக்காரர் உடனடியாக வெட்டாவிட்டால் 50 ரூபாய் வரை அபராதம் போடப்படும் என்று இந்த மசோதாவில் கூறப்பட்டிருக்கிறது. அவைகளை

22nd September 1958]

[Sri T. Thirumalaimuthu Veerasakkaya Thiruvengadasami Naicker]

யெல்லாம் நீக்கிவிட்டு, நல்ல முறையிலே பஞ்சாயத்து தலைவர்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் தலைவர்களுக்கும் போதுமான அதிகாரத்தைக் கொடுத்து, இந்த மசோதாவை சட்டமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **SRI S. NAGARAJA MONIGAR :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சர்க்கார் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன். காரணம், நாடு சுதந்திரம் அடைந்த பின் மக்கள் நிர்வாகத்தில் ஏதாகிலும் அனுபவம் அடையவேண்டுமானால், அவர்களுக்கு ஒரு பெரிய சந்தர்ப்பத்தை கொடுக்கக்கூடிய வகையில், பல இலாக்காக்களில் வேலையையும் கிராம பஞ்சாயத்து அளவிலே மக்களே ஓரளவுக்கு நடத்தி அனுபவம் அடைவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கக் கூடிய வகையில் இந்த மசோதா அமைந்திருக்கிறது. ஏற்கனவே ஜில்லா போர்டுகள், தாலூகா போர்டுகள் இருந்தாலும்கூட, பஞ்சாயத்துகள் ஏற்கனவே இருந்தாலும் கூட, தற்போதைய மாறுபட்ட அமைப்பிலே ஜில்லா போர்டுகள், தாலூகா போர்டுகள் அதிகாரங்களை எல்லாம் பஞ்சாயத்து நிலைக்கு கொண்டுவந்து, மக்களுக்கு அதிகமான அதிகாரத்தையும் அவகாசத்தையும் அளிக்கிறது இந்த மசோதா. அதே சமயத்தில் இதைப்பற்றி சில குறைகள் ஏற்கனவே இந்த சபையில் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தக் குறைகளில் ஒன்றிரண்டு இதிலும் கூட இருந்து வருவது காணப்படுகிறது. அவைகளையெல்லாம் நமது சர்க்கார் ற்று முன்வந்து நிவர்த்திசெய்து, கீழுள்ள மக்களை நம்பி கொஞ்சம் அவர்களுக்கு அதிகமாக அதிகாரங்களை கொடுத்து இந்த மசோதாவை சட்டமாக இயற்றுவோமானால், நாம் அடைந்த சுதந்திரத்தை சீக்கிரத்தில் நல்ல முறையில் காப்பாற்றிக்கொள்ளுவதற்கு மக்களை நாம் பரிபக்குவப்படுத்தியவர்களாவோம். இப்போதைய நிலையில் சீர்திருத்தங்களை செய்து கொண்டே போனால் இன்னும் வெகு காலம் பிடிக்கும் என்ற பயம்தான் எனக்குத் தோன்றுகிறது. மக்கள் ஒரு காலத்தில் அதிக அதிகாரங்களுக்கு லாயக் கில்லை என்று சொல்லப்பட்டாலும், இன்னொரு விதத்தில் அவர்கள் பக்குவம் அடைந்திருக்கிறார்கள். பக்குவம் அடைந்த பலர் இருக்கிறார்கள். நிர்வாகத்தை ஏற்று நடத்த அவர்களுக்கு ஆசையும் இருக்கிறது, தீரமும் இருக்கிறது, அவர்களும் நிர்வாகத்தை நடத்துவார்கள். அப்படி அவர்களுக்கு அதிகாரம் கிடைக்காத காரணத்தினால்தான், எங்கு பார்த்தாலும் புதிய கட்சிகளும், சச்சரவுகளும், வழக்குகளும், விவாதங்களும் அதிகரித்து வருகின்றன. அவர்களுக்கு போதிய அவகாசமும், சந்தர்ப்பமும் கொடுத்தால் அவர்கள் அதில் ஈடுபட்டு நாட்டை பக்குவப்படுத்துவதோடு, தங்களையும் பக்குவப்படுத்திக்கொள்ளுவார்கள் என்பதில் எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. அப்படி மக்கள் தங்களுக்கு கிடைத்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வார்களேயானால், அதை தக்கபடி சீர்திருத்திக்கொள்ள ஜனநாயக முறையில் வாக்கு சுதந்திரம் அளித்திருக்கிறோம். இதுவரையிலும் தேர்தல்களில் ஜனங்கள் தங்கள் வாக்கு சுதந்தரத்தை தவறாக உபயோகப்படுத்தினார்கள் என்று அவர்களது பெருவாரியான வோட்டுகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளும் கட்சியாகிய நாமே நினைக்கவும் முடியாது. அப்படி ஒரு முறை தவறுதலாக கிராமங்களிலோ, பட்டினங்களிலோ, ஒவ்வாத ஒரு தலைவரை தேர்ந்தெடுத்துவிட்டால், அடுத்த முறை தேர்தலில் அவரே திரும்பி வராமல் தடுத்துக்கொள்ள மக்களுக்கு தெரியும். முன்பு கூட இந்த சபையில் பேசும்பொழுது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் என்று மாற்றியதுகூட என்போன்றவர்களுக்கு திருப்தி அளிக்கவில்லை. எங்கெங்கு எவ்வளவு சீக்கிரம் தேர்தல்கள் நடக்குமோ, அவ்வளவு சீக்கிரம் மக்கள் தங்களுக்கு வேண்டிய ஜனநாயக தலைவர்களை தேர்ந்தெடுத்துக்கொள்ள அவகாசம் இருந்திருக்கிறது. அவர்கள் ஒரு முறை தவறுதல் செய்தால், அடுத்த முறை நல்ல தலைவராக தேர்ந்தெடுத்துக்கொள்வதற்கு அவகாசம் இருந்திருக்கிறது. பாரத நாட்டில் தேர்தல்கள் அடிக்கடி வைத்துக்கொள்ளுவது என்றால் கஷ்டமாக இருக்கலாம். ஆனால், அடிக்கடி தேர்தலை வைத்துக்கொள்ளாதது ஜனநாயக முறையில் மக்களை அதிகமாக பழக்குவதற்கு இடம் கொடுக்கவில்லை என்றே கருதுகிறோம்.

[Sri S. Nagaraja Monigar] [22nd September 1958

முன்பிருந்த பஞ்சாயத்து சட்டத்திலே எக்ஸிகியூடிவ் ஆபீஸர்கள் நியமிப்பதற்கு இடம் இருக்கிறது. அது கூடாது என்ற அபிப்பிராயத்தை ஒரு சிலர் இங்கு சொன்னோம். மேஜர் பஞ்சாயத்துகளுக்கு எக்ஸிகியூடிவ் ஆபீஸர்கள் இல்லாமல் இருக்கவேண்டுமென்றே இப்பொழுதும் கருதுகிறோம். இந்த எக்ஸிகியூடிவ் ஆபீஸர்கள்கூட சென்ற பத்து ஆண்டுகளுக்கு முன்னால்தான் ஏற்படுத்தப்பட்டது. அதற்கு முன்பு கிளாஸ் I பஞ்சாயத்து தலைவர்களே பூரா அதிகாரங்களையும் ஏற்றுக்கொண்டு நிர்வாகத்தை நடத்திவந்தார்கள். அம்மாதிரி நம் நாட்டில் பல பஞ்சாயத்துகள் வெகு ஒழுங்காக வேலை செய்தன என்பதை மறுக்க முடியாது. சில பஞ்சாயத்துக்கள் தவறுதலான வகையில் நடந்துகொண்டிருக்கலாம். அதே போல் இந்தச் சபையில் சொன்னால் கோபம் கொள்ளக்கூடாது. எத்தனையோ எக்ஸிகியூடிவ் ஆபீஸர்கள் பணத்தை கையாடியதால் அவர்களின் பேரில் கேஸ்கள் போடப்பட்டன. எங்கள் பகுதியில் காவேரிப்பட்டணத்தை சுற்றி பாலக்கோடு, கிருஷ்ணகிரி, காரிமங்கலம் போன்ற பஞ்சாயத்துக்களில் பணத்தைக் கையாண்டதற்காகவோ அல்லது நிர்வாகத்தை கெடுத்ததற்காகவோ எக்ஸிகியூடிவ் ஆபீஸர்களின் பேரில் வழக்குகள் ஏற்பட்டிருக்கின்றன. உள்ளூர் விவகாரங்களை கவனிப்பதற்கு எங்கிருந்தோ ஒருவர் எக்ஸிகியூடிவ் ஆபீஸராக நியமிக்கப்படுகிறார். ஊருடைய நிலைமை அவருக்குத் தெரிவதில்லை. அவருக்கு கொடுக்கும் சம்பளமும் மிகவும் குறைவு. ஒன்று, இரண்டு லட்சம் ரூபாயை வரவு செலவு செய்வதற்கும், 10, 20 ஆயிரம் ஜனத்தொகை கொண்ட பெரிய பட்டினங்களிலுள்ள ஜனங்களை சமாளிப்பதற்கும் அவருக்கு லாயக்கு இருப்பதாக அனுபவத்தில் தெரியவில்லை. ஒரு புறத்தில் அவர்கள் சர்க்காருக்கு ஜவாப்தாரியாக இருக்கவேண்டும். மறுபுறத்தில் அங்குள்ள பஞ்சாயத்து தலைவருக்கும், மெம்பர்களுக்கும் ஜவாப்தாரியாக இருக்க வேண்டும். இன்னொரு புறத்தில் மக்களுக்கு நன்மை செய்து ஊர்க்காரர்களுக்கு நல்ல எக்ஸிகியூடிவ் ஆபீஸராக இருக்கவேண்டும். மேலும் அங்குள்ள தெரு பெருக்குபவர்கள், குமாஸ்தாக்கள், மற்ற சிப்பந்திகள் இவர்களை நிர்வகித்து தன்னுடைய ஆபீஸை சரிவர நடத்திவர வேண்டும். இவ்வளவையும் செய்ய அவர்களில் அநேகம் பேர்களுக்கு திறமையில்லை. ஆகவே, கீழ் மட்டத்தில் அதாவது ஜில்லா மட்டத்தில், தாலூகா மட்டத்தில், கிராம மட்டத்தில் சில பேர்களுக்கு சில அதிகாரங்களை கொடுப்பதின் மூலம்தான் அநேகம் பேர்கள் நிர்வாகத்தில் ஈடுபட்டு அனுபவம் பெறுவார்கள் எதிர் காலத்தில் இந்த நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு நாட்டுமக்களை தயார் செய்தவர்களாவோம். எக்ஸிகியூடிவ் ஆபீஸர்களை காரியதரிசிகளாவது வைக்கவேண்டுமென்று பன்முறை கேட்டுக்கொண்டது என்ன ஆயிற்று என்று எனக்குத் தெரியவில்லை. ராம ராஜ்யம் என்று சொல்லுகிறோம். காந்திஜியும், மற்றவர்களும் வெகு ஆசையோடு எதிர்பார்த்த ஒரு ஆரம்பத்தை செய்திருக்கிறோம் என்று சொல்லலாம். ஆனால் ஏற்கனவே இருந்த அதிகாரங்களை எடுக்கவில்லையானால் நன்றாகயிருந்திருக்கும். ஆரம்பத்திலே இதை செய்யவில்லை என்றால், எப்பொழுது செய்யப்போகிறார்கள் என்று தெரியவில்லை

சிவில், கிரிமினல் அதிகாரங்களும் ஓரளவுக்கு பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்படவேண்டும். பெரிய பஞ்சாயத்துகளுக்காவது, பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்காவது ஓரளவுக்கு சிவில், கிரிமினல் அதிகாரத்தை கொடுத்தால் பொதுநல ஊழியம் செய்பவர்கள் சிவில், கிரிமினல் அதிகாரங்களை கையாளுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும். அம்மாதிரி சிவில், கிரிமினல் அதிகாரங்களை மேற்கொண்டு சரிவர நீதிபரிபாலனம் செய்ய பக்குவப்பட்டவர்கள பலரும் வருகிறார்கள். அந்த அளவுக்கு நாட்டு மக்களை மேம்படச் செய்வது இந்த மசோதாவின் நோக்கமாக இருந்தால், மிக நன்றாக இருக்கும்.

12-40 p.m. மற்றபடி விவசாயத் துறையிலும் மற்ற எல்லா வழியிலும் இலாகாவாரியாகப் பஞ்சாயத்து செலவில் கொண்டு வந்து மக்கள் அதில் பங்கு கொள்வதற்கு வழி செய்திருக்கிறார்கள். அவைகளும், மற்றவைகளும் மிக மிக வரவேற்கத்தக்கது. பஞ்சாயத்துக்கள் இப்பொழுது ராம ராஜ்யம் என்று சொல்லும் அளவில் இந்த மசோதா அமைந்திருக்கிறது. இந்த மசோதா நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு வழி காட்டுவதாக இருக்

22nd September 1958] [Sri S. Nagaraja Monigar]

கிறது. முன் கூட்டியே அதற்குத் தேவையான மாறுதல்களை கனம் மந்திரி அவர்கள் செய்து அதன் மூலமாக பஞ்சாயத்துகளுக்கு அதிகப் படியான அதிகாரங்களைக் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து கிராம மக்களுக்கு அனுகூலம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI K. R. VISWANATHAN : கனம் உதவி அவைத் தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்து மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த் தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த பஞ்சாயத்து மசோதாவானது சரியான சமயத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அங்கங்கே மக்கள் ஓரளவுக்கு பஞ்சாயத்து நிர்வாகத்தின் அனுபவம் பெற்ற பஞ்சாயத்துக் களில் பங்கு கொள்ள வேண்டும் என்ற ஆர்வமுடையவர்களாகக் காணப் படுகின்றனர். இந்த சமயத்தில் எல்லோராலும் ஒப்புக்கொள்ளக்கூடிய இந்த மசோதா வருகிறது. கட்டுக்கடங்காத ஒரு நிலையில் இருந்த ஜில்லா போர்டு நிர்வாகத்தை எடுத்துவிட்டு பஞ்சாயத்து நிர்வாகத்தையும் பஞ்சா யத்து யூனியன் நிர்வாகத்தையும் கொண்டு வருவதற்காக வருகின்ற இந்த மசோதாவை நான் மனமாற வரவேற்கிறேன்.

சில நண்பர்கள் பேசியபடி பஞ்சாயத்து நிர்வாகத்தில் சில தவறுகள் நடக்கத்தான் செய்கின்றன. சாதாரணமாக தலைவர் தேர்தலை எடுத்துக் கொண்டால் நண்பர் கோவிந்தசாமி அவர்கள் சொன்னது போல் தலைவர் தேர்தலுக்கு நிற்பவர்கள் பல உறுப்பினர்களை கடத்திக் கொண்டுபோய் விடுகிறார்கள். பாண்டிச்சேரி, காரைக்கால் போன்ற இடங்களுக்கு உறுப் பினர்கள் பலரை கடத்திக்கொண்டு போய்விட்டு தேர்தலுக்கு முன்ன தாகக் கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட தவறுகள் எவ்வளவோ நடக்கின்றன. பல உறுப்பினர்கள் பணத்தைச் செலவு செய்து தங்க ளுடைய காரியங்களை நிறைவேற்றிக்கொள்ள முயல்கின்றனர். இப்படிப் பட்ட பல தவறுகள் நடைபெற்றுப்பல நல்ல பாடங்களைக் கற்பிக்கின்றன. இப்படிப்பட்ட தவறுகள் எப்படி படிப்பினையாக அமைந்தன என்று பார்ப் போம். உதாரணமாக என்னுடைய தொகுதியில் இரண்டு தேர்தல்கள் நடைபெற்றன. தலைவர் இடத்திற்கு நிற்கக்கூடியவர் சில உறுப்பினர் களை கடத்திச் சென்றுவிட்டார்கள், அப்படிக் கொண்டு போய் தேர் தலுக்கு முதல் நாள்தான் மேற்படி உறுப்பினர்களைக் கொண்டு வந் தார். அப்படியிருந்தும் தலைவர் தேர்தலில் எதிர்த்து நின்றவர்தான் வெற்றி பெற்றார். ஆகவே உறுப்பினர்களைக் கடத்திக் கொண்டுபோய் விடுவதனால் சரியான தலைவரைத் தேர்ந்தெடுக்க முடியாமல் போகிறது என்று சொல்வதற்கு இல்லை. தகுதியும் செல்வாக்கும் உள்ளவர்களாக இருந்தால் எங்கே கொண்டு போனாலும் அவரைத்தான் தேர்ந்தெடுக்கி றார்கள். அந்த அளவில் இப்பொழுது மக்கள் அறிவு படைத்தவர்களாகி விட்டார்கள். அதைப்போலவே இன்னொரு தேர்தலில் ஒரு பெரிய பணக் காரர் அதிகப்படியான பணத்தை வைத்துக்கொண்டு பல்வேறு உறுப் பினர்களிடம் சென்று ஒரு தலைவரை தேர்ந்தெடுக்கக்கூடாது என்று பணத்தை செலவு செய்தும் உறுப்பினர்கள் அதே தலைவரைத்தான் தேர்ந்தெடுத்தார்கள். ஆகவே இத்தகைய தவறுகள் நல்ல பாடத்தைக் கற்பித்து அனுபவத்தைக்கொடுப்பதோடு மறுபடியும் இத் தவறுகள் நிகழாமல் தடுக்கின்றன. ஆகவே தலைவராக வரக்கூடியவர்கள் தான் தலை வராக வருவார்களே தவிர வேறு ஒருவர் தலைவராக வர முடியாது. இந்த அளவில் இப்பொழுது மக்கள் அறிவு படைத்தவர்களா விட்டார் கள். தங்களுடைய உரிமையை உணர்ந்தவர்களாக ஆகி விட்டார்கள். ஒருவர் தலைவராக வர இருக்கும்போது இன்னொருவர் தலைவராக வர முடியாது.

அடுத்தபடியாக, இத்தகைய தேர்தல்கள் நடக்கக்கூடிய பல கிராமங் கள் இருக்கின்றன. அநேகம் இடங்களில் சில பெரிய கிராமங்கள் இருக் கின்றன. அவைகள் கட்டுக்கடங்காத அளவில் பெரிய கிராமங்களாக இருக் கின்றன. சில கிராமங்கள் 5,000 அல்லது 6,000 ஜனத்தொகையுள்ள தாகவும் இருக்கின்றன. அவைகளை தனியாக அமைத்து சிறு பஞ்சாயத்து களாக அமைத்துக் கொள்ளும்படியான கொள்கையை தெரிவித்துக்

[Sri K. R. Viswanathan] [22nd September 1958

கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது ஒரு பஞ்சாயத்து என்றால் குறைந்தது 500 ஜனத்தொகைக்கு குறையாமல் இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்திருப்பதால், இத்தகைய கிராமங்களை பிரித்து அதாவது பெரிய கிராமங்களைப் பிரித்து சிறு கிராமங்களாக அமைத்து சிறு சிறு பஞ்சாயத்து களாக ஏற்படுத்துவதற்கு வசதி செய்து கொடுப்பது நல்ல முறை. அப்போதுதான் பஞ்சாயத்து நிர்வாகம் நல்ல முறையில் அமைவதற்கு இடம் ஏற்படும் என்பதை அரசாங்கம் உணர்ந்திருப்பதை வரவேற்கிறேன்.

அடுத்தப்படியாக இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதாவில் கிராம பஞ்சாயத்திலிருந்து கிராம கோர்டு வழக்குகளை நடத்தும் அதிகாரங்களை எடுத்து அந்தப் பகுதியிலுள்ள கோர்ட்டுக்குக் கொடுக்க வேண்டும் என்கிற ஒரு பிரிவானது இருக்கிறது. இந்தப் பிரிவை நான் மிக மனப் பூர்வமாக வரவேற்கிறேன். ஏனென்றால் கிராமப் பஞ்சாயத்தில் இருக்கக் கூடிய உறுப்பினர்கள் உண்மையாகவே நியாயம் வழங்க வேண்டும் என்று இருந்தாலும், தங்களுடைய கடமைகளை நன்றாக செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தாலும், அங்கே இருக்கக்கூடிய ஏழைமக்களுக்கு உதவி புரிய வேண்டும் என்ற நிலையில் இருந்தாலும் அவர்களால் அவர்களுக்கு நல்ல முறையில் நியாயம் வழங்க முடிவதில்லை. அப்படி வழங்க முடியாத சூழ் நிலையிலும் அவர்கள் வைக்கப்பெறுகிறார்கள். ஆகையால்தான் இந்த விதியை நான் மிகவும் மனப்பூர்வமாக வரவேற்கிறேன் என்று சொல்லுகிறேன்.

அடுத்தப்படியாக, இந்த பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் அமைப்பானது ஜில்லா போர்டு நிர்வாகத்தை எடுத்து விட்டு அதன் இடத்தில் பல சிறிய அமைப்புகள் அமைக்கப்படுகின்றன. அங்கங்கே இருக்கிற ஒரு தேசீய விஸ்தரிப்பு திட்டத்தில் பஞ்சாயத்து யூனியன் அமைப்பின் எல்லைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக இருக்க வேண்டும் என்றும் சொல்லப் படுகிறது. அப்படி தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள் பஞ்சாயத்து தலைவராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. வேறு யாராவது ஒருவர் பஞ்சாயத்தால் கவுன்சில் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படலாம். ஆனால் இப்பொழுது சொல்லியிருக்கிறபடி இருந்தால் அவர்களுக்கு தாம் பிரதிநிதியாக இருக்கும் பஞ்சாயத்தில் எந்த விதமான சம்பந்தமும் இல்லாமல் இருக்கும். அங்கே நடக்கக்கூடிய விஷயங்களை கவனிக்கக்கூடியவராக அவர் இருக்க முடியுமா என்பதை கேட்க ஆசைப்படுகிறேன். மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக இருக்கவேண்டும் என்று ஏற்கெனவே வெள்ளையறிக்கையில் குறிக்கப்பட்டு இருந்ததைத் தழுவி அதை நிறைவேற்றுவதன் மூலமாக இந்த பிரிவைக்கொண்டு வருவதாக இருக்கலாம். அப்படி இருந்தால் அந்த முறையில் கவுன்சில் பிரதிநிதியை பஞ்சாயத்து உறுப்பினர்கள் இவர்களிலிருந்து தேர்ந்தெடுப்பது சரி, அப்பொழுது வெளியாரைத் தேர்ந்தெடுப்பது சரியல்ல. அம்மாதிரி பெரும்பான்மையான உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க முடியாத சந்தர்ப்பம் நிகழ்ந்தால் அந்த சந்தர்ப்பத்தில் வெளியார் பெரும்பான்மையான உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கக்கூடிய முறையில் விட்டுவிடலாம். அந்த முறையில் இப் பிரிவை திருத்தம் செய்திருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்தப்படியாக ஜில்லா போர்டு நிர்வாகம் பஞ்சாயத்து யூனியனாக அமைகிறபோது அங்கே இருக்கக்கூடிய தேசீய விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் வேலை செய்கிற அதிகாரிகள் விவசாயி முன்னேற்றத்திற்காக, கால் நடை முன்னேற்றத்திற்காக, கைத்தொழில் முன்னேற்றத்திற்காக, மற்ற நாட்டின் முன்னேற்றத்திற்காக அமைக்கப்படுகிற அதிகாரிகள் இந்த பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தையும் மேற்கொண்டு நடத்துவார், அதற்கு அவர்கள் உதவி புரிவார்கள் என்று கூறியிருப்பது வரவேற்கத் தக்கதாகும். பஞ்சாயத்து நிர்வாகம் நாட்டின் நிர்வாகம். நாட்டின் முன்னேற்றத்தை நாட்டின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து இரண்டையும் ஒன்று சேர்த்து வேலை செய்தால் நல்ல முறையில் வேலை நடக்கும். அது மிகவும் வரவேற்கக்கூடியதாக இருக்கிறது. இது நாட்டின் முன்னேற்றத்திற்கும் வழிகோலியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

22nd September 1958] [Sri K. R. Viswanathan]

அது மட்டுமல்ல. பஞ்சாயத்து யூனியனின் வேலைகளைப்பற்றி பிரிவு 64-ல் வகுத்துக் கூறப்படுகிறது. அங்கு பல வேலைகளைப்பற்றி கூறப்படு கிறது. அப்படி வகுக்கும்போது பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி வழங்குவதும் அதற்கு வேண்டிய செலவுகளைச் செய்வதும் பஞ்சாயத்து வரம்புக்குட்பட்டு வைக்காமல் பஞ்சாயத்து யூனியனுடைய வரம்புக்குட்பட்டு அமைத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி சிறு கிராமப் பஞ்சாயத்துகளால் செய்துகொடுக்க முடியாத குறைந்த வருவாயுடையனவாகவே இருக்கும். இப்பிரிவை திருத்தி அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக எதிர்க்கட்சி தலைவராகக் கொண்ட ஒரு உட் குழு தயாரித்துள்ள பஞ்சாயத்துக்களின் நிதி நிலைமையைப்பற்றிய அறிக்கை யானது மிகவும் பாராட்டத்தக்கதாக இருக்கிறது. பஞ்சாயத்துகளின் நிதி நிலைமையையும் பஞ்சாயத்து யூனியன்களின் நிலைமையையும் நல்ல நிலைமைக்குக் கொண்டு வரவேண்டுவதற்கு நல்ல யோசனைகளை தங்களுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சொத்துக்கள் கைமாறும்போது, அதற்கென விதிக்கப்படும் வரியின் மீதான சர்சார்ஜ் (surcharge duty on transfers of property) பற்றி குறிப்பிட விரும்புகிறேன். இந்த வரி பஞ்சாயத்து யூனியன் முழு வதிலும் வசூலிக்கக்கூடிய தொகை எல்லாவற்றையும் மொத்தமாக கணக்கிலெடுத்துக்கொண்டு வருஷக் கடைசியில் அந்த யூனியனில் இருக் கும் எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் அந்தந்த கிராமங்களின் நிலவரி வருமான அடிப்படையில் பிரித்துக்கொடுக்கப்படும் என்று இந்த மசோதா வில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அம்மாதிரி பிரித்துக்கொடுப்பது கூடாது. அந்தந்த பஞ்சாயத்து ஏரியாவிலுள்ள ஜனத் தொகையின் அடிப்படையில் அந்தத் தொகையைப் பிரித்துக் கொடுப்பது அல்லது எந்த கிராமத்தில் எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டாலும் அத்தொகை முழுவதையும், அந்தக் கிராமப் பஞ்சாயத்துக்காக ஒதுக்குவதுதான் நேர்மையானது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். 12-00 noon.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் நிதியை அதிகப்படுத்துவதற்கு ஒரு சமமான தொகையைக் கொடுப்பதற்கு சர்க்கார் முன்வந்திருக்கிறது. 'Local Cess Surcharge Matching Grant' என்றும், Village Home Tax Matching Grant என்றும் இரண்டு விதமாக சர்க்கார் உதவியளிப்பதாக வாக்களித்திருக்கிறார்கள். அம் மாதிரி கொடுப்பதற்கு வாக்களித்திருப்பது பஞ்சாயத்துக்கள் அதிக வேலை களை எடுத்து நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு அளிக்கலாம். சாதாரணமாக பஞ்சாயத்துத் தலைவர்களோ, அதிகாரம் உடையவர்களோ, அதிக வரி விதித்தால் எங்கு நமக்கு நல்ல பெயர் கிடைக்காமல் போய் விடுமோ என்ற காரணத்தால் வரி விதிப்பது கிடையாது. ஆனால், சர்க்காரே அம்மாதிரி எந்த இரண்டு இனங்களிலும் உதவித் தொகை கொடுப்பதால், பஞ்சாயத்துக்கள் அதிக வரி விதிக்கவும், அதன் மூலம் பல நல்ல காரி யங்களைச் செய்யவும் வழி இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக, இந்த நிதிக் குழுவினர், இந்த நாட்டிலே பஞ்சாயத்துக் கள் மூலமாக இலவசக் கட்டாயக் கல்வியை விரைவில்—மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட மத்திய பாகத்திற்குள் பரப்ப வேண்டும் என்பதற்காக பல வழிவகைகளை சொல்லியிருப்பதற்காக இவர்களைப் பாராட்டி, நான் இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

*Sri S. M. ANNAMALAI: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்தப் பஞ்சாயத்து மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்ற திருத்தத்தை நான் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

கிராம ராஜ்யம் ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லி, கிராம ராஜ்யம் ஏற்படுத்துவதற்குப் பதிலாக, கிராமத்திலே உள்ள பஞ்சாயத்து போர்டு களுடைய அதிகாரத்தைப் பறிப்பதாகத்தான் இந்த மசோதா இருக்கிறதே யொழிய, உண்மையிலேயே கிராம மக்களுக்கு நல்ல சுதந்தரம் வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த மசோதா அமையவில்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

500 ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு ரெப்ரசென்டேடிவ் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. அதைப் போல, ஏறத்தாழ 19,999 ஜனத்தொகை கொண்ட ஒரு பெரிய பஞ்சாயத்துக்கும் ஒரே ஒரு ரெப்ரசென்டேடிவ் என்று சொல்லியிருக்கிறது. சிறு கிராமத்திற்கும் ஒரே ஒரு ரெப்ரசென்டேடிவ், பெரிய கிராமத்திற்கும் ஒரே ஒரு ரெப்ரசென்டேடிவ் என்று இருப்பதை மாற்றி, பெரிய கிராமமாக இருந்தால் இரண்டு ரெப்ரசென்டேடிவ்கள் என்றாவது விதிக்கலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்தப்படியாக, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் சட்ட மன்ற உறுப்பினர்கள், வோட்டு இல்லாமல் உட்கார்ந்து இருக்கவேண்டியிருக்கிறது. அங்கே அவர்களுக்கு பேசுவதற்கு உரிமை இருக்கிறதே தவிர வோட்டு போடுவதற்கு உரிமை இல்லை என்று சொல்லப்படுகிறது. மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலில் மாவட்ட கலெக்டர் தலைமை தாங்கும்போது அவருக்கு இரண்டு வாக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் விவாதத்தில் கலந்துகொள்ளலாம். ஆனால் வாக்களிக்க உரிமை இல்லை என்று சொல்வது எந்த அளவு பொருத்தம் என்று நான் மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தேசிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இருக்கும் கிராமங்களுக்கு என்ன என்ன தேவை என்று சொல்வதற்கு எங்களுக்கு உரிமை இருப்பது போல, வாக்கு அளிக்கக்கூட உரிமையும் எங்களுக்கு இருக்கவேண்டும். அந்தந்த கிராமங்களில் மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று வோட்டு பெற்று வந்திருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அந்தந்த கிராமம் முன்னுக்குவரவேண்டும் என்ற ஆசை இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் வோட்டளிக்க சட்ட மன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கு உரிமை தரவேண்டுமென்று நான் மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உத்தியோகஸ்தர்களை வைப்பதும், உத்தியோகஸ்தர்களை மாற்றுவதும் ஆகிய அதிகாரங்கள் கிராமப் பஞ்சாயத்து எக்சிக்யூடிவ் ஆபீசர், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் கமிஷனர், டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சிலில் மாவட்ட கலெக்டர், அடுத்தப்படியாக லோகல் போர்டுகள் இன்ஸ்பெக்டர் இப்படிப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது வேலை செய்து வருகின்ற ஜில்லா பஞ்சாயத்து ஆபீசருடைய நிலை என்ன ஆகும்? டெபுடி பஞ்சாயத்து ஆபீசருடைய நிலை என்ன ஆகும். இப்பொழுதிருக்கும் மசோதாவைப் பார்த்தால், கலெக்டருக்கும் தாசில்தாருக்கும், ரெவினியூ டிவிஷனல் ஆபீசருக்கும் இந்த மசோதாவின்படி அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல், எக்ஸிக்யூடிவ் ஆபீசர், கமிஷனர் ஆகியவர்களுக்கும் இந்த மசோதாவின்படி அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் மெஷினரி வைக்க வேண்டுமென்றால், அதற்கு லைசென்ஸ் வழங்கும் அதிகாரம் கூட பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்குத் தரப்பட்டிருக்கிறதென்றால், அது எந்தவகையில் பொருத்தம் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகையால், இப்படிப்பட்ட சிறு அதிகாரங்கள் கூட—இதற்கு முன் இருந்த சிறு அதிகாரங்கள் கூட, பறிக்கப்பட்டு, பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் கமிஷனரிடமும், எக்ஸிக்யூடிவ் ஆபீசரிடமும் கொடுத்துவிட்டு ஒரு பஞ்சாயத்து இயங்கவேண்டுமென்றால், எந்த வகையில் அந்தப் பஞ்சாயத்து இயங்கமுடியும் என்று நான் மிக தாழ்மையோடு கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதற்கு முன் பஞ்சாயத்து கோர்ட்டினுடைய அதிகாரம் இருந்தது, அந்த அதிகாரத்தின் மூலமாக ஒரு கிராமத்தார் கடன்பட்டிருந்தால், அது நியாயமா இல்லையா என்று நல்ல முறையில் அலசிப் பார்ப்பதற்கு பஞ்சாயத்து போர்டிலுள்ள தனி உறுப்பினருக்குக்கூட உரிமை இருந்தது. இப்பொழுது பஞ்சாயத்து கோர்டினுடைய அதிகாரத்தை பஞ்சாயத்துக்களிடமிருந்து பறிப்பதென்றால், இதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

22nd September 1958] [Sri S. M. Annamalai]

நில வரி மீது ரூபாய்க்கு 45 நயா பைசே சர்ச்சார்ஜ் போடலாம் என்று இருக்கிறது. ரூபாய்க்கு 45 நயே பைசே என்று போடும்போது, சிறிய நிலச் சொந்தக்காரர்களைப் பாதிக்கக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஐந்து ரூபாய்க்குக் குறைவாக நிலவரி கொடுக்கும் நிலச் சொந்தக்காரர்களையும் இது பாதிக்கக்கூடாது. ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்களையும் இது பாதிக்கக்கூடாதென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

" லோகல் செஸ் " என்ற தலைப்பில் வசூலிக்கப்பட்ட தொகையில் ஒன்பதில் இரண்டு பங்கு டவுன் பஞ்சாயத்துக்கும், கிராமப் பஞ்சாயத்துக்கு நபருக்கு 20 நயா பைசா வீதமும் கொடுக்கப்படும். பத்து நயா பைசா பெரிய பஞ்சாயத்துக்களுக்கும், 20 நயா பைசா சிறிய பஞ்சாயத்துக்களுக்கும் பிரித்துக்கொடுக்க வேண்டுமென்று மசோதாவில் சொல்லியிருக்கிறது. பெரிய பஞ்சாயத்து என்ன பாவம் செய்ததோ நான் அறியேன். பெரிய பஞ்சாயத்துக்களுக்கும் 20 நயா பைசா என்று உயர்த்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். வேண்டுமென்றால், 40 நயே பைசே லோகல் செஸ் என்று இருப்பதை 50 நயே பைசே என்றுவது உயர்த்தி, அதன் மூலமாக டவுன் பஞ்சாயத்துக்களுக்கும் கிராமப் பஞ்சாயத்துக்களும் 20 நயே பைசே என்று கொடுத்தால் நல்ல விதமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

" லோகல் ரோட் கிராண்ட் " என்னும் தலைப்பில் ஒரு நபருக்கு 40 நயே பைசே வீதம் கணக்கிட்டு சர்க்காரிடமிருந்து பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு வருவதாக இதில் கண்டிருக்கிறது. 40 நயே பைசே என்பதை 50 நயே பைசேவாக உயர்த்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம், கிராம ரோடுகள் முன்னேறவில்லை. நகரப் புறங்களில் 6 நாடுகள் முன்னேறியிருக்கின்றன. கிராமப் புறம் இன்னும் நல்ல முறையில் முன்னேறவேண்டுமென்றால், 40 நயே பைசே என்பதை 50 நயே பைசாவாக அரசாங்கம் உயர்த்திக் கொடுத்து கிராமங்களுக்குச் செலவிட வேண்டுமென்று நான் இந்த இடத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஏற்படுகிறபோது, அங்கு வேலை செய்யக் கூடிய ஆசிரியர்களுடைய நிலை என்ன ? ஒரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலிலிருந்து மற்றொரு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு மாற்றப் படவேண்டுமென்று ஒரு ஆசிரியர் ஆசைப்பட்டால் அதற்கு ஏதாவது சலுகை இதில் இருக்கிறதா என்று பார்த்தால், இந்த மசோதாவில் அப்படிப்பட்ட சலுகை காணப்படவில்லை.

ஆகையால், இப்பேர்ப்பட்ட சில மாறுதல்களை ஏற்று நல்ல முறையில் இந்த மசோதாவைக் கொண்டு வர வேண்டும். இந்த மசோதா 198 ஷரத்துக்களைக் கொண்ட பெரிய மசோதாவாக இருக்கிறது. இந்த மசோதாவிலேயே கூட இதர சில சட்டங்களையும் கூட " ரெபரன்ஸ் " ஆக சொல்லியிருக்கிறது. அவையெல்லாம் வைத்துக்கொண்டு பார்ப்போமென்றால் நேரமே கிடைக்க வில்லை. காரணம், செப்டம்பர் 2-ந் தேதி வெளியிடப்பட்ட இந்த மசோதா 4, 5-ந் தேதி எங்கள் கைக்குக் கிடைத்தது. அதற்குப் பின்னால் பல மசோதாக்கள் சபை முன் வந்தன. அந்த மசோதாக்களைப் படிப்பதா, இந்த மசோதாவைப் படிப்பதா என்று புரியாமல் நாங்கள் திண்டாடுகிறோம். ஆகையால், சட்ட மன்ற உறுப்பினர்களுக்குச் சற்று அவகாசம் தந்தால், இன்னும் விரிவாக விளக்கலாம் என்று சொல்லி இதைச் செலக்ட் கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

SRI J. MATHA GOWDER : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைக்குச் சட்ட மன்றத்தின் முன்பு வைக்கப்பட்டிருக்கும் கிராம பஞ்சாயத்து மசோதாவை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். இதற்கு முன்பு ஜில்லாவிற்கு ஒரு ஜில்லா போர்டு அமைக்கப்பட்டிருந்தது. ஒரு ஜில்லா முழுவதன் அத்தியாவசிய தேவைகளை குறிப்பாக பள்ளிக்கூடம் 1 p.m.

[Sri J. Matha Gowder] [22nd September 1958

ரஸ்தா வசதி முதலிய எல்லாவற்றையும் நிர்வகிப்பது என்பது சாத்திய மாகவில்லை என்ற ஒரு காரணத்திற்காக அவைகளை எல்லாம் எடுத்து விட்டு ஒவ்வொரு கிராமத்திற்கும் பஞ்சாயத்து அமைத்து, பல பஞ்சா யத்துக்களைச் சேர்த்து ஒரு பஞ்ச யத்து கவுன்சிலை அமைத்து அங்கங்கே யுள்ள நிர்வாகங்களை அவர்களிடத்தில் ஒப்படைத்தால் நல்ல முறையில் கிராமப் பகுதிகள் எல்லாம் வளர்ச்சி அடையும் என்பதை உணர்ந்து சர்க் கார் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது மிகவும் வரவேற்கத்தக்க தாகும். ஆனால் அதேசமயத்தில் இதிலுள்ள ஒன்றி ரண்டு குறைபாடுகளை நீக்க முன்வந்தால் தான் இந்த மசோதாவினால் நாம் எதிர்பார்க்கிற நல்ல பலன் மக்களுக்கும் கிடைக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக இந்த மசோதாவில் ப்ளாக் டெவெலெப்மெண்டு ஆபீசர் கள் பஞ்சாயத்து கவுன்சிலோடு இணக்கமாக வேலை செய்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ப்ளாக் டெவெலெப் மெண்டில் இருக்கக்கூடிய உத்தியோகஸ்தர்கள் பஞ்சாயத்து கவுன்ஸில் ஒருங்கே இணைந்து ஒரு காரியத்தையோ, திட்டத்தையோ நிறைவேற்ற வேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்து அனுப்பினால் அதை உடனடி யாக திட்டவட்டமாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று இங்கே வரையறை செய்யப்படவில்லை. அப்படிச் செய்யவேண்டியது நல்லது. செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கட்டளையிட்டால் தான் மக்களுடைய பிரதிநிதிகள் என்ன காரியங்களை மக்களுக்காகச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்களோ அந்த காரியங்களை ப்ளாக் டெவெலப்மெண்டு மூலமாகச் செய்து கொள்ள முடியும் என்று சொல்ல விரும்புகிறேன். தாங்கள் ஏகோபித்து இந்தக் காரியத்தை நிறைவேற்ற வேண்டுமென்று குறிப்பிட்ட ஒரு தீர்மானத்தைச் செய்து, ப்ளாக் டெவெ லெப்மெண்டு ஆபிசர்களுக்கு அனுப்பினால், அவர்கள் அதை செய்யவில்லை என்றால் ஏன் செய்யவில்லை என்று கேட்கும் அதிகாரத்தை பஞ்சாயத்துத் தலைவருக்குக் கொடுத்திருப்பது நல்லது என்று சொல்ல ஆசைப்படுகி றேன்.

இரண்டாவதாக ஜனத்தொகை அடிப்படையில் கிராமங்களுக்கு, பஞ் சாயத்துகளுக்கு, பஞ்சாயத்து கவுன்சில்களுக்கு கல்வி, ரஸ்தா முதலிய வற்றுக்குப் பணம் கொடுக்கிறோம். குறிப்பாக செக்ஷன் 128-ல் ஜனத் தொகை விகிதாசாரத்தில் பர் காபிடா 250 நையே பைசா உச்ச வரம்பாகக் கொடுப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறோம். ஆனால் இந்த மாநிலத்தில் இருக் கக்கூடிய எல்லா மாவட்டங்களுக்கும் இதைச் சமமாகப் பிரித்து சம விகிதாசாரத்தில் பர் காபிடா கொடுப்பது சரியாகாது. அது நியாயமும் இல்லை. குறிப்பாக என்னுடைய தொகுதியைப் போன்ற மலைப் பிராந் தியத்தில் 'ஹில் அலவன்ஸ்' என்று ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆனால் சமவெளிப் பிரதேசத்தில் 'ஹில் அலவன்ஸ்' கொடுப்பதில்லை. மேலும் மலைப் பிரதேசத்தில் படிக்காதவர்கள் அதிகம் வருகிறார்கள். பர் காபிடாவாக 250 என்று செய்துவிட்டால் மலைப் பிரதேசத்தில் உள்ள வர்கள் ஆசிரியர்களுக்கு 'ஹில் அலவன்ஸ்' எதிலிருந்து கொடுப்பார்கள். இதிலிருந்தே கொடுக்கவேண்டுமானால் அதிக ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாது. அதனால் கல்வி அந்தப் பிராந்தியத்தில் பாதிக்க படலாம். பிற்போக்கான அந்தப் பிரதேசம் பாதிக்கப்படலாம்.

அதுபோலவே ரோடை எடுத்துக் கொண்டால் எல்லா மாவட்டத்திற்கும் சமமாக பர் காபிடா 40 நையே பைசே கொடுக்கப்படுகிறது. சமவெளிப் பிரதேசத்தில் ஒரு மைல் நீளம் ரோடு போடுவதற்கு ஆயிரம் ரூபாய் செலவாகும் என்றால் ஒரு மைல் நீளம் மலைப் பிரதேசத்தில் ரோடு போடுவதற்குப் பத்தாயிரம் ரூபாய் செலவாகிறது. 10 சத விகிதம் அங்கே அதிகச் செலவு ஆகும்போது எல்லா மாவட்டத்திற்கும் கொடுப்பது போல மலைப் பிராந்தியத்திற்கும் 40 பைசா கொடுப்பது சரியாகாது. மலைப் பிரதேசங்களுக்கு என்றால் அதிகத் தொகை ஒதுக்கவேண்டும். ஆகவே சமவெளிப் பிரதேசத்தை ஒரு பகுதியாகவும், மலைப் பிரதேச த்தை ஒரு பகுதியாகவும் பிரித்து சமவெளியை விட மலைப் பிராந்தியத் திற்கு எல்லா வகையிலும் அதிகமாக உதவி செய்ய வேண்டுமென்ப தாகக் கேட்டுக்கொள்கிறேன்.

22nd September 1958] [Sri J. Matha Gowder]

மேலும் இந்த வரிகளை எல்லாம் ரெவின்யூ டிபார்ட்மெண்டு மூலமாக வசூல் செய்யலாம் என்று இருக்கிறது. அப்படியென்றால் இந்த வேலை மணியக்காரரிடம்தான் வரப்போகிறது. ஏற்கனவேயே அவர்களுக்குச் சம்பளம் போதாது என்கிற அதிருப்தி இருந்து வருகிறது. இருக்கக்கூடிய வரிகளை வசூலிப்பதற்கு இன்றைக்கு அவர்களுக்கு நாம் கொடுக்கும் சம்பளம் போதாது என்கிற நிலைமையில் அவர்கள் மனச் சங்கடப் பட்டுக் கொண்டிருக்கும்போது பஞ்சாயத்து வரிகளையும் அவர்களைக் கொண்டே வசூல் செய்வதற்கு ஏற்பாடு செய்வது நியாயமல்ல. இதற்காக நாம் அவர்களுக்கு $6\frac{1}{4}$ சத விகிதம் கமிஷன் கொடுக்கலாம், அதாவது ரூபாய்க்கு 1 அணு கொடுக்கலாம் என்று சொல்லப்படுகிறது. இது மிகமிகக் குறைவான தொகை. சாதாரணமாக கிராமத்திலே தொழில் வரி போடும்போது 10 அணு விழும். இந்தப் பத்தணுவுக்கு 3 பைசா கமிஷன் அவர்களுக்குக் கிடைக்கிறது. இந்தக் கமிஷனைக் கொண்டு அவர்கள் வேலை செய்வார்கள் என்பது சரியல்ல. இவர்கள் மூலமாக வரியை வசூல் செய்யாவிட்டால் இதற்காக பில் கலெக்டர் போடப்போகிறோம். அதற்குத் தனிச் செலவு ஆகும். அந்தச் செலவு இந்த ஏற்பாட்டினுல் மிச்சப்படுவதால் இவர்களுக்கு ஆகும் செலவை அப்படியே இவர்களிடம் கொடுக்கவேண்டும் என்று நான் சொல்லாவிட்டாலும் 20 சத விகிதம் கமிஷனுவது இவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அப்போது தான் இவர்கள் ஒழுங்காக வரி வசூலைச் செய்வார்கள். இல்லாவிட்டால் என்ன ஆகும்.

இந்த வரியை வசூல் செய்து இவர்களிடத்தில் கொடுக்கவேண்டும் எனக் கலெக்டர் உத்தரவு போட்டுவிடுவார். இவர்கள் மனச் சங்கடப் பட்டுக்கொண்டே வசூல் செய்ய வேண்டும். ஒருகால் இவர்கள் அதிருப்தி அடைந்து வரி வசூலைச் செய்யாமல் மூன்று வருடங்கள் போட்டுவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்போது என் வரி வசூலைச் செய்யவில்லை என்று அவர் பேரில் நடவடிக்கை எடுக்க பஞ்சாயத்து தலைவருக்கோ, கவுன்சிலுக்கோ இதில் அதிகாரம் இருக்கிறதா? இல்லை. அவர்கள் பேரில் இவர்களால் நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது. அதற்கு மணியக்காரர் ஜவாப்தாரி அல்ல, யாரும் ஜவாப்தாரி அல்ல என்ற நிலைமை ஏற்பட்டு அந்த வரிப்பணத்தை ரைட் ஆப் பண்ணக்கூடிய நிலைமைதான் பஞ்சாயத்து கவுன்சிலுக்கு உண்டாகும். மணியக்காரர் சரியாக வசூல் செய்யவில்லையென்றுல் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள திட்டவட்டமாக இந்த மசோதாவில் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கவேண்டும். அவர்களுக்கு பொறுப்பை ஒப்படைக்க வேண்டியிருப்பதால் அவர்களது வருவாயையும் கொஞ்சம் உயர்த்தினுல் தான் திருப்தியோடு அவர்கள் வேலை செய்வார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் வீட்டு வரியைப் பற்றி ஒரு வார்த்தை. எனக்கு பஞ்சாயத்துத் தலைவராக 15 வருஷங்களுக்கு மேலிருந்து அனுபவம் உண்டு. வீட்டு வரி சரியாகவே வசூல் செய்ய முடிவதில்லை. கிராம பஞ்சாயத்துக்கள் சரியானபடி இல்லாமல் இருக்கலாம். குமாஸ்தா இல்லாமலிருக்கலாம் 75 சத விகிதம் வீட்டு வரி வசூலிக்கப்படுவது கிடையாது. போட்ட வரியை வசூல் செய்தால் அதிகப்படியாகத் தொகை சர்க்காரிடமிருந்து கிடைக்கும் என்கிற நிலைமையை இப்போது ஏற்படுத்தியிருப்பதைப் பாராட்டுகிறேன். இதனுல் ஊக்கமும், உற்சாகமும் கொண்டு அந்த வரிப்பணத்தை சரியாக வசூலித்துவிடுவதற்கு வாய்ப்பு உண்டாகிறது. அதோடு பஞ்சாயத்து ஏரியாவில் இருக்கும் தனியார் பள்ளிக்கு எம்.ஜி. கிராண்டு என்று கொடுத்து வந்த தொகை 15 சத விகிதத்தை நிறுத்திவிடப்போவதாகச் சொல்கிறார்கள். இதுவரையிலும் கிராமப் புறங்களில் இருந்து வந்திருக்கிற தனியார் பள்ளிக்கூடங்களினுல்தான் கல்வியின் தரம் ஓரளவு சீர் குலையாமல் இருந்து வந்திருக்கிறது என்பதை மறந்து விட முடியாது. ஜில்லா போர்டு பள்ளிகளானுலும் சரி, பஞ்சாயத்து பள்ளிக்கூடங்களின் பள்ளிகளானுலும் சரி, சரியான முறையில் நிர்வகிக்கப்படாமல் கல்வியின் தரம் பாதிக்கப்படுகிற நிலையில் இருந்திருக்கிறது என்பதை மறந்துவிட முடியாது. ஏன் தரம் குறைந்துவிட்டது என ஆராய்ச்சி செய்ய கலெக்டர் அந்த அந்த மாவட்ட

[Sri J. Matha Gowder] [22nd September 1958

மன்றங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட கமிட்டியை அமைத்திருக்கிறார் என்பதும் மறந்துவிடுவதற்கில்லை. ஆகவே மேலும் கல்வியின் தரம் குறைந்து போகக் கூடிய அளவில் தனியார் பள்ளியின் மானேஜ்மெண்டாருக்கும் உற்சாகம் குன்றும். காரியங்களை நாம் படிப்படியாகச் செய்து கொண்டே போவதில் அர்த்தமில்லை.
1-10 p.m. அதை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் தனியார் பள்ளிகள் நடத்தக்கூடாது என்று சட்டமியற்றலாமே தவிர, அவர்களுடைய உற்சாகத்தைக் குறைப்பது நியாயமல்ல. அப்பள்ளிகளின் உபாத்தியாயர்களுக்கு சர்க்காரே நேரிடையாகச் சம்பளம் கொடுப்பதனால் கொடுக்கலாமே தவிர, அவைகளுக்கு " கிராண்ட் " மறுப்பது கூடாது. தனியார் பள்ளிகளை நாம் எடுத்து நடத்துவதற்கும் மசோதாவில் வகை செய்யப்படவில்லை. தனியாருக்கு உதவும் சர்க்கார் மறுக்கிறார்கள். இந்த நிலையில் தனியார், பள்ளிகளை நடத்த மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இப்பள்ளிகளுக்கு சர்க்கார் உதவுவதற்கு மசோதாவில் வகை செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சரை கேட்டுக் கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

Sri P. S. K. LAKSHMIPATHI RAJ : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த பஞ்சாயத்து மசோதாவை ஆதரிக்கிறேன். இந்த மசோதா ஆங்கிலத்தில் இருப்பதால் என் போன்றவர்களுக்கு ஒரு கஷ்டம் இருக்கிறது. என் போன்றவர்கள் மசோதாவைப் படித்து அதிலுள்ள ஷரத்துக்களைப் புரிந்துகொண்டு விரிவாக எங்கள் கருத்துக்களை தெரிவிக்க முடியவில்லை. இப்போது, சட்டசபைக்கு வரும் மசோதாக்களில் பெரும்பான்மையானவை ஆங்கிலத்திலேயே வருகின்றன. சபையிலுள்ள வக்கீல்–மெம்பர்கள் அவைகளுக்கு பல திருத்தங்களைக் கொடுத்து, சரமாரியாகப் பேசுவதை நாம் பார்க்கிறோம். இந்த மசோதாவையும் இனிமேல் வரும் மசோதாக்களையும் தமிழில் மொழிபெயர்த்து கொடுத்தால் தான் என் போன்ற அங்கத்தினர்கள் அவைகளைப்பற்றி எங்களுக்குள்ள கருத்துக்களை விரிவாகத் தெரிவிக்க முடியும். இந்த மசோதாவை தமிழில் எல்லா அங்கத்தினர்களுக்கும் கொடுக்க வேண்டும். ஏனென்றால், இந்த மசோதா மிகவும் முக்கியமான மசோதா. இந்த மசோதா தமிழ்நாட்டிலுள்ள கிராம மக்களைப் பொறுத்தது. அவர்களுடைய வாழ்வைப் பொறுத்தது. எனவே இது தமிழிலேயே இருக்க வேண்டியது மிகவும் அவசியம். இதன் தமிழ் மொழி பெயர்ப்பு சீக்கிரத்தில் கனம் அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்படும் என்று கனம் அமைச்சர் சொன்னார். அது அனேகமாக கொஞ்சம் தாமதமாகத் தான் கிடைக்கும். இருந்தாலும், என்னுடைய அரைகுறை ஆங்கில அறிவைக் கொண்டு மசோதாவைப் படித்து அதிலுள்ள விஷயங்களைப் புரிந்துகொண்ட மட்டில், என்னுடைய சில கருத்துக்களை தெரிவிக்க முன்வந்திருக்கிறேன்.

DEPUTY SPEAKER : இதற்கே இரண்டு நிமிஷங்கள் எடுத்துக் கொண்டு விட்டீர்கள்.

Sri P. S. K. LAKSHMIPATHI RAJ : பஞ்சாயத்துக்களை திருத்தியமைக்க சர்க்கார் முன்வந்திருக்கிறார்கள் ; கிராமப்புறங்களிலுள்ளவர்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த அமைப்பை ஏற்படுத்த சர்க்கார் இப்போது முன் வந்திருக்கிறார்கள். இந்த மசோதா இன்னும் அதிகம் சீர்திருத்தங்கள் கொண்டுவந்திருந்தால் நன்றாக இருக்கும் என்று சில கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். புதிதாக அமைக்கப்படும் சபைகள் கிராமங்களில் எவ்வாறு இயங்குகின்றன என்று பார்த்து அதற்குப் பிறகு அவசியமான தகுந்த திருத்தங்களை சட்டத்தில் செய்யவேண்டும். கிராமங்களில் வசிக்கும் விவசாயிகள் கள்ளம் கபடம் அற்றவர்கள். அவர்கள் கல்மஷம் அல்லாதவர்கள். அவர்களுக்கு பிரசார தந்திரங்கள் தெரியாது. தேர்தல் காலங்களில், பஞ்சாயத்து தேர்தல் காலங்களில்கூட; சில கட்சியினர் கிராமங்களுக்குச் சென்று கிராம மக்கள் வேண்டாததை யெல்லாம் அவர்களிடம் சொல்லிவருகிறார்கள். கிராமங்களில் கட்சிப் பூசல்கள் ஏற்படுவதற்கு இடமில்லாத வகையில் பஞ்சாயத்துக்களை அமைக்க வேண்டும்.

22nd September 1958] [Sri P. S. K. Lakshmipathi Raj]

எங்கள் பிராந்தியத்தில் ஒரு பஞ்சாயத்துத் தேர்தல் நடந்தது. அத் தேர்தலின்போது உறுப்பினர்கள் 3 பேர் காணமல் போய்விட்டார்கள். எங்கெங்கெல்லாமோ தேடியும் அவர்கள் காணப்படவில்லை. தேர்தல் நடப் பதற்கு 25 நிமிஷங்களுக்கு முன்பு அவர்கள் ஸ்தலத்திற்குக் கொண்டு வரப்பட்டனர். அதுவரையில் அவர்கள் நீலகிரி மலையில் இருந்தனராம். அந்த தேர்தலில் நடந்த விநோதம் ராஜ்யத்தில் வேறு எங்கேயும் நடந் திருக்காது. வோட்டுப் பெட்டியை அதிகாரி திறந்துப்பார்த்தபோது, ஒரு பெட்டியில் 4 அங்குல கனத்திற்கு மை இருந்தது. வாக்குச் சீட்டுகள் அனைத்தும் மையில் நனைந்திருந்தன. வோட்டுச் சீட்டில் எழுதப்பட்டி ருந்தது எதுவும் தெரியவில்லை. அந்த நிலையில், சம்பந்தப்பட்ட அபேட் சகர் வெற்றிபெற்றுவிட்டதாக அதிகாரி தீர்ப்புச் செய்துவிட்டார். இது சம்பந்தமாக இப்போது கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. ஆகவே இது சம்பந்தமாக வேறு எதுவும் பேச நான் விரும்பவில்லை. கிராமங்களில் நிலைமை இப்படி இருக்கிறது.

முனிசிபாலிடிகளிலுள்ள எக்ஸிக்யூடிவ் ஆபீசர்களுக்கு நிறைய அதி காரங்கள் இருக்கின்றன. முனிசிபல் சேர்மன் தாம் நினைத்ததை உடனே செய்யமுடியாது. தம் யோசனையை நிர்வாக அதிகாரிகள் மூலமாகத்தான் பூர்த்திசெய்துகொள்ள முடியும். ஜில்லா போர்டிலோ, தலைவருக்கு நிர் வாக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. வர வர தலைவர்கள் மீது நம்பிக்கையில்லாத காரணத்தாலோ என்னமோ, நிர்வாக அதிகாரிகளிடம் அந்த அதிகாரங்கள் பூராவும் ஒப்படைக்கப்படுகின்றன. நிர்வாக அதிகாரி யோக்கியமானவராக இருந்தால் அந்தப் பகுதியில் நல்ல காரியங்களைச் செய்ய முடியும். இந்த சந்தர்ப்பத்தில் சில விஷயங்களை பகிரங்கமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. யோக்கியமானவர்களாக இல்லாத நிர்வாக அதிகாரி கள், ஏழை எளியவர்கள் கொடுத்த 30,000, 40,000 ரூபாய் பணத்தை, வீதிகளுக்கு மண்ணுபோட்டோம் என்று சொல்லி மண்ணுக்கிவிடுவார்கள்.

இந்த மசோதா புதியது. நாம் இயற்றும் சட்டம் கிராமங்களில் நல்ல சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்று விரும்புகிறோம். சில கிராமங்க ளில் பஞ்சாயத்துக்கள் இன்னும் அமைக்கப்படவில்லை. நாம் இயற்றும் சட்டம் நல்ல பலனளிக்கவேண்டுமென்று விரும்புகிறோம். சட்டம் வந்த வுடன், ஆரம்பத்தில் சில கஷ்டங்கள் இருக்கத்தான் செய்யும். ஆனால், இந்தப் பஞ்சாயத்து அமைப்பு நல்லவிதமாகச் செயல்பட்டு, மக்களும் இவ்வமைப்பில் நல்ல அனுபவமும் தேர்ச்சியும் பெற்றுவிட்டால், அப் போது, நமது நாடு வெளி நாட்டினரால் பாராட்டப்படத்தக்க நிலையில் இருக்கும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. இந்த அமைப்பை சிலர் குறைகூறக்கூடும். ஆனால் இந்த நல்ல அமைப்பை ஏற்படுத்த எந்த அரசாங்கமும் சீக்கிரம் துணியவில்லை. உலகிலேயே இல்லாத சட்டத்தைக் கொண்டு வர காங்கிரஸ் அரசாங்கம் துணிச்சலாக முன் வந்திருக்கிறது. எழுதப் படிக்கத் தெரியாத கோடானுகோடி மக்கள் மத்தியில் இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வந்து ஜனநாயகத்தைப் பேணி வளர்க்க முன்வந்துள்ள இந்த அரசாங்கத்தைப் பாராட்டுகிறோம். தங்களுக்கு தேர்தல் காலத் தில் மக்களுடைய வோட்டுக்கள் வேண்டும் என்ற நோக்கத்துடன் காங்கி ரஸ் அரசாங்கத்தார் இத்தகைய சட்டங்களைக் கொண்டுவரவில்லை. ஜன நாயகத்தைப் பேணி வளர்ப்பதற்காகவும், எல்லா மக்களுக்கும் ஜனநாய கத்தில் உரிய பங்கைக்கொடுப்பதற்காகவும்தான் காங்கிரஸ் அரசாங்கத்தார் இத்தகைய மசோதாக்களைக் கொண்டுவருகிறார்கள். மற்ற நாடுகளில், எத் தனையோ நிபுணர்களைக் கொண்டு ஆராய்ந்த பிறகுதான் இத்தகைய சட்டங்களைக் கொண்டுவருகிறார்கள். "நவநாகரீகமாக" இருக்கிறோம் என்று சொல்லும் நாடுகளில்கூட சர்வ ஜன வாக்குரிமை இன்னும் இல்லை. அந்நாடுகளில் படித்தவர்களுக்கு மட்டும்தான் வாக்குரிமை கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆட்சி முறையைப் பற்றி நன்கு தெரிந்துகொள்வதற்கும், கிராம சமூகத்தினருக்கு சேவை செய்வதற்கும் கிராம மக்களுக்கு இந்த மசோதா வாய்ப்பளிக்கிறது. பஞ்சாயத்துக்கள் அவைகளுடைய செலவுகளுக் குத் திண்டாடாதபடி சர்க்கார் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். கிராம ராஜ்யம் ஏற்பட வேண்டுமென்று நமது காந்தியடிகள் விரும்பினர். கிராமங்களில் நீர்ப்

பாசன வசதிகளும், சுகாதார வசதிகளும் ஏற்படுவதற்கு உதவும் வகையில் பஞ்சாயத்துக்களை அமைக்க வேண்டும். இந்த மசோதா சட்டமானல், ஆரம்பத்தில் சில கிராமங்கள் இருக்கும் என்றாலும், கிராம மக்கள் அவைகளைப் பொருட்படுத்தாமல் சட்டத்தை வரவேற்று, புதிய பஞ்சாயத்துக்களை நன்ருக இயங்கச் செய்வதில் சர்க்காருடன் ஒத்துழைத்து சட்டத்தை வெற்றியுறச் செய்வார்கள் என்றும் அவ்வாறு செய்து நம் நாட்டிற்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுப்பார்கள் என்றும் நம்புகிறேன். கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு போதிய அதிகாரங்கள் தரும் முறையில் இந்த மசோதாவைத் திருத்தவேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

1-20 a.m. SRI P. S. ELLAPPAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நாம் எல்லோரும் பஞ்சாயத்து ராஜ்யத்தைப் பற்றி பேசுகிறோம். சென்ற ஆண்டிலேயே இந்த பஞ்சாயத்து போர்ட் விஷயத்தைப் பற்றியும், காந்தி என்ன சொன்ஞர், விேேபாஜி என்ன சொன்ஞர் என்றும் அவர்கள் ஒருவிதம் சொல்ல நாம் வேறு விதமாக சட்டம் செய்கிறோமே என்றும் சொன்னேன். அவர்கள் நினைப்பதற்கு எதிராகஅல்லவா கிராம ராஜ்யம் நடக்கிறது என்றும் சொன்னேன். அப்பொழுது சபாநயகர் அவர்கள் என்னை உட்காரச் சொன்ஞர், நிதியமைச்சர் அர்கள் தொடர்ந்து பேசலாம் என்று சொன்ஞர்கள். எனக்கு சட்டத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. கிராமங்களில் நடக்கும் விஷயங்களைச் சொல்கிறேன். அச்சிரப்பாக்கம் பிர்க்காவில், பின்னைப்பூண்டி என்ற கிராமத்தில் 250-க்கு மேல் ஹரிஜனங்கள் இருக்கிருர்கள். அந்த இடத்திலுள்ள பஞ்சாயத்தில் அவர்களுக்கு ஒரு சீட்கூட கிடையாது. ஏன் ஐயா எங்களுக்கு சீட் இல்லை யென்று கேட்டால், நீங்கள் "ஊர்வார்டில் இருக்கிறீர்கள், சேரி வார்டில் இல்லையே. நீங்கள் சேரிவார்டில் இல்லாதால் உங்களுக்கு தனி சீட் கிடையாது" என்று சொல்லிவிட்டார்கள். கிராமப் பஞ்சாயத்திலேயே எங்களுக்கு இடமில்லை என்ருல் வேறு எங்கே எங்களுக்கு இடம் கிடைக்கப் போகிறது என்று சண்டை போட்டார்கள். அது பற்றி அதிகாரிகளுக்கு எழுதியனுப்பினேம். சில கிராமங்களில் தேர்தல் நடப்பதே தெரிவதில்லை. கிராம முன்ஸீப் அதைப்பற்றி தண்டோரா போடுவதில்லை. வசலே என்ற கிராமத்தில் தேர்தல் நாள் அன்று அதுபற்றி ஒருவர் கிராம முனிசீபை ஏதோ கேட்கப் போனபோது, "எங்கள் அம்மாவிற்கு இன்று தெவசம், நாளை வரச் சொல்" என்று சொன்ஞர் இப்படித்தான் நடக்கிறது, தேர்தல். தீண்டாமை ஒழிப்பிற்காக, 79,70,000 ரூபாய் செலவிடப்படுகிறதாக கணக்கு இருக்கிறது. தீண்டாமை ஒழிகிறதா, இல்லை பணம் ஒழிகிறதா என்று தெரியவில்லை. ஆகவே, நான் சொல்வது, இந்த 79 லட்சம் ரூபாயை கிராம பஞ்சாயத்துக்களுக்கு கொடுத்து அவர்கள் மூலம் சீர்திருத்தம் செய்தால்தான் இந்த ஹரிஜன சமுதாயம் முன்னேற முடியும். ஆக, பஞ்சாயத்தைப் பற்றி எல்லோரும் சொல்லி விட்டார்கள். நானும் அதைப்பற்றி பேசுகிறேன் என்று பேசி பயன் இல்லை. முக்கியமான விஷயங்கள்தான் மேலுக்கு வர வேண்டும். மற்ற எல்லா விஷயங்களும் பஞ்சாயத்தாலேயே தீர்க்கப்பட வேண்டும். ஆக, ஹரிஜன முன்னேற்றம், அவர்களின் கல்வி, சகலமும் பஞ்சாயத்து போர்ட் மூலந்தான் நடக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*SRI G. GOMATHISANKARA DIKSHITAR ; கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது சர்க்கார் இந்த பஞ்சாயத்து பில்லைக் கொண்டு வந்ததற்காக நான் இரண்டொரு வார்த்தைகள் சொல்லி அரசாங்கத்தை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் பேசுவதற்கு இடம் கொடுத்ததற்காக உங்களுக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். கிராம ராஜ்யம் என்ற அடிப்படையிலே இந்த பஞ்சாயத்து பில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நாம் எதற்காக சுயராஜ்யத்தைப் பெற்ருேம் என்ருல் அது கிராம மக்கள் சுதந்தரமாக, தங்கள் வாழ்க்கைத்தரம் உயருவதற்காகவேதான். முன்பு பஞ்சாயத்து எப்படி அதன் லட்சியத்தை நிறைவேற்ற தவறியது என்பதை உணர்ந்து அதைச் சீர்திருத்தி கிராம ராஜ்யமாக ஆக்க வேண்டுமென்ற எண்ணத்தின் பேரில்

22nd September 1958] [Sri G. Gomathisankara Dikshitar]

தான், இம்மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதில் சில குறைகள் இருக்கலாம். பாதுகாப்பிற்காக சில க்ளாஸ்கள் போடப்பட்டிருக்கலாம். ஆனாலும், கிராம முன்னேற்றத்திற்காக, கிராம மக்கள் என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் அவர்கள் செய்து கிராமங்களை முன்னேற்றம் அடையச் செய்ய இம்மசோதாவில் அதிகமான வசதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. கிராமப் பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து கௌன்ஸில்களும் என்னென்ன கடமைகளைச் செய்ய வேண்டுமோ அவைகளை செய்வதோடு இன்னும் மிக முக்கியமான ஒரு விஷயத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். மஹாத்மாஜி, நம் நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வு அடைய வேண்டும், தார்மீக வாழ்க்கை நிலைநிறுத்தப்படவேண்டுமென்பதற்காக மதுவிலக்கு இயக்கத்தை நடத்தினார்கள். அதை இந்த பஞ்சாயத்து அலுவல்களில் ஒரு முக்கியமான அலுவலாக சேர்க்கவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அதோடு பஞ்சாயத்து கௌன்சிலில் அங்கம் வகிக்கும் சட்டசபை பிரதிநிதிக்கும் வோட்டு அளிக்கக் கூடிய உரிமையும் அளிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து முறையானது, நம் நாட்டில் தொன்றுதொட்டு நம் நாட்டின் கலாசார சின்னமாக விளக்கக்கூடிய முறையாகும். பிரிட்டிஷ் அரசாங்க காலத்தில் பஞ்சாயத்து முறை துர்விநியோகம் செய்யப்பட்டு வந்தது. பஞ்சாயத்தின் உண்மையான லட்சியங்களையும், கடமைகளையும் விளக்கிக் காட்டுவதற்காகவே இந்த பில்லை கொண்டு வந்திருக்கிறோம். இதற்கு முன்னால் பஞ்சாயத்து ஆக்ட் நிறைவேற்றிய காலத்தில், அது விளைத்த தீமைகளை எல்லாம் நன்கு உணர்ந்து இந்த புதிய மசோதா மூலம், கிராமங்களில் இருக்கக் கூடிய கட்சி மனப்பான்மையையும், ஜாதி மனப்பான்மையையும் இன்னும் இதர வித்தியாசங்களையும் களையத் தகுந்த முறையில் இம்மசோதா நன்கு வேலை செய்யும் என்று நான் எதிர்பாக்கிறேன். கிராமத்தில் எல்லா விதமான முன்னேற்றங்களையும் நடத்துவதற்குரிய அதிகாரங்கள் பஞ்சாயத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அளிக்கப்படாமல் இருந்தால் அவைகளையும் சேர்த்து அமைத்து அதன் மூலம் கிராம முன்னேற்றத்திற்கான காரியங்களை செய்வதற்கு இந்த மசோதா உதவியாக இருக்கச் செய்வதோடு, நடைமுறையில் இது செயல்படும்போது இதை நன்கு கவனித்து இதன் லட்சியத்தை கிராம மக்கள் பெறச் செய்வதற்கு ஆவன செய்யவேண்டுமென்று நான் நமது அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து கௌன்ஸிலிற்குள் உட்பட்டிருக்கிற எல்லா பஞ்சாயத்துகளும் சமநிலையில் பொருளாதார வசதி செய்து கொடுப்பதற்காக வேண்டி ஒரு பஞ்சாயத்து கௌன்ஸில் என்று ஒன்று அமைத்து எல்லா கிராமங்களுக்கும் முன்னேற்றகரமான பாதையில் செல்ல வழி வகுக்கப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் இந்த பஞ்சாயத்து கௌன்ஸில் அமைக்கப்பட்டிருக்கிறது என்று உணர்ந்து கொண்டு, இம்மசோதா மக்களுக்கு நல்ல முறையில் பயன் அளிக்கும் வகையில் பொது மக்களும் சேவை உணர்ச்சியோடு இம்மசோதா நல்ல முறையில் செயல்பட ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு இதைப் பற்றி பேசுவதற்கு வாய்ப்பு அளித்த கனம் உதவி சபாநாயகர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 9 a.m. to-morrow.

The House then adjourned.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

Reports and other papers.

* 43. *The Madras Appropriation (No. 5) Bill*, 1958. (L.A. Bill No. 31 of 1958).

* 44. *The Madras Appropriation (No. 4) Bill*, 1958. (L.A. Bill No. 32 of 1958).